பக்கங்கள் - 24

# புதுவிதி

PUTHU VITHI

அறிமுகவிலை 20/=



உங்களின் வரையறைகளின்
சாளரத்துக்குப் பின்னால்
நீங்கள் என்னைத் தள்ள முடியாது.
இதுவரை காலமும்,
நிரந்தரமாக்கப்பட்ட சகதிக்குள் கிடந்து
வெளியே எடுத்து வரப்பட்ட
ஒரு சிறிய கல்லைப் போன்று
நான்
என்னைக் கண்டெடுத்துள்ளேன்.

○ சிவரமணி

புதுமை : 01 | 06 ஓகஸ்ட் 2016 | விதி : 08



## கஞ்சா கடத்தல்

**திகைப்பூட்டும் உத்திகள்**



## பாழ்வெளி



# போராளிகளைக் கொல்லும் புற்றுநோய் ஊசி

தடுப்பிலிருந்த முன்னாள்
போராளிகளில்
பலர் புற்றுநோயால்
மரணமடைவது
தொடர்கதையாகிறது.
இதற்கு காரணம்
பறவைக்காய்ச்சல்
தடுப்பூசி என்ற பெயரில்
ஏற்றப்பட்ட மருந்தா?

(விரிவான அலசல் உள்ளே)

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

தொடர்கதை



# ஆறாவடு



ஈழநாதம் பேப்பரில் நேற்றைய சண்டையைப் பற்றி எதுவும் எழுதப்பட்டிருக்கவில்லை. சந்திரிக்காவிற்கு ஏதோ அரசியல் நெருக்கு வாரம் என்று தலைப்புச் செய்தியில் போட்டிருந்தார்கள். வந்த கோபத்திற்கு "பூழல் பேப்பர் நடத்துறாங்கள்" என்று அதனைச் சுருட்டி வீசினேன். தோல்வியுற்ற சண்டைகளைப் பற்றி இயக்கம் செய்திகளில் சொல்வதில்லை. எனக்கு படபடப்பு அதிகரித்தபடியிருந்தது. மூளைக்குள் விரிந்த யாழ்ப்பாண வரைபடத்தில் பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் ரவுண் வரை ஒரு கோட்டைக் கீறினேன்.

சயந்தன்

08

பத்து ஆமிக்கு ஒரு புலி என்ற கணக்கு எங்களிடம் இருந்தது. அந்தக் கணக்கு குழம்பத் தொடங்கியது. ஆமிக்காரர்களும் அவர்களது டாங்கிகளும் வந்து கொண்டேயிருந்தன. ஒரு கட்டத்தில் அவர்கள் எங்களைப் பிரித்தபடி உள் நுழைந்தார்கள் என்னைத்தாண்டி எனக்குப் பின்னால் டாங்கியொன்று நிலத்தை உழுது நகர்ந்ததை நான் கண்டபோது என் வயிறு ஒரு தடவை சில்லிட்டுக் குளிர்ந்தது. வயிற்றைப் பொத்திக் கொண்டு முழங்கால்களை ஊன்றிச் சரிந்தேன். கைவிரல் இடுக்குகளிற்குள்ளால் இரத்தம் கொள கொளத்தது. செத்துப்போய் விடுவேனோ? என்று நினைத்தேன். எனக்கு முதலுதவிச் சிகிச்சை நடந்த போது மயங்கிப் போனேன்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வார்ட்டுகள் இயக்கத்தின் காயக்காரர்களால் நிரம்பியிருந்தன. நான் வெறும் மேலுடனும் சாரத்துடனும் படுத்திருந்தேன். என் வயிற்றைச் சுற்றி வெண்ணிறத் துணிகளால் கட்டுப் போட்டிருந்தார்கள். அவற்றில் இரத்தம் ஒரு சிறு புள்ளியாக ஊறியிருந்தது. இரவு முழுவதும் நான் தூசணத்தால் கத்திக் கொண்டிருந்ததாக அருகிலிருந்தவன் சொன்னான். நேர்ஸ் ஊசி போட வந்தபோது "எடி சந்திரிக்கா வேசை.. உனக்கு இருக்கடி ஒரு நாளைக்கு" என்று திட்டியிருந்தேனாம். அவவைத் திரும்பப் பார்த்தால் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

ரோசா பஸ் அரியாலைக்குள் நெரிசலில் சிக்கிக்கொண்டது. சனங்கள் விலத்தித் தருவதாய்த் தெரியவில்லை. அண்ணை? கொஞ்சம் விலத்துங்கோ காயக்காரரைக் கொண்டுபோறம் என்று பஸ்ஸை நகர்த்ததுவதற்கு முயற்சித்தார்கள்.

ஈழநாதம் பேப்பரில் நேற்றைய சண்டையைப் பற்றி எதுவும் எழுதப்பட்டிருக்கவில்லை. சந்திரிக்காவிற்கு ஏதோ அரசியல் நெருக்கு வாரம் என்று தலைப்புச் செய்தியில் போட்டிருந்தார்கள். வந்த கோபத்திற்கு "பூழல் பேப்பர் நடத்துறாங்கள்" என்று அதனைச் சுருட்டி வீசினேன். தோல்வியுற்ற சண்டைகளைப் பற்றி இயக்கம் செய்திகளில் சொல்வதில்லை. எனக்கு படபடப்பு அதிகரித்தபடியிருந்தது. மூளைக்குள் விரிந்த யாழ்ப்பாண வரைபடத்தில் பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் ரவுண் வரை ஒரு கோட்டைக் கீறினேன். யாழ்ப்பாணம் முழுவதும் அந்தக் கோட்டுக்குள் அடங்கியிருந்தது.

அடுத்த நாள் காலை வெளிச்சம் பரவ முன்னராகவே எல்லாக் காயக்காரரையும் வாகனங்களில் ஏற்றினார்கள். நாங்கள் ஐம்பது பேர் ரோசா மினிபஸ்சில் ஏறினோம். ஆஸ்பத்திரி வீதியில் சனசந்தடியைத் துப்பரவாகக் காணவில்லை. "சனத்தை இரவே எழும்பிப் போகச் சொன்னாச்சு" என்றார்கள் அழைத்துப் போனவர்கள்.

"எங்கை?"

"சாவகசச்சேரிக்கு அங்காலை, வடமராட்சி தென்மராட்சி அல்லது வன்னிக்குப் போகச் சொல்லியிருக்கு"

"இப்ப நாங்கள் எங்கே போறம்" என்றேன் நான். "சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மாத்தச் சொல்லி இருக்கு" என் வயிற்றுக்குள் இன்னமும் சில்லிடுவதை நான் உணர்ந்தேன். "சண்டைக்கு என்ன நடந்தது?"

"லைன் எல்லாத்தையும் உடைச்சுக் கொண்டு அவன் வந்திட்டான். சண்டை கோப்பாயில நடக்குது. உடனடியாச் சனங்களை வெளியேறச் சொல்லி இரவே சொல்லியாச்சு"

எனக்கு என்னவோ போல இருந்தது. பார்வையை வெளியே எறிந்தேன். இழுத்துப் பூட்டிய கடைகளும் ஆட்களற்ற தெருவும் கண்களில் நகர்ந்து கொண்டிருந்தன. ஒன்றிரண்டு நாய்கள் வாலை ஆட்டியபடி எங்களை ஏறிட்டன.

"சனங்களை வெளியேறிப் போகச் சொன்னதால, இயக்கம் கெமிக்கல் ஏதோ அடிக்கப்போகுது எண்டு நினைக்கிறன்" என்றான் மணிக்கட்டோடு கை மொட்டையாய் இருந்தவன். சுற்றப்பட்டிருந்த வெள்ளைத் துணியில் இரத்தம் கசிந்திருந்தது. அப்படிச் சொல்லும் போது அவன் கண்களில் வெளிச்சமிருந்தது.

ரோசா பஸ் அரியாலைக்குள் நெரிசலில் சிக்கிக் கொண்டது. சனங்கள் விலத்தித் தருவதாய்த் தெரியவில்லை. "அண்ணை? கொஞ்சம் விலத்துங்கோ காயக்காரரைக் கொண்டுபோறம்" என்று பஸ்ஸை நகர்த்துவதற்கு முயற்சித்தார்கள்.

"நீங்களும் எங்களோடைதான் வரோணுமே? மேலாலை அவன் கண்டானெண்டால் நாங்களும் சிதறித்தான் சாக வேணும். ஒண்டில் எங்களை அனுப்பிப்போட்டு நீங்கள் கடைசியா வந்திருக்க வேணும். இல்லாட்டி நாங்கள் போக முதலே ஓடித்தப்பியிருக்க வேணும்" என்று நடுத்தர வயதுகளில் ஒருவர் கோபமாய்ச் சொன்னார். எனக்கும் இயக்கத்தில் கோபம் கோபமாய் வந்தது. பிறகு நான்தானே இயக்கம் என்ற நினைப்பு வந்தது. பிறகு சனங்களில் கோபம் வந்தது.

'ஐயாயிரம் பேர் இயக்கத்துக்கு அவசரமாகத் தேவை' என்று ஆறு மாதங்களாக எத்தனை இடங்களில் பிரசாரம், எத்தனை இடத்திலே ஒளிவீச்சு, எத்தனை இடத்திலே தெருக்கூத்து என்று கத்தினோம். "ஐயாயிரம் பேர் வந்தால் இரண்டாயிரத்திலே தமிழீழம்" என்று கத்திய போது சனம் பல்லை இளிச்சுக் கொண்டு திரிந்துவிட்டு இப்பொழுது குத்திக்குடையுது என்றால் என்ன செய்வது.

இருந்தாற்போல எனக்கு அம்மாவின் நினைப்பு வந்தது. அவளுக்குத் தெரிந்த எவராவது சாவகச்சேரியிலேயோ கொடி காமத்திலேயோ இருக்கிறார்களா? என்று யோசித்தேன். அப்படி எவரும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆனால் அம்மாவைப் பற்றி நான் அதிகம் யோசிக்கக் கூடாது. இந்திய இராணுவ காலத்தில் அண்ணையின் இரண்டு பிள்ளைகளும் நல்லூர்க் கோயிலில் அகதிகளோடு அகதிகளாக இருந்தார்களாம். குடாநாட்டிற்குள் அவர்களைப் பற்றி அண்ணி கவலைப்பட்ட போது அண்ணை சொன்னாராம் "தமிழீழத்தில் மற்றப் பிள்ளைகளுக்கு நடக்கிறது தான் என்ரை பிள்ளைகளுக்கும் நடக்கும்" என்று. தமிழீழத்தில் மற்ற அம்மாக்களுக்கு நடப்பதுதான் எனது அம்மாவிற்கும் நடக்கும் என்று நான் நினைத்தேன். என்ரை அம்மாவிற்கு கொஞ்சம் வருத்தம்.

இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு சாவகச்சேரி ஆஸ்பத்தியில் எங்களைச் சேர்த்தார்கள். சின்னக் காயக்காரர்களை உடனேயே துண்டு வெட்டி அனுப்பினார்கள். மணியந்தோட்டத்திலிருந்த எனது முகாமினை எழுதுமட்டுவாளில் பெரும் ஏக்கர் கணக்கான தென்னந் தோட்டமொன்றிற்கு மாற்றியிருந்தார்கள்.

அடுத்த நாட்களில் நானும் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறினேன். இயக்கம் தன்னை வன்னிக்கு நகர்த்தத் தொடங்கியிருந்தது. சனங்களிலும் நிறையப் பேர் வன்னிக்குப் போனார்கள். அப்பிடிப் போனவர்களில் சிலர் அங்கு இருக்கப் பிடிக்காமல் திரும்பி வந்தார்கள். அன்ரன் பாலசிங்கத்திற்கும் அண்ணைக்கும் நடந்த சந்திப்பொன்றில் "சனங்களை வன்னிக்கு போகச் சொல்லி வற்புறுத்த வேண்டாம்" என்று பாலசிங்கம் சொன்னாராம்.

யாழ்ப்பாணத்தில் இன்னமும் சண்டை நடந்து கொண்டிருந்தது. அங்கிருந்து வெளியேறாத சனங்களையும் இயக்கம் வெளியேற்றிக் கொண்டிருந்தது. இயக்கத்தின் கண்களில் படாத ஒன்றிரண்டு குடும்பங்கள் யாழ்ப்பாணத்திலேயே தங்கிவிட்டன. அவர்களில் தம்பு இராமலிங்கமும் ஒருவர். அவர் முன்னர் மன்னார் உதவி அரசாங்க அதிபராயிருந்தவர். அதனாலேயோ என்னவோ தனக்கு ஆமியிடமிருந்து பிரச்சனைவராது என அவர் நம்பியிருக்கலாம்.



மாவீரர் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் வெற்றிக் கொடியேற்ற ரத்வத்தை விரும்புகிறார் என்று நான் நினைத்தேன். அப்படி நடந்துவிடக் கூடாது என்று விரும்பினேன். நல்ல வேளையாக அதற்கு ஐந்து நாட்கள் பிந்தி சிங்கக் கொடியை ரத்வத்தை ஏற்றினார். சிங்கக் கொடிக்குப் பக்கத்தில் நந்திக்கொடியொன்றை தம்பு இராமலிங்கம் ஏற்றினார். நான்கு மாதம் பிந்தி தென்மராட்சியிலிருந்தும் வடமராட்சியிலிருந்தும் இயக்கம் வெளியேறியது. சனங்கள் திரும்பவும் யாழ்ப்பாணம் போனார்கள்.
அதற்கு மூன்று மாதம் பிந்தி தம்பு இராமலிங்கத்தை வீட்டில் வைத்து இயக்கம் சுட்டது. அதற்கு ஒரு மாதம் பிந்தி செம்மணி செக்பொயின்ரில் கிருசாந்தியின் சைக்கிளை இராணுவம் மறித்தது.

(வலிகள் இன்னும்...)

# கறிவேப்பிலைக் காட்டுக்குள்ளே...

சிக்மலிங்கம் றெஜினோல்ட்



“கறிவேப்பிலைக் காட்டுக்கு வாறீயா?” என்று கேட்டாள் அமலா.

“கறிவேப்பிலைக் காடா? அப்பிடி யென்றால், அது வாசனையுள்ள காடாக இருக்குமே!” என்றேன் நான்.

“ம், வாசம் வரும். காடென்ன, அந்தக் காட்டுக்குப் பக்கத்திலிருக்கும் கடற்கரையிலும் வாசம் வரும்” என்றாள் அவள்.

அவள் கண்கள் காடாக விரிந்தன. என் மனம் காட்டைத் தேடியது.

வானம் நிலத்தில் தொடுமளவுக்கு விரிந்திருக்கும் கிராஞ்சியின் நீண்ட வெளி கடந்து, குண்டும் குழியுமான தெருக்களைக் கடந்து, வேரவில், கிராஞ்சிப் பக்கமெல்லாம் குடைவிரித்து நிலத்தை ஆட்சி செய்யும் ஆலவிருட்சங்களைக் கடந்து, புனித அன்னம்மாள் தேவாலய வளாகத்தில் பட்டிப்பூ பூத்திருக்கும் மேடுகளைக் கடந்து, அந்த மேடுகளில் நடனமாடும் வேப்ப மரத்தோப்புகளைக் கடந்து, கறிவேப்பிலைக்காட்டுக்குப் போனேன்.

காடென்றால், ஊருக்குத் தூரமாக இருப்பதாக எண்ணிவிட வேண்டாம்.

வீடுகளுக்குப் பக்கத்தில், வளவுகளுக்கு அருகில், தேவாலயத்திற்குக்கிட்டவாக, கடற்கரையோரத்தில், பாடசாலைக்குப் போகும் வழியில், கடைத்தெருவிற்குச் செல்லும் ஒழுங்கையோரத்தில்... இப்படி எங்கும் விரிந்திருக்கிறது.

நீங்கள் நடந்து செல்லும் போது தொட்டாலோ உங்கள் உடல் பட்டாலோ போதும் வாசனை உங்களைத் தீண்டிவிடும். கறிவேப்பிலை வாசம். ஊரே கறிவேப்பிலை வாசத்தில் தான் துயில்கிறது. எழுகிறது. நனைகிறது. காய்கிறது.

ஆனால், தங்களுடைய ஊர் இப்படி வாசனையில் மூழ்கிக்கிடப்பதாக யாருக்கும் ஒரு எண்ணமேயில்லை. காடு தன்பாட்டில் எப்படி இருக்கிறதோ அப்படியே அங்கிருப்போருக்கும் கறிவேப்பிலைக் காட்டைப் பற்றிய கரிசனையில்லாமல் தம்பாட்டில் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு கடல் இருக்கிறது. அதில்தான் அவர்களுடைய வாழ்க்கை. தவிர்த்தால், அன்னம்மாள் விளையாட்டுக் கழகம், யாகப்பர் விளையாட்டுக் கழகம் என்ற இரண்டு கழகங்கள் உள்ளன. இதில் காற்பந்தாடுவார்கள். காற்பந்தாட்டம் வலைப்பாட்டுக்கு உயிர். இன்னொன்று புனித அன்னம்மாள் தேவாலயம். இவைதான் வலைப்பாட்டின் உலகம்.



பாரை, சூரை, தொண்டன், பாலை, காலை, வாளை, ஒட்டி, ஓரா, விளை, கயல், திரளி, கொய், அதள், சீலா, திருக்கை, செங்கண்ணி, கருங்கண்ணி, நகரை, துள்ளுமண்டை, கலவாய், சிறையால், கும்பிளா என்று எண்ணற்ற மீன்கள் கடலின் விளைச்சல்.

அதைவிட, இறால், கணவாய், நண்டு என்ற பெருங்கொடை வேறு.

கோடையில் நிலத்தடி மீன் பாடு என்றால் மாரியில் நீர்மேல் மீன்பாடு..

கரையோரக் கடலில் சிலவகை மீன்கள் என்றால் ஆழக்கடலில் வேறு சில வகையினம். ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ருசி. போகத்துக்குப் போகம் ருசியும் வேறுபடும்.

மாரியில் மேய்ச்சல் தறைக்கு (கடலில்) வரும் மீன்கள்... என்னவென்று அறிந்து அதுக்குத் தோதாகப் பாடு வளைக்கும் தொழில் ஒரு கலையே. கலையறிந்த வலைஞர்கள்...

குளிர்ப்போகத்துக்கு வளிச்சல் என்றால்... கோடையில் களங்கட்டியில் பட்டியடைப்பு.

ஒரு காலம் வேலணை, துறையூர், செட்டிபுலம் போன்ற பகுதிகளில் இருந்து சீசனுக்குத் தொழில் செய்ய வரும் ஆட்கள் பறி போடுவர். ஈச்சந்தடி, புல்லாந்தித் தடிகளில் இழைக்கிற பறிகள் அந்த நாளில் நல்ல புழக்கம்.

பறி மீன் கெடாது. கெடாத மீனுக்குச் சுவையும் கூட. இங்கே கடலடி நிலம் வெண் பெரு மணற் பரப்பையும், இடையிடையே அறுகு தாழைகளையும் அதிகமாகக் கொண்டது. இதனால் இந்தக் கடல் நிலத்தடி ஊர்வனங்களின் புகலிடமாக விளங்குகிறது. இதில் நண்டு இனங்கள், (நீலக்கால் நண்டு, பெரு நண்டு) மிக அதிகம்.

மீனினங்கள் என்றால், கோடையில் நிலத்தடி மீன் இனங்களான விளை மீன், திரளி, கலவாய், ஓரா, வெள்ளோரா போன்றவையும், மேல் மீன்களான (அதாவது நீரின் மேல் மட்டத்தில் வாழ்பவை) புறங்கடல் வரத்து மீன்களான கும்பிளா (mackerel), அறுக்குளா, கொடிவாளை, சீலா, பாரை இனங்களும் அதிகமாகக் காணப்படும்.

கரையோரங்களை அண்டிய பகுதிகளில் கயல்மீன், சிறையா, கருக்கு மணலை போன்ற இனங்கள் அதிகம். மாரிகாலங்களில் இந்த மீனினங்களுடன் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள ஆழ்கடல் மீனினங்களின் வருகையும் அதிகமாக இருக்கும். சேதி, கூரல், காலை, கட்டா, பாலைமீன் (பெருமீன்) என விசேட மீன்களின் வருகை அதிகமாக உள்வரும்.

நிலத்தடி ஊர்வனவான நண்டு இனங்களின் இருப்பு அதிகமாகக் காணப்படுவது போல் கோடை, மாரி என எல்லாக் காலங்களிலும் கணவாய் இனங்கள் கரையை அண்டிய பகுதிகளில் பெருவாரியாக இருக்கும். இந்தக் கணவாய் வளம், கல்முனைக் கரையோரங்களிலிருந்து நாச்சிக் குடா வரை அதிகமாக உண்டு.

கடற் தாவரமான தாமரை இனங்களும் கல்முனையிலிருந்து வலைப்பாடுவரை அதிக விளைச்சலைக் கொண்டிருக்கிறது.

வெண்மணல் பரப்பின் கீழ்க் கடலில் நீலக்கால் நண்டு சினைபிடிச்சு விளைஞ்சிருக்கும். நீலக்கால் நண்டுக்கு கொழும்பில் பெரிய கிராக்கி. கொழும்பு விலை சிலவேளை கடற்கரையிலும் போவதுண்டு.

வலைப்பாட்டில் இன்னொரு விசேஷம் கடல் அட்டை. 1970 களில் கடல் அட்டைக்கு வலைப்பாடு ஒரு கோட்டைதான். எந்த நேரமும் அட்டை பிடிப்பும் முத்துக்குளியலுமாக அதுவொரு அற்புதமான காலம். காசு கொழித்த நாட்கள் என்று இப்பவும்

(08 ஆம் பக்கம் பார்க்க...)

# போராளிகளைக் கொல்லும் புற்றுநோய் ஊசி



அரவான்

"முன்னாள் போராளி புற்று நோயால் சாவு"

இந்தத் தலைப்புடன் கூடிய செய்திகளை அண்மைக்காலமாக ஊடகங்களில் காணமுடிகின்றது. ஆரம்பத்தில் இத்தகைய புற்றுநோய் மரணங்களை யாரும் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. போருக்குப் பின்னர் வடக்கு மாகாணம் புற்று நோய்த் தேசமாக உருவெடுக்கத் தொடங்கியிருந்தது. இதற்கு இரசாயன உரமிடப்பட்ட உணவு வகைகளும், கந்தகப் புகையின் சுவாசிப்புமே பிரதான காரணங்களாகச் சொல்லப்பட்டன. முன்னரெல்லாம் ஊரில் எவரேனும் ஒருவருக்குத்தான் - அதுவும் எப்போதாவது இருந்துவிட்டு - 'கான்ஸர் வந்திட்டுதாம்' என்ற பேச்சடிபடும். கொஞ்ச நாளைக்கு அதுதான் அந்த ஊரின் பிரதான பேசு பொருள். யார் எப்போது சந்தித்துக் கொண்டாலும், தேவாரம் படிக்க முன்னர் 'திருச்சிற்றம்பலம்' சொல்வது போல, புற்றுநோய் வந்தவரைப் பற்றிய விசாரிப்புகளுடன் தான் உரையாடலை ஆரம்பிப்பார்கள். புற்றுநோய் வந்தவரின் வீடு வருத்தம் பார்க்கப் போவோரால் திணறும். உற்றம், சுற்றம் எல்லாம் சேர்ந்து உலகத்து ஆஸ்பத்திரிகளுக்கெல்லாம் அவரை அழைத்துப் போய் வைத்தியம் பார்த்து விட்டுத்தான் ஓய்வார்கள். இப்படி



ஒருகாலத்தில் மிகப்பெரிய புதினமாக இருந்த 'புற்றுநோய்' இப்போது, கடையில் கன்டோஸ் வாங்குவதைப் போல சர்வசாதாரணமாகி விட்டது. குறைந்த பட்சம் ஒவ்வொரு ஊரிலும் ஒரு பத்துப் பேருக்காவது புற்றுநோய் என்கிற அளவுக்கு அதன் பரவுகை எல்லைமீறிக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட சூழலில்தான், முன்னாள் போராளிகளின் புற்று நோய் மரணங்களும் ஆரம்பத் தில் எந்தவித சலனங்களையும் உண்டுபண்ணவில்லை. ஆனால் தொடர்ச்சியாக இத்தகைய புற்றுநோய் மரணங்கள் புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளின் வாழ்வில் நுழையத் தொடங்கியபோது, "இதில் ஏதோ விசயமிருக்கிறது" என்று சிலர் முணு முணுக்கத் தொடங்கினார்கள். ஆனால் இந்த முணு முணுப்புகள் வெடித்துக் கிளம்பியது தமிழினியின் மரணத்தின் பின்னர்தான்.

புலிகளின் மகளிர் அணியின் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழினி, இறுதிப் போரின் பின்னர் படையினரால் பிடிக்கப்பட்டு/ சரணடைந்து புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார். புலம்பெயர் தமிழர் ஒருவரை மணம்முடித்த தமிழினி, சிவகாமியாக இயல்பு வாழ்வுக்குள் நுழைய முயன்ற போது புற்றுநோய் குறுக்கிட்டது. அதன் பின்னர் வழமை போல சிகிச்சையே வாழ்வானது.

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டியதாகிறது. இலங்கையில் புற்றுநோய் சிகிச்சைக்கென விசேட சிகிச்சை மையங்கள் இருக்கின்றன. வடக்கில், யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பளையில் கூட இத்தகைய புற்றுநோய் விடுதி நவீன இயந்திர வசதிகளோடு தொழிற்படுகின்றது. என்றாலும் புற்றுநோய்ச் சிகிச்சை மையங்களுக்கெல்லாம் தாய்ச் சிகிச்சை மையமாக இருப்பது மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைதான். இயலாக் கட்டத்தில் பெரும்பாலான புற்றுநோயாளிகள் மஹரகமவிலேயே தமக்கான சிகிச்சையைப் பெற வேண்டியுள்ளது. "புற்றுநோய் முன்னர் தான் மாற்ற முடியாத உயிர்குடிக்கும் நோய். இப்போது மருத்துவம் வளர்ந்துவிட்டது. புற்றுநோயைக் குணப்படுத்தலாம்" என மருத்துவர்கள் பலரும் கூறுகின் றனர். ஆனால் இலங்கையில் மஹரகமவில் சிகிச்சை பெற்றாலும் கூட புற்று நோயைப் பூரணமாகக் குணமாக்க முடியாத நிலை இருப்பதாகவே பலரும் கூறுகின்றனர். புற்றுநோய் ஏற்பட்டு சிகிச்சை பெற்றவர்களில் 70 வீதமானோர் அதிக காலம் உயிரோடு இருப்பதில்லை. இந்தியாவில் உள்ள யுவராஜ் சிங், புற்று நோயால் மீண்டு திரும்பவும் கிரிக்கெட் விளையாடும் அளவுக்கு மருத்துவத் துறையில் புற்றுநோய்க்கு எதிரான சிகிச்சை முறை வளர்ந்துவிட்டது தான். ஆனால் அது ஏன் இலங்கைக்கு வரவில்லை என்பது விடை தெரியாக் கேள்விகளில் ஒன்று.

தமிழினியும் சிகிச்சை பயனின்றி பெரும்பாலான புற்றுநோயாளர்கள் சந்தித்த அதே துயர முடிவையே சந்தித்தார். அவரது மரணம் முன்னாள் போராளிகளின் சாவுகள் குறித்த சந்தேகத்தைக் கிளறிவிட்டது. அதன் பின்னர் கரைச்சி பிரதேச சபையில் பணிபுரிந்த, ஒரு வயதுக் குழந்தையின் தாயாரான இன்னொரு முன்னாள் பெண் போராளியும், அதனைத் தொடர்ந்து ஆசிரியையாக பணிபுரியும் மற்றொரு பெண் போராளியும் தமிழினியைப் போல, புற்றுநோயால் தாக்குண்டு இறந்து போக புற்றுநோய் மரணங்கள் பற்றிய கதையாடல்கள் பெருமளவில் எழுந்தன. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக அமைந்து விட்டது இலங்கை அரசின் நல்லிணக்கச் செயலணியில் முன்னாள் பெண்போராளி ஒருவர் அளித்த வாக்கு மூலம்.

"முன்பு 100 கிலோ தூக்கி எத்தினயோ கிலோமீற்றர் ஓடுற எனக்கு ஒரு பொருளைக்கூட தூக்க முடியவில்லை. கண் பார்வை குறைகின்றது. எங்களுக்கு ஏதோ நடந்திருக்கிறது என்பது மட்டும் விளங்குகின்றது. பறவைக் காய்ச்சல் வராமல் இருக்கிறதுக்கு என்று சொல்லி ஒரு ஊசியைக் கொண்டுவந்து போட்டவங்கள். ஊசி ஏற்றிய அன்று மாலையே ஒரு போராளி இறந்துவிட்டார். இதை நாங்கள் முதல்ல பெரிசா எடுக்கேலை. இப்ப யோசிக்கத்தான் பயமாயிருக்கு"

இதுதான் அவரின் வாக்குமூலம்.

அவர் இப்படிச் சொல்வதற்கு முன்னர் வேறுபல காரணிகள் முன்னாள் போராளிகளின் புற்றுநோய் சாவுகளுக்கு முன்வைக்கப்பட்டிருந்தன.

"சண்டையில பாவிக்கிற வெடிபொருள் காத்தில கரைஞ்சு சுவாசத்தோட கலக்கிறதால, போரில ஈடுபடுற ஆக்களுக்கு 'கான்ஸர்' வர சந்தர்ப்பம் கூட. புலிகளின்ர முக்கியமான பல தளபதிகள் இப்பிடி வெடிபொருளை சுவாசிச்சதால கான்ஸர் வந்து செத்தவை. பால்ராஜ், ராயு எண்டு கனபேர்" என வெடிபொருள்கள் காற்றின் மூலம் சுவாசப்பரப்புக்குள் ஊடுருவி நடத்திய தாக்குதலால் தான் முன்னாள் போராளிகளுக்கு புற்றுநோய் மரணங்கள் அதிகளவில் சம்பவிக்கின்றன என ஒரு சாரார் சொன்னார்கள்.

"இன்னொரு சாராரோ தடுப்பில வைச்சிருக்கேக்க ஆமிக்காரர் கண்ட படி அடிச்சு கண்டல் காயங்கள் வந்திருக்கும். அந்தக் கண்டல் காயங்களால தான் இப்பிடி அறம்புறமா கான்ஸர் வருகுது போல" என்று சொன்னார்கள்.

இந்த இரு வாதங்களும் புறமொதுக்கக் கூடியவை அல்ல. ஏனெனில் வெடிபொருள்களின் நச்சுத்தன்மை, அடிகாயங்களின் கண்டல்கள் என்பன புற்றுநோயை வெற்றிலை வைத்து அழைக்கும் அளவுக்கு வல்லமையுடையவை. ஆனால் எவருமே இப்படி திட்டமிட்ட வகையில்-வலிந்து- புற்று நோய்க் கலங்கள் முன்னாள் போராளிகளின் உடல்களில் செலுத்தப்பட்டிருக்கலாம் என்பது குறித்து யோசிக்கவில்லை.

"ஊசி மூலம் புற்றுநோயை உண்டாக்கலாமா?" என்ற கேள்விக்கு மருத்துவத் துறையினர் சொல்லும் பதில் "ஆம். சாத்தியமுண்டு" என்பதுதான். புற்றுநோய்க் கலங்கள் ஊசி மூலம் சுகதேகி ஒருவரின் உடலில் ஏற்றப்பட்டால் உடனடிச் சாவுகள் நிகழாமல், சில வருடங்களின் பின்னர் அவர்கள் உடலில் புற்றுநோய்க் கலங்கள் பரவி, சத்தமில்லாத கொலையைச் செய்யலாம் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். சத்தமின்றி, ரத்தமின்றி, தடயங்கள் இன்றிய கொலையைச் செய்ய இப்படியான காரியம் நிகழ்ந்திருக்கலாம். இரண்டாம் உலகப் போரின் போது, ஹிட்லரின் படைகளால் சிறைப்பிடிக்கப்பட்ட யூதர்களை தடயமின்றி கொலை செய்ய விஷவாயுக் கொலைகள் நடந்தன. அதன் பின்னர் பிரமாண்டமான அமிலத் தொட்டிகள் கட்டப்பட்டு, அதற்குள் யூதர்களை குளிக்கச் சொல்லி இன்னொரு வகையான தடயமில்லாக் கொலைப் பொறி முறையையும் ஹிட்லரின் படைகள் அரங்கேற்றின. அதே பாணியில் தடயமில்லாக் கொலைகளைச் செய்ய மெல்லக் கொல்லும் ஆயுதமான புற்றுநோய் ஊசிகளை இலங்கை அரசும் இராணுவமும் பயன்படுத்தியிருக்கக் கூடும்.

தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற புற்றுநோய் மரணங்கள் முன்னாள் போராளிகளிடம் பெரும் அச்சத்தை உண்டாக்கி இருக்கின்றன. மற்றவர்களின் வாழ்வுக்காக தம்முடைய இளமைக் காலத்தை போருடனும், ஆயுதங்களுடனும் தொலைத்துவிட்டு, பெரும் சித்திரவதையின் பின்னர் உயிர் மீண்டு, இனியாவது வாழ்வை மகிழ்ச்சியாக கழிப்போம் என்று நினைத்த அவர்களின் ஆசையில், புற்று நோய் மரணங்கள் கல்லெறிந்து கலங்க வைக்கின்றன.

இந்தப் புற்று நோய் மரணங்களில் இன்னொரு விடயமும் முக்கியமாக அவதானிக்கப்பட்டுள்ளது. புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் இதுவரை 155 க்கும் அதிகமானோர் புற்று நோயால் இறந்துள்ளனர் எனச் சொல்லப்படுகின்றது. இப்படி இறந்தவர்களில் பெண்களே அதிகம். "கூர்வாளின் நிழலில்" என்ற தன்னுடைய சுயசரிதையில் "இலங்கை இராணுவத்தினர் தன்னை துன்புறுத்தவில்லை" என்று தமிழினி குறிப்பிட்டிருந்தார். சிலவேளைகளில் பெண்போராளிகளை உடல்ரீதியாக சித்திரவதை செய்யாமல், இப்படியான மெல்லக் கொல்லும் ஊசிகளை ஏற்றியிருப்பார்களோ என்றும் முன்னாள் போராளிகள் அச்சம் வெளியிடுகின்றனர். இந்த அச்சத்தின் வெளிப்பாடாக "முன்னாள் போராளிகளை" உள்ளடக்கிய கட்சி ஒன்று, புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்ட சகலரையும் மருத்துவப் பரிசோதனை செய்யுமாறு கோரியுள்ளது. இன்றைய சூழலில் முன்னாள் போராளிகளிடம் உண்டாகியுள்ள அச்சத்தைக் களையவும், சில சமயங்களில் புற்று நோய் ஏற்பட்டிருந்தால் அதனை ஆரம்பத்திலேயே இனம்கண்டு, சிகிச்சை பெறவும் இப்படியான மருத்துவப் பரிசோத னைகள் அவசியம்.

இப்படிப்பட்ட கையறுநிலையில் "அரசோ அல்லது படையினரோ இப்படி ஊசி மூலம் புற்றுநோய்க் கலங்களை ஏற்றியதாகச் சொல்வது பொய்யாக இருக்க வேண்டும்" என பிரார்த்திப்பதைத் தவிர வேறுவழி ஏதும் இப்போதைக்கு இல்லை.

புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

## சேறு பூசிய யாத்திரை

கடந்தவாரம் இலங்கை முழுதும் மஹிந்த அணியினரின் பாதயாத்திரை பற்றியே பலரும் பேசிக்கொண்டனர். எப்படி இதற்கு முந்தைய வாரத்தில் "கபாலி" படம் பற்றி ஆதரவும் எதிர்ப்புமாக தமிழ் பேசும் "நல்லுலகம்" கதைத்து இன்புற்றதோ அதற்குச் சற்றும் சளைக்காத வகையில் மஹிந்தவின் பாதயாத்திரைக் கதையாடல்களும் இருந்தன. நல்லாட்சி அரசின் அமைச்சர்களும், பங்காளிகளும் பாதயாத்திரையைக் கிண்டல் பண்ணுவதும், அதற்கு பாதயாத்திரைக்காரர்கள் பதில் கிண்டல் செய்வதுமாக அந்த நான்கு நாட்களும், 'பம்பலாகவே' கழிந்தன. ஆனால் பாதயாத்திரை முடிந்த பின்னரும் என்ன நோக்கத்துக்காக அது நடந்தேறியது என்பதை மஹிந்த அணியினர் தெளிவாகச் சொல்லவில்லை.

"நல்லாட்சி அரசின் அராஜகத்தை கண்டித்தே பாதயாத்திரை" என்று சொல்லப்பட்டதே தவிர அந்த அராஜகங்கள் எவையென கடைசிவரையும் சொல்லப்படவேயில்லை. ஊழல் மற்றும் கொலைக் குற்றச்சாட்டுக்களில் மஹிந்த தரப்பைச் சேர்ந்தவர்கள் விசாரிக்கப்படுவதும், சிறைக்குள் தள்ளப்படுவதும், சிறைசென்ற சில மணித்தியாலங்களுக்குள்ளேயே பிணையில் வருவதும் தான் "நல்லாட்சியின் அராஜகம்" என கூட்டு எதிர்க்கட்சியினர் எண்ணுகின்றனர் போலும்.

ஏனெனில் நல்லாட்சிக் காலத்தில், தேர்தல்மேடை வாக்குறுதிகள் பறக்கவிடப்பட்டு, மக்களின் வாழ்வாதரச் சுமையை அதிகரிக்கும் செயற்பாடுகள் தொடர்கின்றன. விலைவாசி கிடுகிடுவென ஏறிக்கொண்டே போகின்றது. சிலவேளைகளில் நல்லாட்சி அரசு கனவேதும் கண்டுவிட்டு, சில அத்தியாவசியப் பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கும். அடுத்தநாள் முழிப்பு வந்தவுடன், மீண்டும் பழையவிலைக்கே அந்தப்பொருளுக்கு விலை மீள்நிர்ணயம் செய்யப்படும். இறங்குவதும், ஏறுவதுமாக பொருள்களின் விலைகள் தள்ளாட, மக்களின் வாழ்வோ அல்லாடிக் கொண்டிருக்கிறது. இப்படியான நிலையில் மக்களின் வாழ்வாதாரச் சுமையைக் குறைக்க, அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் தொனிப்பொருளோடு மஹிந்தவின் கூட்டு எதிரணியினர் பாதயாத்திரையை நடத்தி இருந்தால், அது பெருவெற்றி பெற்றிருக்கும்.அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதோடு, தமக்கான மக்கள் ஆதரவையும் இதன் மூலம் அவர்கள் பெற்றிருக்க முடியும்.

ஆனால் அதைவிட்டுவிட்டு, ரணிலையும், மைத்திரியையும் வசைபாடுவதை மட்டுமே பாதயாத்திரையில் கலந்து கொண்டவர்கள் செய்தார்கள். வருகின்ற வழியில் அரச கட்டடங்கள் சிலவற்றுக்கு கல்லெறிந்தார்கள். சுதந்திரக் கட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு, "மைத்திரியின் அப்பக் கடை" என்று கிண்டலடித்தார்கள். மைத்திரியையும், ரணிலையும் வசைபாடுவதும், கிண்டலடிப்பதும் தான் பாதயாத்திரையின் பிரதான நோக்கமெனில் அதை கொழும்பில், குளிரூட்டப்பட்ட அறைக்குள் இருந்தவாறே மஹிந்த அண்ட் கோ செய்திருக்கலாமே.

மஹிந்த தரப்பை விடவும் நல்லாட்சித்தரப்பு இந்த விடயத்தில் கொஞ்சம் கெட்டித்தனமாகவே நடந்தது. நீதிமன்றத் தடைகள் மூலம் பாதயாத்திரையின் பல பாதைகள் அடைக்கப்பட்டன. மஹிந்தவால் பாதிக்கப்பட்டவர்களை பாதயாத்திரை வரும் வழிகளில் நிறுத்தி எதிர்ப்புக் குரல்களை எழ வைத்தனர். சில வருடங்களுக்கு முன்னர் வெலிவேரியாவில் குடிதண்ணீருக்காக போராடிய மக்கள் மீது மஹிந்த அரசு நடத்திய துப்பாக்கி சூட்டில் அப்பாவி மக்கள் மூவர் கொலையுண்டிருந்தனர். அவாறு கொலையுண்டவர்களின் உறவினர்கள் பாதயாத்திரை வரும்வழியில் குடிதண்ணீர் நிலையங்களை அமைத்து மஹிந்த கும்பலுக்கு மறைமுகமாகச் "செருப்படி" கொடுத்தனர். ஆகமொத்தத்தில் எந்த நோக்கமுமின்றி குளிக்கப்போய் சேறுபூசிக் கொண்ட கதையாகி விட்டது பாதயாத்திரைக் காரர்களின் பாடு.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# கஞ்சா கடத்தல்

## திகைப்பூட்டும் உத்திகள்

○ தெகிடியான்

அவர்களுடைய படகு திரும்பிவிட்டது. அந்தப் பாரம் அவர்களிடமிருந்து அவனுக்கு இடம் மாற்றப்பட்டு விட்டது. உள்ளூர் பயம் உப்புக் காற்றுடன் மிதந்துவந்து தோலினை ஊடுருவி நெஞ்சுக்குள் இறங்கியது. கடற்கரையில் புதரின் ஓரமாக கிடத்தியிருந்த சைக்கிள் கும்மிருட்டினுள் கரைந்து காணாமல் போயிருந்தது. எட்டுக்கிலோ பாரமும் தோளில் கிடந்து அழுத்தினாலும் உரம் ஏறிய அவனுடைய தோளில் பயமே அதிகமாக கிடந்து அழுத்தியது. பையினுள் இருப்பது கரகரக்கின்றதா அல்லது இதயத்தின் மீது இரத்தம் மோதி பதற்றமடையும் ஓசையா என்ற சந்தேகத்துடன் நடந்து சைக்கிள் கிடந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். பொதியை கீழே ஒரு குழந்தையை வளர்த்துவதைப் போல கடற்கரை மணலில் வளர்த்தினான். சைக்கிளை நிமிர்த்தி ஸ்ராண்டில் நிறுத்தினான்.

பையில் இருந்த தலையில் கொழுவும் ரோச்சை உயிர்ப்பித்து கூட நின்றவனிடம் இவன் கொடுக்க, அவனும் அணிந்து கொண்டான். அதன் மஞ்சள் ஒளி ஒரு குட்டிச் சூரியனைப் போல் அவனுக்கு முன்னால் இருந்த இருட்டை விலக்கி வழியைத் திறந்து விட்டது. ஒளி கொடுத்தபடி அவன் பின்னால் வர, இவன் பொதியை சைக்கிளில் ஏற்றி கட்டினான். முடிந்தவரை பதற்றமில்லாமல் அந்த இரவினைப் போல கனத்த மௌனத்தைத் தாங்கிக் கொண்டு சைக்கிள் பெடலில் காலை வைத்து புதர் காடுகளைத் தாண்டி- அலைச் சத்தத்திற்கு அப்பால்- நகர்ந்து வந்தான்.

உடுத்துறை வீதியில் இருந்து இயக்கச்சிப் பக்கமாக அந்தச் சைக்கிள் பயணித்துக் கொண்டிருந்தது. போரின் பின்னர் கனத்த மௌனத்தையும் தனிமையையும் பெற்று விட்ட வீதிகள் அவை. ஒரு காலத்தில் காயம்பட்ட போராளிகளையும் தப்பிச் செல்லும் விடுதலை வேங்கைகளையும் சுமந்து சென்ற கடல் இன்று கேரள கஞ்சா தோட்டங்களில் இருந்து தருவிக்கப்பட்ட கஞ்சாப் பொதிகளை சுமந்து திரும்புகின்றது. போதையில் தள்ளாடுகின்றன ஈழக்கரையொதுங்கும் அலைகள். அந்தக் கடலைப் போலவே அவனுடைய மனதும் தழும்பலுடன் இருந்தது. வீதி ஓடியது. பின்னால் வருபவனின் தலையில் ஒளிர்ந்து கொண்டிருந்த டோர்ச்சின் லேசான வெப்பத்தில் தலை வியர்த்தது. இயக்கச்சி அல்லது புதுக்காட்டுச் சந்திக்கு சென்று விட்டால் போதும். வருகின்ற பஸ்ஸில் அந்தப் பொதியைக் கொடுத்து விட்டால் சில ஆயிரங்கள் கிடைக்கும்.

பாதையின் இரு மருங்கிலும் வளர்ந்து நின்ற சிறுகாடுகள் இருளில் பெரும் அரக்க உருவங்கள் போதையில் புரண்டு கிடப்பது போல் தெரிந்தன. சைக்கிளை மிதித்தபடியிருந்தான். திடீரென பாதையின் எதிரில் டோர்ச் வெளிச்சத்தில் இரண்டு உருவங்கள் வெளிப்பட்டு அவனுடைய சைக்கிள் 'காண்டிலை' பலமாகப் பற்றி நிறுத்தின. அவனுள் ஏதோ உறைந்து போய் நின்றது.

மேற்படி சம்பவம், கதைகளில் நடப்பதோ சினிமாக் காட்சியோ இல்லை. வடக்கு தமிழர் பிரதேசங்களில் ஏதோ ஒரு மூலையில் உள்ள கடற் புறத்தெருக்களில் தினம் தினம் நடக்கும் கள்ளன் - பொலிஸ் விளையாட்டுத்தான்.

### புதிய கஞ்சாக் களமுனை

இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட கஞ்சாப் போதை பொருள்கள் உடுத்துறை கரையோரமாக படகில் இறக்கப்பட்டு அங்கிருந்து நேரடியாக கொழும்பு பஸ்களில் ஏற்றும் புது விதமான உத்தியை கடத்தல் கும்பல்கள் வடிவமைத்து வருகின்றன. குடாநாட்டு கரையோரமாக வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் இறக்கப்பட்டு அங்கிருந்து பின்னர் கொழும்புக்கு கடத்தும் முயற்சிகள் அண்மைய காலங்களில் பொலிசாராலும் மதுவரி திணைக்கள அதிகாரிகளாலும் முறியடிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேரடியாக இயக்கச்சி ஊடாக கொழும்புக்கு கஞ்சாவைக் கடத்தும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. வடமராட்சி கிழக்கு பகுதியில் இருந்து கொழும்புக்கு இயக்கச்சியில் வைத்து பஸ்ஸில் ஏற்றப்பட்டு கடத்தப்படவிருந்த கஞ்சா மதுவரி திணைக்கள அதிகாரிகளால் கடந்த வாரம் உடுத்துறையில் வைத்து வெற்றிகரமாக கைப்பற்றப்பட்டுள்ளது.

இத்தகைய இரவு நேரக்கடத்தலுக்கு துவிச்சக்கர வண்டிகளே பயன்படுத்தப்படுகின்றன. நள்ளிரவு நேரம், சனசந்தடியற்ற வீடு, காட்டுப் பகுதியூடாக சைக்கிள்களில் கஞ்சா கடத்தப்படுமென்று எவரும் எதிர்பார்க்கமாட்டார்கள். எனவே இப்படி எவரும் எதிர்பாராத இடங்களில் கடத்தல் செய்வது இலகுவானது.

(08 ஆம் பக்கம் பார்க்க...)

# அலம்பல் ஆச்சி

செல்வி



கதிர்காமத்துக்கு கடைசி காலத்திலை கிழடு கட்டையளா வந்தாப் பிறகு பாதயாத்திரை போறது, செய்த பாவங்கள் எல்லாம் தீர்ந்து நிம்மதியா கைலாசத்துக்கு போய்ச் சேரோணுமெண்டு தான். ஆச்சி பெரிசா ஒரு பாவமும் செய்யேல்லையப்பன்.. சும்மா அங்கனேக்கை எப்பன், எப்பன் பிழையள் செய்திருப்பன் தானே. பிழையள் செய்யாமை ஆர் இருக்கினை இங்கை? சொல்லுங்கோ பாப்பம். ஆனா நான் ஒரு பெரிய வரலாற்றுப் பிழைவிட்டுட்டன்.

எங்கடை பெடியள் நாட்டுக்காகப் போராட நான் என்ரை பேரப்பிள்ளையளையும், பிள்ளையளையும் ஒரு மாதிரி வெளியாலை அனுப்பிப் போட்டன்.. அப்ப பெருமையாக் கிடந்தது.. என்ரை பிள்ளையள் அங்காலை போய் கீய் பாதுகாப்பா இருக்கெண்டு.. ஆனா இப்பதான் விளங்குதெடாப்பன். எங்கடை குஞ்சுகள் படிக்கிற வயசிலை எங்களுக்காண்டி துவக்கு தூக்க நாங்கள் குண்டி மண்ணைத் தட்டிப் போட்டு வலுகவனமா இருந்தனாங்கள். சந்தி சந்தியா வெடிச்சு சிதற சாப்பிட்டுக் கொண்டு இருந்திருக்கிறன். அந்தப் பாவம் தீராது.. பரம்பரை பரம்பரையா அடக்குமுறை எண்ட வடிவத்திலை எங்களைத் தொடரத்தான் போகுது. ஆனா பாருங்கோ என்ரை பெடியள் வெளி நாட்டிலை இருந்தாலும் நாட்டிலை நல்லபற்று இப்பவும். அங்கை நிண்டு கொண்டு கொடி தூக்கி தெருவிலை நடந்திருக்கிறாங்கள். புத்தகங்களும் எழுதியிருக்கிறாங்கள். யாழ்ப்பாணச் சண்டைக்குள்ளை சுப்பசொனிக் வரப்போகுதாம் எண்டேக்கு முதலே ஆக்கள் அங்காலை போட்டாங்கள். ஆனாவலு கெட்டிக்காரங்கள். முள்ளி வாய்க்காலை பற்றி கவிதையெல்லாம் எழுதினவங்களாம். உந்த கொம்பியூட்டரிலை எல்லாம் படம் கிடக்குதாம்.. நான் சும்மா பகிடியா கேட்டன் "என்னடா தம்பி கொம்பியூட்டராலை நாடு பிடிக்கல்லாமோ" எண்டு.. சரி அதை விடுங்கோ.. நான் என்ரை கதையை அலம்பிக் கொண்டிருக்கிறன். என்னப்பன் நடந்து களைச்சுப் போட்டியளே? நானே இத்தினை வயசாப்போயும் எவ்வளா உசாரா நடக்கிறன் பாருங்கோடாப்பனவை.

புதினம் கேட்டனியள் தானே.. எங்கடை மாத்தையா பாதயாத்திரையாம். இந்த உலகம் முழுதும் பாதயாத்திரை போனாக்கூட அவற்றை பாவம் தீராது... ஆனா நல்லாட்சி விண்ணன் தான். கடும் ஆள் தான். பாத்தா ஒரு பேக்கினாந்தி போல இருக்கிறார். ஆனா மாற்றத்தையே மாத்திப் போட்டு நல்லாட்சியைப் பிடிச்ச ஆளெல்லே அவர். அதுசரி அவர் மகிந்த ஏன் இப்ப நடக்கிறாராம்? நல்லாட்சி பாதயாத்திரைக்காரரில் இரண்டு பேரை போட்டுத்தள்ள, அதை வைச்சு திருப்பியும் மகாராசா ஆகலாம் எண்டு பாத்தாரோ? இதிலை பகிடி என்னண்டா.. புலியை அழிச்ச எண்டு சொல்லாட்டி ஆளையாள் அடிச்சுப் போட்டு பழியை புலியின்ரை தலையிலை கட்டலாம். பாதயாத்திரையிலை மாத்தையா புலியை அழிச்சன் எண்டு அவசரப்பட்டு அறிக்கைவிட்டதுக்கு நல்லா கவலைப்படுறார் போலை. ஆனா ஆள் என்னவோ திட்டத்தோடைதான் வெளிக்கிட்டிருக்கிறார்.. பாப்பம்.. பாப்பம்.. மலிஞ்சா சந்தைக்கு வரும் தானே.

அதுசரி.. உந்த கம்பஸ் பிரச்சினையை அப்பிடியே அமத்திப் போட்டினை போலை கிடக்கிது. என்னவாம் முடிவு. உந்த சிங்களப் பிள்ளையள் கம்பசுக்கு போடேக்கை மூண்டாம் தெரிவாக் கூட யாழ்ப்பாண கம்பசை போடேல்லையாம் எண்டு கேள்விப்பட்டன். உண்மையே? முந்தியெண்டா தமிழ்ப் பயத்திலை போடாமை விட்டிருக்குங்கள். இப்ப அதுகள் பயத்திலை போடாமை விட்டிருக்குங்கள் என்று புளுக வேண்டாம் நீங்கள். உங்கை நடக்கிற படிப்பின்ரை விசித்திரத்தை கேள்விப்பட்டு போடாமை விட்டிருக்குங்கள். என்னெண்டாலும் திட்டம் போட்டு நடக்கிற மாணவர் உள் வாங்கலை தடுக்கிற வழியைப் பாக்கோணும். உதை உப்பிடியேவிட்டா யாழ்ப்பாணக் கம்பசிலையும் புத்தம் சரணம் கச்சாமியைகேக்க வேண்டியதுதான். பிறகு இஞ்சை இருந்து கதிர்காமத்துக்கை பாதயாத்திரை போறபோலை.. அங்கையிருந்து இஞ்சை பாதயாத்திரைகள் நடக்கும்.. உதையெல்லாம் தடுக்கோணுமெண்டா.. படிக்கோணும்.. படியுங்கோ பிள்ளையள்...

# மலிவுவிலையில் பாலியல் குற்றங்கள்...!

ஹஸ்பர் ஏ ஹலீம்
(சமூகப்பணிப் பீடம், இலங்கை சமூக சேவைக் கல்லூரி, ராஜகிரிய)



இன்று உலகளாவிய ரீதியில் ஒட்டு மொத்த மனித குலத்திற்கும் மாபெரும் சவாலாக மாறியிருப்பது பாலியல் குற்றங்களாகும். இந்தக் குற்றச் செயலானது சிறுவர் தொடங்கி பெரியோர் வரை அனைவரையும் ஆட்டிப் படைக்கும் ஒன்றாக இன்று மாறியிருக்கின்றது.

இந்த நிலைமையானது எமது நாடான இலங்கையையும் விட்டு வைத்துவிடவில்லை. தற்போதெல்லாம் நாட்டில் எங்காவது ஒரு நாளைக்கு பாலியல் குற்றம் தொடர்பான செய்தியைக் கேட்காமலிருக்க முடிவதில்லை. சில செய்திகள் சாதாரண மனிதனால் சிந்தித்தே பார்க்க முடியாதளவுக்கு காணப்படுகின்றன.

இத்தகைய குற்றங்கள் அடுக்கடுக்காக அரங்கேறிக் கொண்டிருந்தும், அவற்றைக் குறைத்தல் மற்றும் தடுத்து நிறுத்தல் தொடர்பான ஆக்க பூர்வமான வேலைத் திட்டங்கள் எதுவும் இன்னும் இலங்கையில் முன்னெடுக்கப்படாமலிருப்பதும் வேதனையளிப்பதோடு எதிர்காலம் குறித்த அச்சத்தினையும் அதிகப்படியாக உண்டுபண்ணுகிறது.

குற்றச் செயல்களிலிருந்து வழிப்படுத்தக் கூடிய மனிதனுக்கு நேர்வழி காட்டக் கூடிய பாடசாலைகள் மற்றும் சமயத்தலங்கள் என்பவைகளில் கூட இத்தகைய குற்றங்கள் அரங்கேறும் செய்திகள் சாதாரணமாக இன்று காற்றோடு கலந்து விடுகின்றன. இந்த நிலைமை ஒட்டு மொத்த மானுட அமைதிக் கும் பாரிய அச்சுறுத்தல் என்றே கருத வேண்டியிருக்கிறது.

எடுத்துக் காட்டாக வடக்கிலே யாழ்ப்பாணத்தில் பள்ளிக்கூட மாணவி வித்தியா பாலியல் வன்புணர்வுக் கொலை மேற்கிலே சேயா பாலியல் பலாத்கார கொலை இப்படிப்பட்ட பல பாலியல் குற்றங்களை பட்டியலிட முடியும். இதற்கான அதிக பட்ச தண்டனையாக மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

இந்ந நல்லாட்சி அரசாங்கத்தில் இன்று பாடசாலைகளில் பாலியல் ரீதியான அச்சுறுத்தல்கள் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களினால் மேற்கொள்ளப்படுவதாக சமீபத்திய தகவல்கள் வெளியாகின்றன.

இத்தகைய குற்றங்களை களைவதற்கான வழிகாட்டல் அரங்கேற வேண்டிய தளத்திலேயே, அவை இடம் பெறுமானால் எதிர்கால சந்ததிகளின் நிலை என்னாவது என்பது குறித்து நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் அவசியம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். இத்தகைய மிலேச்சத்தனங்கள் குறித்து வேண்டுமென்றே மூடி மறைக்கப்படுவதோடு அவை பாரிய குற்றம் அல்ல எனச் சமூகத்தில் உள்ளவர்களால் பராமுகமாக விடப்பட்டும் விடுகின்றன. இத்தகைய நிலைமைகள் தான் இக்குற்றச் செயல்கள் மென்மேலும் பெருக வாய்ப்பாய் அமைந்து விடுகின்றன.

சில பெற்றோர் இத்தகைய நிகழ்வுகள் குறித்து பிள்ளைகள் தெரியப்படுத்தும் தருணங்களில் அதற்கு எதிராக நடவடிக்கை ஏதும் மேற்கொண்டால் அது தம் பிள்ளையின் கல்வியில் தாக்கம் செலுத்தும் என்கின்ற அசட்டுத்தனமான அச்சத்துடன் கவனிக்காமல் விட்டு விடுகின் றனர். ஆனால் இதன் விளைவு பாரியளவிலான விபரீதத்தினை எதிர்காலத்தில் ஏற்படுத்தவல்லது என்பதனை அவர்கள் சிந்திக்கத் தவறுவதே இதற்கான க்காரணமாகும் .

எனவே இவ்வாறான செயற்பாடுகளைக் கண்டிப்பதற்கும், அவற்றிலிருந்து சமூகத்தை காப்பதற்கும், நாட்டின் ஒவ்வொரு பிரஜை தொடங்கி அரசாங்கம் வரையில் ஆக்க பூர்வமான வேலைத் திட்டங்களை ஆரம்பித்தாக வேண்டும்

குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்படுவதோடு நவீன ஊடகப் பிரயோகம் குறித்தும் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இனியும் பராமுகமாக இருந்து காமக்கயவர்களின் இச்சைகளுக்கு எமது பிஞ்சுகளைப் பலி கொடுப்பதிலிருந்தும் இத்தகைய விடயங்களைத் தூண்டும் காரணிகளிலிருந்தும் காக்கவல்ல விடயங்கள் குறித்து சிந்தித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

# மனங்களை வெல்லுதல்

வர்ஷி



தமிழ் மக்களின் மனங்களை வெல்வதன் மூலமே நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமென வடமாகாண ஆளுநர் கூறுகின்றார்; அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் அப்படித்தான் கூறுகின்றார். அவ்வாறெனில் நல்லாட்சி என்று கூறிக்கொள்ளும் அரசாங்கம் தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதா? என்ற கேள்வி எழுவது இயல்பானதே.

சரி நல்லிணக்கம் என்றால் என்ன? அரசின் செயற்பாட்டின்படி இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்கக் கூடாது. படையினருக்கான காணிகளைப் பெற மக்களின் எதிர்ப்பினையும் மீறி அளவீடு செய்ய வேண்டும். புத்தர் சிலைகளைத் தொடர்ந்தும் தமிழர் நிலங்களில் நிறுவ வேண்டும். காணாமற் போனவர்களுக்கு எவ்வித பதிலையும் கூறக்கூடாது. அவர்கள் தமது போராட்டங்களை நடத்த வேண்டும். காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவை கலைத்து நல்லிணக்க செயலணி மீண்டும் மக்களிடம் விசாரணை நடத்த வேண்டும். இது தான் தமிழ் மக்களின் மனங்களை 'வெல்வதற்கான' அரசின் செயற்பாடு.

யுத்தம் முடிவடைந்து இன்று ஒன்பது வருடங்களாகின்றன. ஆனால் இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் இன்னமும் நலன்புரி நிலையங்களிலேயே தங்கியுள்ளனர். முன்னர் வலி. வடக்கு மக்களை மீள்குடியேற்ற வேண்டுமென தெல்லிப்பளையில் நடந்த போராட்டத்தில் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டிருந்தார். ஆனால் இன்று அவர் பிரதமராக வந்தவுடன் அதையெல்லாம் மறந்துவிட்டார்.

நல்லாட்சி அரசு வந்தும் ஒரு வருடமாகிவிட்டது. மக்களும் தம் வாழ்க்கையில் ஏதோ பெரிய மாற்றம் நிகழப்போகின்றது. என நினைத்தனர் ஆனாலும் தொடர்ந்தும் நலன்புரி நிலையம் தான் அவர்களின் வாழ்வாகிப்போனது.

யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கில், கிளிநொச்சியில், பரவிப்பாஞ்சானில், முல்லைத்தீவில், கேப்பாபுலவில், மன்னாரில், முள்ளிக்குளத்தில், வவுனியாவில், ஓமந்தையில் என தமிழரின் நிலங்கள் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள போது "தமது நிலத்தை தமக்குத் தாருங்கள்" என தமிழ் மக்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கையில், தமிழரின் மனங்களை எவ்வாறு வென்று நல்லிணக் கத்தை ஏற்படுத்தலாம் என சிந்திக்கின்றது அரசு.

தமிழர் நிலங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவம் இருக்கும் இடத்திலெல் லாம் புத்தர் சிலைகள் முளைத்த வண்ணமே உள்ளன.


அது போதாதென்று முக்கிய சந்திகளெல்லாம் (கொக்கிளாய் தமிழரின் குடியிருப்பு பகுதி, திருமலை நகரம்) தற்போது பாரிய புத்தர் சிலைகளை உருவாக்கத் தொடங்கிவிட்டார்கள். எவ்வாறு ஏற்படும் நல்லிணக்கம்?

தமிழ் மீனவர்கள் காலாதிகாலமாக மீனவத் தொழில் செய்துவந்த கொக்கிளாய், நாயாறு போன்ற கடற் பகுதிகளெல்லாம் பெரும்பான்மை மீனவர்கள் வந்து ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதை கேட்க எவரும் இல்லை. எப்படி வரும் நல்லிணக்கம்?

கடந்த கால யுத்தத்தின் போது காணாமற் போனவர்கள் தொடர்பில் அவர்களது உறவினர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியபோதிலும் அரசு அதனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மாறாக காணாமற்போன உறவுகளிடம் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவும் கலைத்தாயிற்று. அதற்குப் பதில் தற்போது நல்லிணக்க செயலணி மீண்டும் அதே இடத்திலிருந்து விசாரணை. எப்படி ஏற்படும் நல்லிணக்கம்?

மகிந்த ஆட்சியிலேயே படையினருக்கான காணி அளவீடு என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் நல்லாட்சி அரசிலும் படையினருக்கு காணி அளவிடுகிறார் களே? அதுவும் மக்களின் எதிர்ப்பால் அது நிறுத்தப்படுவதாக கூறப்படுகிறதே? இப்படியான நிலையில் ஏற்படுமா நல்லிணக்கம்?

எனவே தமிழ் மக்களும் இந்நாட்டு பிரஜைகள் என்றால் அவர்களுக்கான உரிமைகளையும் சரிசமமாக வழங்கினால்தான் நல்லிணக்கம் ஏற்படும் என்பதனை அரசு புரிவதுதான் எப்போது?





பரி. பேதுரு மெதடிஸ்த ஆலய வளாகத்துக்குள் அருட்திரு. டாக்டர். பீட்டர் பெர்சிவல் ஞாபகார்த்த மண்டபம் மற்றும் அவரது சிலை ஆகியவை 31/07/2016 மாலை 4:00 மணியளவில் மெதடிஸ்த திருச் சபை யின் தலைவர் அருட்திரு. ஆசிரி மற்றும் மெதடிஸ்த திருச்சபையின் செயலாளர் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. யாழ் பரி. பேதுரு மெதடிஸ்த ஆலய குருவானவர், முகாமைக்குரு அருட்திரு. நயில்ஸ் ரவிசங்கர் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட திருச்சபைகளின் குருவானவர்கள், யாழ். மத்திய கல்லூரி அதிபர் உட்பட பல நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர். அருட்திரு. டாக்டர். பீட்டர் பெர்சிவல் அடிகளார் எம் மண்ணின் கல்வி வளர்ச்சிக்காகவும் பெண்கள் சம உரிமைக்காகவும் பாடுபட்ட ஒரு மெதடிஸ்த மிஷனரி ஆவார்.





31.07.2016 அன்று பிரான்ஸில் "தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை" என்ற ஒரு இளைஞர் அமைப்பினரால் முகடு சஞ்சிகையின் 12 ஆவது இதழ் விமரிசையாக வெளியிடப்பட்டது.

தங்களின் தனி முயற்சியில் பல்தரப்பட்ட கருத்தாளர்களை பன்முகத் தேடல்களோடு அமைந்த தலைப்பு வடிவங்களினூடாக தாங்கள் கொண்ட கருத்தியல் மையத்தை விட்டகலாமல் நேர்த் தியாக அனைவரையும் உள்வாங்கி இந்த இளம் தலைமுறையினர் செயற்படுவது பாராட்டுக்குரியது !







கவிஞர் சோலைக் கிளியின் "மரத்துக்கு கீழமர்ந்து பேசுவோர்" என்ற கூட்டத் தொடரின் முதலாவது அமர்வு மாவடிப்பள்ளி அஷ்ரப் மஹா வித்தியாலயத்தில் 2016.07.31 இடம்பெற்றது.

எனது "பதுமராகம்" மற்றும் ஓலுவில் வஹாப்தீனின் "கலவங்கட்டிகள்" ஆகிய நாவல்கள் தொடர்பில் கருத்துப் பரிமாறல்கள் இடம் பெற்றன.

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)




# கஞ்சா கடத்தல்

## திகைப்பூட்டும் உத்திகள்

எனவேதான் அண்மைக்கால கஞ்சா கடத்தல் பொறிமுறையாக சைக்கிள்களை கடத்தல்காரர்கள் பயன் படுத்த தொடங்கி இருக்கிறார்கள்.

கடந்த வாரம் கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா உடுத்துறைப் பகுதியில் படகு மூலம் தரையிறக்கப்பட்டு, சைக்கிளில் காட்டுப்பகுதி ஊடாக இயக்கச்சி நோக்கி நகர்த்தப்படும் போதே பதுங்கியிருந்த அதிகாரிகளால் மடக்கிப்பிடிக்கப்பட்டது. குறித்த கடத்தல் முயற்சிக்கு இரு சைக்கிள்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் முன்னுக்கு சென்ற சைக்கிளின் கைப்பிடியிலும் (கான்டில் ) சைக்கிளின் பின்பக்க இருக்கையிலும் 8 கிலோ கஞ்சா இரண்டு பயணப்பைகளில் பொதி செய்யப்பட்டு இருந்ததாகவும், அவருக்கு பின்னால் வந்த சைக்கிளில் வந்தவரின் நெற்றியில் 'டோர்ச் லைட்' கட்டப்பட்டிருந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்

### பிடிபடுவது மீன்குஞ்சுகளே

இந்தச் சம்பவங்களை பார்த்தோமானால் பொலிஸில் பிடிபடுபவர்கள் பெரும்பாலும் அன்றாடப் பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொள்ளும் கூலித் தொழிலாளர்களாக இருக்கும் சாதாரணச் சனங்களே. போதை உலகம் ஒரு கடல் என்றால் பொலிசார் பிடித்திருப்பது வெறும் குஞ்சு மீன்களையே. ஏனென்றால். அதிகார மட்டங்களுக்கான வலைகளை எவரும் வீசுவதேயில்லை. அதிகார மட்டங்களுக்கு திமிங்கிலங்கள் தீனி போடுவதால் அவை திமிங்கிலங்களை இழக்க விரும்புவதுமில்லை.

என்னென்னவோ மகத்தான காரியங்களுக்காக யோசித்த மக்கள் இப்போது கஞ்சாவை எப்படி கடத்துவது? எப்படி விநியோகித்துப் பொருள் பார்ப்பது? என்பன போன்ற விடயங்களுக்காக யோசிக்கத் தொடங்கி இருக்கிறார்கள். இதற்கு சிறந்த உதாரணமே மேற்சொன்ன சைக்கிள் கஞ்சா.


போருக்குப் பின்னான காலங்களில் கஞ்சாக் கடத்தல் மையமாக வடக்கு மாறிப்போனது. கடல்வழியூடாக சத்த மின்றி வந்துசேரும் கஞ்சாப் பொதிகள் தென்னிலங்கைக்கு பத்திரமாக பஸ்களிலோ, வாகனங்களிலோ அனுப்பப்பட்டன. ஆனால் இதை பொலிஸார் மோப்பம் பிடித்த பின்னர் நிலைமை தலைகீழானது. கஞ்சாக் கடத்தலுக்கு புதுப் புது உத்திகளை கடத்தல்காரர்கள் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. ஹையஸ் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றின் மூலம் கஞ்சா கடத்தும் பல முயற்சிகள் அண்மைக் காலத்தில் முறியடிக்கப் பட்டிருந்தன. எனினும் இந்தச் சந்தர்ப்பங்களின் போதெல்லாம் கடத்தல் நபர்கள் பெரும்பாலும் மாட்டுவதில்லை. வாகனங்களும், கஞ்சாப் பொதிகளுமே பிடிபட்டி ருந்தன. எனவே தொடர்ச்சியாக கஞ்சா கடத்தும் வாகனங்கள் குறிவைக்கப்பட்டதால் வேறு உத்திகளைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலை கடத்தல்காரர்களுக்கு.

அத்தகைய கண்டுபிடிப்பாக மேற்சொன்ன சைக்கிள் கஞ்சாக் கடத்தல் உத்தியைப் பார்க்க வேண்டியுள்ளது. சைக்கிள் என்றால் பல நன்மைகள் உண்டு. வாகனங்களோடு கஞ்சா பிடிபட்டால் வாகன இலக்கத்தை வைத்து கடத்திய நபரைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் சைக்கிள் என்றால் அப்படிக் கண்டுபிடிப்பதென்பது கஷ்டமான காரியம். அத்தோடு சைக்கிள் பிடிபட் டால் சில ஆயிரங்கள் மட்டுமே நஷ்டம். வாகனங்கள் பிடிபட்டால், நஷ்டம் லட்சக் கணக்கில் அல்லவா. அத்தோடு சைக்கிள் என்றால் சத்தமின்றி எவரது கவனத்தையும் ஈர்க்காது காரியத்தை கச்சிதமாகச் செய்துவிட முடியும்.


### திமிங்கிலத் திட்டங்கள்

இங்கே கஞ்சா திமிங்கிலங்கள் ஏதோ ஒரு கெரில்லா போராளிகளைப் போல திட்டங்களை உருவாக்குகின்றன. கடத்தும் நபர்களின் தொடர்பு என்பது மாயமான ஒன்றாகவும் ஒருவரை. யொருவர் அறியாவண்ணமும் கஞ்சா திமிங்கிலங்கள் திட்டமிடுகின்றன. சில சமயத்தில் பொதியொன்றை கடத்திச்செல்பவர்கள் அதனுள் என்ன இருக்கின்றது என்ற விபரம் அறியாமலேயே பணத்திற்கு மாரடிக்கின்றனர். புத்திசாலியான மோசமானவர்களின் இத்தகைய வலைப் பின்னல்கள் வடபுலத்தை இலங்கையின் கஞ்சா மையமாக மாற்றிக் கொண்டிருக்கின்றது. யாழ்ப்பாணம் கேரளாவுடன் நெருக்கமான மொழி, பண்பாட்டு உறவினை வரலாற்றுக் காலம் தொட்டு கொண்டுள்ளது. புட்டையும், கொத்து ரொட்டியையும் போல கஞ்சாவையும் இங்கே பயன்படுத்து வது அபத்தமான ஒன்றல்லவா. யாழ்ப்பாணத்தில் ஏதோ சோடா வாங்குவதைப் போல் கஞ்சா வாங்க இளைஞர்களால் முடிகின்றது. ஒரு சில பொலிஸ்காரர்களும், மதுவரித் திணைக்களத்தினரும் உண்மையான அர்ப்பணிப்புடன் இயங்கினாலும் கஞ்சா வலையமைப்பு தொடர்ந்தும் கடலின் வழியே நம் சமூகத்தை கடலுக்குள் இழுத்து வீழ்த்தவே முனைகின்றது.

போருக்குப்பின்னரான எம்முடைய சமூகத்தில் ஏற்பட்ட பொருளாதாரப் பற்றாமையும் சிக்கல்களும், கஞ்சா போன்ற பிரச்சினைகளை உள்ளே அனுமதித்திருக்கின்றன. "இருப்பவர்கள் இருந்திருந்தால் இப்படி நடக்குமா?" என்று பெரியவர்கள் இன்று முணு முணுப்ப திலும் உண்மையில்லாமல் இல்லை. கஞ்சாவை இடம்மாற்றும் அல்லது விற்பனை செய்யும் இளைஞர்களும் நடுத்தர வயதுக்காரரும், பெரும்பாலும் தொழிலற்று, பொருளாதாரச் சிக்கலுக்குள் இருப்பவர்களாக இருக்கின்றனர். பொருளாதார சிக்கலால் இதனைச் செய்கின்றனர் என்று அவர்களை ஊக்கப்படுத்த முடியாது. ஆயினும் பொருளாதாரச் சிக்கல் என்பது இந்த நாட்டின் மோசமான பொருளாதார முகாமை



யாலும் முதுகெலும்பற்ற அரசியல் தலைமைகளாலும் ஏற்பட்டதேயாகும். சமூகத்தின் எல்லாப் பிரச்சினைகளின் மைய வேர்களையும் பிடித்து ஏறினோமானால் அது இந்த சனநாயக நாட்டில் நாம் வாக்களித்து தெரிவு செய்த அரசியல் தலைமைகளிலேயே போய் நிற்கும். யாழ்ப்பாணம் இன்னொரு மெக்சிக்கோவாக மாறி தென்னாசியாவின் போதை மையமாக மாறும் போதும் கூட நாம் தொடர்ந்தும் நம்முடைய சனநாயக் கடமைகளை நிறைவேற்றிய படிதான் இருக்கப்போகிறோம்.



**சஞ்சீவ தர்மரத்ன**

**(பிரதி பொலிஸ்மா அதிபர் - யாழ் மாவட்டம்)**

**"குடா நாட்டில் அதிகரித்திருக்கும் கஞ்சா கடத்தல் நடவடிக்கைகளை முறியடிப்பது தொடர்பில் தீவிர நடவ டிக்கை எடுத்திருக்கிறோம். கடற்படையுடன் தொடர்பு கொண்டு அவர்களுடன் சேர்ந்து இந்த கடத்தல்காரர்களை மடக்க நடவடிக்கை எடுத்துவருகின்றோம். இதற்காக எனது தலைமையில் விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அத்துடன் விசேட அதிரடிப் படையும் இந்த நடவடிக்கைகளில் களமிறக்கப்படுள்ளது. கஞ்சாவுடன் சேர்த்து கடத்தல்காரர்களை மடக்க தீவிர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் 45 கிலோ கேரள கஞ்சா பொதிகளை இந்தக்குழு மடக்கியிருக்கிறது. ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்த நடவடிக்கை தொடர்பில் தீவிர நடவ டிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நான் இது தொடர்பில் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் ஒவ்வொரு கிழமையும் நேரடியாக சென்று இந்த விசேட நடவடிக்கைகள், ஏற்பாடுகள் தொடர்பில் ஆலோசனைகளையும் உத்தரவுகளையும் வழங்கி வருகின்றேன். கஞ்சாவுக்கு அடுத்தாக ஹெரோயின் தொடர்பிலும் அவதானம் செலுத்தி வருகின்றோம்.**

**அண்மையில் கூட அச்சுவேலிப் பகுதியில் பொலிஸார் 5 கிலோ கேரளக் கஞ்சா பொதிகளை கைப்பற்றியிருக் கின்றனர். அத்துடன் கஞ்சா கடத்தல்காரர்களையும் அவர்களின் வலையமைப்பையும் இல்லாது ஒழிக்கும் நடவடிக்கை தீவிர அவதானத்துடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. போதைப் பொருள்கள் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தச் செயற்பாடு களுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை அதிகமாக எதிர்பார்க்கின்றோம்"**



## ஆவணி 9 - ஆதிவாசிகள் தினம்

ஐக்கிய நாடுகளினால் 1994 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 9 ஆம் திகதி முதல் முதலாக ஆதிவாசிகள் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபை 2005-15 கால கட்டத்தை மரபின மக்களின்(ஆதிவாசிகள்) தசாப்தமாக கடைப்பிடிக்கிறது.

ஆதிவாசி சமூகங்களின் பொருளாதார- சமூக முன்னேற்றம், கலாசார- சுற்றுச் சூழல் ஆகியவற்றின் பாதுகாப்பு, சுகாதாரம் பேணல், மனித உரிமைகள் பாதுகாப்பு, கல்வி வளர்ச்சி ஆகியவற்றிற்கு கூட்டாக பணியாற்ற வேண்டும் என்பதே இத்தினம் கடைப்பிடிக்கப்படுவதன் நோக்கமாகும்.



டென்மார்க்கில், முதல் ஈழத் தமிழ் பெண் விமானி அர்ச்சனா ! மகிழ்ச்சி !






மத்திய மலை நாட்டிலுள்ள பெருந்தோட்டப் பகுதிகளில் தொழிலாளர்கள் அடிக்கடி குளவிக் கொட்டுக்கு இலக்காகி வருகின்றனர். இதனால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

இம்மாதத்தில் மட்டும் தலவாக்கலை, பத்தன, திம்புள, மஸ்கெலியா, சாமிமலை, நல்லதண்ணி, பொகவந்தலாவ மற்றும் மலையகத்தின் பல பகுதிகளில் அதிகளவி லான மக்கள் குளவி கொட்டுக்கு இலக்காகி யுள்ளனர்.

இது சம்பந்தமாக தோட்ட தொழிலாளர்கள் கருத்து தெரிவிக்கையில் நாளுக்கு நாள் குளவி கொட்டுக்கு பெருந்தோட்ட மக்கள் இலக்காகி வருவதாகவும் இதனால் 200க்கு மேற்பட்டோர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுள்ளதாகவும் ஒருசிலர் மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். ஆகையால் தொடர்ந்தும் தோட்டங்களில் பணிபுரிய முடியாத நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.



**ஆவணி 12 - சர்வதேச இளைஞர் தினம்**
அண்மைக் காலத்தில் உலகில் அதிகளவான இளைஞர்களை இழந்து விட்டு நிற்கும் ஒரு இனத்திற்கு இந்த தினம் என்ன செய்யப் போகிறது?



இந்தியக் குடியுரிமை வழங்கக் கோரி சென்னையில் இலங்கை அகதிகள் அமைதிப் பேரணி !



இந்தியாவில் உள்ள மகாராஷ்ட்டிர மாநிலத்தில் இரண்டு மணமக்கள் தாலி கட்ட தேர்வு செய்த இடம் !

# வாரப் பலன்

### மேடம்
எதிர்பாராத அதிர்ஷ்டம். வியாபார மேன்மை. புத்திர விருத்தி. சுகக்குறைவு. தானிய விருத்தி. சிந்தனைக் குழப்பம். கல்வி சமநிலை.

### மிதுனம்
நோய் தீரும். தூக்கக் குறைவு. சுப செய்தி. மனையில் மகிழ்சி. தூரத்து உறவால் மேன்மை. காரியனுகூலம். கல்வி முடக்கம். வீண் கற்பனை.

### சிம்மம்
தன தானிய மேன்மை. உணவில் நாட்டம். வியாபாரிகள் நன்மையடைவர். சுபச் செலவு. மனைசிறக்கும். மக்கள் தொல்லை. விருந்துவருகை.

### துலாம்
புத்தி சிறப்பு. அதிஷ்டம். அன்னதானம். தனித்த நிலை. தவ நிலை. செய் தொழில் மேன்மை. போகச் செலவு. பொறுமை. மனித நேயம். பணமுடை.

### தனுசு
பக்கச் சார்பு. பகை கேடு. தெய்வ சிந்தனை. தூரதேச நன்மை. துன்ப மிகுதி. தாரசுகம். தண்டிக் கப்படுதல். பொதுப்பணி சிறப்பு. தரும காரிய மேன்மை.

### கும்பம்
தவநிலை. தருமகாரிய சித்தி. தூரதேச சஞ்சாரம். பணிமுடக்கம். பாவநிலை. பொருள் விரயம். பாகப் பிரிவு. பிணி. பிந்திய நிலை. மனையில் சமநிலை.

### ரிஷபம்
காரிய சித்தி. கவனக் குறைவு. பணமுடை. செய்தொழில் மேன்மை. கடன் தொல்லை. தல யாத்திரை. காரியசித்தி. குடும்ப மேன்மை. தெய்வீகம்.

### கடகம்
பண்பாளர் சேர்க்கை. தலயாத்திரை. கெட்ட கனவு. கடன் தொல்லை. ஜலதோஷம். குடும்ப சிறப்பு. வேலையாட்கள் சகாயம். பொருள் சேர்க்கை.

### கன்னி
தெய்வ அனுக்கிரகம். தயாள சிந்தனை. தர்ம காரிய மேன்மை. கனவு பலிதம். காமக் களிப்பு. அன்னதானம். வாகனச் செலவு. வாணிப மேன் மை. விக்கினம் தீரும்.

### விருச்சிகம்
தூர சிந்தனை. தந்திர புத்தி. சமயப் பணி. தல யாத்திரை. கனவால் பயம். காய நஷ்டம். குறை தீரும். விசபீடை. வித்தியா பலிதம். பணிமுடக்கம். பொருள் சேர்க்கை. சுகச்செலவு.

### மகரம்
கல்விப் பணி சிறக்கும். யாத்திரை பலிதம். திருமண பந்தம். தலைவலி. தன்னிறைவு. தார சுகம். சீர் வருகை. தன தானிய சமபலன். இன்ப துன்ப மற்ற சமநிலை. ஈகைச் சிறப்பு.

### மீனம்
தாழ்ந்த நிலை. சத்துரு ஜெயம். தரும காரிய சித்தி. கள்வர் பயம். பிராணிகள் தொல்லை. ஏற்ற இறக்கம். ஜலதோஷம். வியாபார நன்மை. தியானம் மேன்மை.

புதுவிதி

நேர்காணல் - கணபதிசர்வானந்தா
ஒளிப்படங்கள் - தனுஸ்









றிபாய்ஸ்

றின்ஷாட்

# றின்ஷாட் சுட்ட வடை

கல்வியங்காட்டு சந்தியிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்லும் ஆடியபாதம் வீதியும், இராசபாதையும் சந்திக்கின்ற நாற்சந்தியில்,தெருவைக் கடந்து போகும்போது, பொரித்த இறாலின் வாசனை மூக்கைத் துளைக்கிறது.

மதிய உணவுக்கான நேரமாதலால் அந்த வாசனை மேலும் மேலும் பசியைக் கிளற, வாசனை வந்த திசையை நோக்கி நடந்தோம். இராமசாமிப் பரியாரியார் வீட்டு மதிலையொட்டி நின்றது அந்த வாசனை வடை வண்டி. வண்டியை நெருங்கினோம். மெல்லிய இளைஞனொருவனைச் சுற்றி வடை வாங்க ஒரு கூட்டம் நின்றிருந்தது. கொதிக்கும் எண்ணெயில் வடையைத் தட்டி போட்டுக் கொண்டு நின்ற அந்த இளைஞன், திடீரென அடுப்பின் சுவாலையை குறைத்துவிட்டு வியாபாரத்தைக் கவனிக்கத் தொடங்கி விட்டான் கையையும், முகத்தையும் அப்படி இப்படி அசைத்து சைகைகள் மூலம் வந்தவர்களுக்கு என்ன தேவை எனக்கேட்கிறான். பின்னர் வடையைப் பொதி செய்கிறான். காசை எண்ணெய்ப் பிசுபிசுப்போடு கூடிய கைகளால் எண்ணிவிட்டு, அடுத்தவரின் தேவையைக் கேட்க முனைகிறான். வண்டிலுக்குள் கொதித்துக் கொண்டிருக்கும் அடுப்பையும் பார்த்துக் கொள்கிறான். இத்தனைக்கும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. கொஞ்ச நேரம் கூர்ந்து அவதானித்த பின்னரே அவன் செவிப்புலன் வலுவற்ற இளைஞன் என்பது புரிந்தது.

தன் உடல் ரீதியான குறையை வைத்து அனுதாபத்தைத் தேடாமல், 'சொந்தக் காலில்' நிற்கும் இளைஞன் அவன். இந்தச் சொந்தக் காலில் நிற்றல் என்ற பதம் மற்றவர்களை விட இவனுக்கே அதிகம் பொருந்தும். தினசரி 10 மணித்தியாலத்துக்கும் மேலாகச் "சொந்தக்காலில் நின்றபடி தானே" அவனது வியாபாரம் ஓடுகிறது.

சனம் குறைந்த சமயம் பார்த்து அவனோடு உரையாட எத்தனித்தோம். எமக்குத் தெரிந்த சைகைகளை எல்லாம் பயன்படுத்தி அவன் பெயர் என்னவென்பதைக் கேட்பதற்குள்ளேயே எங்களுக்கு போதும் போதும் என்றகிவிட்டது. பல வழிகளிலும் அவன் சொன்ன பதில் சைகை கடைசி வரை எங்களுக்கு புரியவேயில்லை. இறுதியில் எங்கள் மீது பரிதாபப்பட்டவனாக தனது பணப் பெட்டியிலிருந்து, யாழ்ப்பாண மாநகர சபையினால் வழங்கப்பட்ட, சுகாதார அடையாள அட்டையை எடுத்து நீட்டினான். உணவு தயாரித்துப் பரிமாற சுகாதார ரீதியான தகுதியுடையவர் என்று அத்தாட்சிப்படுத்தும் அந்த அடையாள அட்டை அவனது பெயர் 'றின்ஷாட்' என்று சொன்னது.

தொடர்ந்தும் நாம் கேட்ட கேள்விச் சைகைகள் அவனுக்கும், அவனது பதில்கள் எங்களுக்கும் புரியாமை வெளியை அதிகப்படுத்தியதால் அவன் ஒரு உபாயம் செய்தான். சற்றுத் தள்ளி, சந்தியில் நின்ற ஒட்டோகாரர் ஒருவரைக் கூட்டிக்கொண்டு வந்தான். அந்த ஒட்டோக்காரர் றின்ஷாட்டின் நண்பன் மாத்திரமல்ல, இது போல விடயங்களுக்கு அவனது "உத்தியோக பூர்வ" மொழிபெயர்ப்பாளரும் கூட. அவனது தொழில் முன்னேற்றத்திற்கு சகல வழிகளிலும் உதவுகிறார் அந்த ஒட்டோக்காரர். ஒட்டோக்காரரின் மொழி பெயர்ப்பால் அதன்பின்னரான உரையாடல்கள் சுலபமாகின.

றின்ஷாட் ஐந்து சந்தியைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் இளைஞன். முப்பது வயதை தாண்டியவன். சிறுவயதில் பேச்சுத்திறன் கொண்டவனாய் இருந்த றின்ஷாட்டோடு காலம் அவனது நான்காவது வயதில் கோபித்துக் கொண்டது. விளைவு? நான்கு வயதிற்கு பின்னர் கேட்கும் திறனை றின்ஷாட் இழந்தான். இருந்தும் உயர்தரம் வரை ஒஸ்மானியாவில் கற்ற றின்ஷாட். பாடசாலைக் காலங்களில் ஓட்டப் போட்டி, நீளம் பாய்தல், உடற் பயிற்சி எல்லாவற்றிலும் கலக்கி, நான்கு விருதுகளையும் வென்றுள்ளான். அதன் பின்னர் குடும்பச் சூழல் அவனை வடை வண்டி வியாபாரத்துக்குள் தள்ளி விட்டது. றின்ஷாட்டின் மூத்த சகோதரரான றிபாய்ஸ் தான் இந்தக் கடையை அவனுக்கு உருவாக்கிக் கொடுத்தவர். அவரும் பேச்சுத் திறன் அற்றவர்.

தனக்கு மொத்தம் நான்கு சகோதரர்களும் ஒரு தங்கையும் உள்ளனராம். அதில் மூன்றுபேர் திருமணமாகி தனியேயுள்ளார்கள். கடைசித் தம்பியும், தங்கையும் பாடசாலையில் படிக்கின்றனர். றின்ஷாட் தான் வீட்டுக்கு பொருளாதார வெளிச்சத்தைக் கொடுப்பவர்.

முன்னைய நாட்களில், அவரது தந்தை கல்வியங்காட்டுச் சந்தியிலுள்ள மதுபானக் கடைக்கருகில், வடை வண்டி யொன்றை, முப்பது வருடங்களுக்கு மேலாக நடத்தியவர். அந்தச் சூழல் அவரை மதுபானத்துக்கு அடிமையாக்கி விட்டது.

குடித்துக் குடித்தே, குட்டிச்சுவரான அவர். அவர் தற்போது வீட்டில் ஓய்வெடுக்கிறார்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)



# பாதயாத்திரை - திரை விமர்சனம் (?)

விமல் வீரவன்ச கதை, திரைக் கதை வசனம் எழுதி இயக்க, முன்னால் ஜனாதிபதி 70 வயது தாத்தா மகிந்த கதாநாயகனாய் நடிக்க, பிரம்மாண்ட பொருட் செலவில் தயாராகி லேட்டஸ் ஸாய் ரிலீஸாகி இருக்கும் படம் தான் "பாதயாத்திரை".

வழக்கம் போல் மகிந்தவின் ஆஸ்தான ஒளிப்பதிவாளர் உதயகம்மன்பில ஒளிப்பதிவு செய்திருக்கிறார்.. பாடல்களை நாமல் ராஜபக்ச எழுத கதாநாயகியாக 60 வயசு 'பவுடர் பேபி' கீதா குமாரசிங்க நடித்திருக்கிறார்.

அடுத்தடுத்து தொடர் தோல்விகளால் துவண்டு போய் இருக்கும் மகிந்தவிற்கு ஒரு மெகா ஹிட் படத்தைக் கொடுத்து தனது "டேமேஜான இமேஜைத்" தூக்கி நிறுத்த வேண்டிய காலத்தின் கட்டாய நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் அவசர அவசரமாய் தயாராகி ரிலீஸாகி இருக்கிறது பாதயாத்திரை.

கண்டி மீராமாக்கம் பள்ளியில் ஒரு டுபாக்கூறு உலமாவின் டகல்பாஜி மகிந்த புராணத்துடன் ஆரம்பாகிறது படம்... தொடக்கமே வெடிச் சிரிப்பு மத்தாப்பு.

அட இது இன்னொரு இம்சை அரசன் புலிகேசியாய் இருக்கும் என்று சீட் நுனியில் உட்காரும் ரசிகர்களை குருடன் யானையைப் பார்த்த கதையாக புரியாத ஒரு ஜந்துவாய் இளிக்க வைத்திருக்கிறது ஒட்டு மொத்த திரைக்கதை.. மகிந்த தோன்றும் காட்சிகளில் அவரது பழைய உற்சாகம் இல்லை.. பேசும் வசனங்கள் எல்லாம் எப்போதோ வழக்கொழிந்து போன உப்புச் சப்பில்லாத சக்கைகள்..

ஒரு புறொய்லர் கோழி போல் வளர்ந்த உடம்பு, ஏஸியை துறந்து மழையிலும் வெயிலிலும் அலைவதாலோ என்னவோ முகத்தில் முதுமையின் ரேகைகள் ப்ளாஷ் அடிக்கின்றன... அடிக்கடி மேக்கப் கலைந்து தலை கலைந்து விடுகிறது.. அரசியல்வாதியின் வேசம் கலைவது போல.. பத்து வருசம் ஜனாதிபதியாய் இருந்து தோற்றுப்போன ஒரு மனிதன், அதிகாரமோகம், கொண்டு எந்த வகையிலாவது ஆட்சியை மீண்டும் தக்கவைத்துக் கொள்ள அடையும் முயற்சிகளே படத்தின் ஹைலைட் என்று சாமானிய ரசிகனுக்குப் புரிந்தாலும் இயக்குனர் விமல் வீரவன்ச வழக்கம் போல் இதில் தேசப்பற்று லேபலை ஒட்டி இருக்கிறார்..

படம் பார்த்துவிட்டு வெளியே வரும்போது கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்காக்களும், உயிர்ப்பயத்தில் நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற ஜீவன்களும், இன்னும் எத்தனையோக்களும் அந்தரத்தில் பாதயாத்திரை போகும் காட்சி தென்படுகிறது..

"பாத யாத்திரையால் பிடிக்க முடியாது ஆட்சி, பறங்கிமலை ஏறினாலும் உனக்கு கிடையவே கிடையாது மீட்சி" என்று படத்தைப் பார்த்துவிட்டு தைரியமாய் ஜனாதிபதி 'பன்ச்' வசனம் பேசலாம்.. அந்தளவுக்கு படம் மொக்கை..

ஸபர் அஹமட்

சிறுவர் தொடர்

08



செங்கை ஆழியான்

# பூதத்தீவுப்புதிர்கள்

“சஉறுங்கள் ஐயா” என்றார் மூர்த்தி. அவர் உடல் வெட வெடவென நடுங்கியது. வகுப்பறையில் அவர்கள் அவரின் முன் அப்படித்தான் பல தடவைகள் நின்றிருந்தனர். வேடன் வினாவைச் சொன்னான்.

“சுப்பையா என்று ஒருவன் இருந்தான். அவனிடம் குதிரை, கழுதை, எருது ஆகிய மூன்று பிராணிகள் இருந்தன. ஒரு நாள் இந்த மூன்று பிராணிகள் மீதும் பஞ்சு மூட்டை ஏற்றிக்கொண்டு நகரத்திற்குப் புறப்பட்டான். வழியில் கழுதை குதிரையிடம் கூறியது “என் மீதுள்ள மூட்டைகளில் ஒன்றை நீ எடுத்துக் கொண்டால் என் சுமையும் உன் சுமையும் சமனாகி விடும்' என்றது.

அதற்கு குதிரை, ‘நீ என் மீதுள்ள மூடைகளில் ஒன்றை எடுத்துக் கொண்டால், உன் சுமை என்னுடையதை விட இரு மடங்காகிவிடும்' என்றது. இதனைக் கேட்ட எருது கூறியது ‘கழுதையே என்னிடமுள்ள மூடைகளில் ஒன்றை நீ எடுத்துக் கொண்டால் உன் சுமை என்னைவிட நான்கு மடங்காகிவிடும். உன்னிடமுள்ள மூடைகளில் நான்கினை எடுத்து வெளியே வீசி விட்டால், இருவரின் சுமையும் சமனாகிவிடும்' என்றது. ஆகவே, ஒவ்வொரு பிராணிகளிடமும் ஏற்றப்பட்ட மூடைகள் எத்தனை?”

மூர்த்தி ஆசிரியர் தலையைச் சொறிந்து கொண்டார். முகத்தில் வியர்வைத் துளிகள் வெள்ளமாக வடிந்தன. உடல் பதறியது.

“ஐயா இன்னொருக்கா உமது வினாவை ஆறுதலாகச் சொல்ல முடியுமா?” என்று இரந்தார்.

“என்ன ஆசிரியர் நீர்? உம்மைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது சரி கேளும்...” என்ற வேடன் மீண்டும் அந்த வினாவைச் சொல்லத் தொடங்கினான்.

ஆசிரியர் கரங்களில் உள்ள விரல்களையெல்லாம் மடக்கி கணக்குப் பார்த்தார். “கழுதை.. குதிரை.. எருது” என தனக்குள் முனகிக் கொண்டார். கமலம் ஆசிரியையை பரிதாபமாகப் பார்த்தார். வசந்தனுக்கு அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. வகுப்பறையில் சிங்கம் போலக் கர்ச்சிப்பவர் இந்தச் சின்னக் கணக்கிற்கு விடை தெரியாமல் விழிக்கிறாரே என வசந்தன் எண்ணிக் கொண்டான்.

“வினாடிகள் கழிகின்றன...” என்றான் வேடன். ‘ஐயா என்னை விட்டு விடுங்கள்' என்று ஆசிரியர் கெஞ்சினார்.

அனைவரும் பார்த்துக் கொண்டிருக்க ஆசிரியர் மூர்த்தியின் உடல் கல்லாக மாறத் தொடங்கியது . அவருடல் கல்லாக மாறத் தொடங்க வேடனின் உடல் கல்லாகவிருந்து விடுபடத்தொடங்கியது. எல்லோரும் பயத்துடன் பார்த்தனர். மாலா பயத்தால் வீறிட்டுக் கத்தினாள். மூர்த்தி ஆசிரியர் மெதுவாக நடந்து சென்று வேடன் இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டார். வேடன் சாதாரண உடலுடன் எழுந்து நின்றான்.

‘அப்பாடா...' என அவன் பெருமூச்சு விட்டான். “சரி போங்கள்” என்றான் வேடன். “ஆசிரியர்?..”

“யாராவது இனி அவரிடம் அகப்பட்டால் தான், பன்னிரண்டு வருடங்களாக நான் அப்படியே இருந்தேன் வாருங்கள்”

வசந்தன் முன்னே நடந்தான். அவன் கோட்டை கடக்க முயன்ற போது ஆசிரியர் மூர்த்தியின் குரல் ஒலித்தது.

“நில் அப்படியே.. நில்.. நான் கேட்கின்ற வினாவிற்கு சரியாகப் பதில் சொல்லி விட்டுச் செல்” எல்லோரும் திகைத்து நிற்க, வசந்தன் ஆசிரியரை அவதானமாகப் பார்த்தான்.

(புதிர்கள் தொடரும்...)


## அன்புள்ள குழந்தைகளே நீங்கள் எழுதும் காகிதம் பேசுகின்றேன்!

என்னை காகிதம் (Paper), தாள், கடுதாசி என்றெல்லாம் பல பெயர் கொண்டு அழைக்கின்றீர்கள். எழுதுவதற்கும், அச்சிடுவதற்கும் பொதி சுற்றுவதற்கும் பயன்படுகின்ற மெல்லிய பொருள் நானாவேன். என்னை மரம், புற்கள், வைக்கோல் முதலியவற்றிலிருந்து பெறப்படும் செலுலோசுக் கூழ் போன்ற ஈரலிப்பான நார்ப் பொருட்களை அழுத்தித் தட்டையாக ஆக்குவதன் மூலம் செய்கின்றார்கள்.

என்னை கி.மு 3500 ஆம் ஆண்டளவில் எகிப்தில் பயன்படுத்தியுள்ளனர். அப்போது என்னை பப்பிரைஸ் தாவரத்தில் இருந்து செய்தார்கள். தற்போது நீங்கள் பயன்படுத்தும் என்னுடைய வடிவம் கி.பி இரண்டாம் நூற்றாண்டளவில் சீனாவில் உருவாக்கப்பட்டது. இதற்கு முன்னரே சீனாவில் கடதாசி பயன்பட்டிருக்கக் கூடும் என்பதற்கான சில சான்றுகளும் உள்ளதாகச் சொல்கிறார்கள்.

### செல்வங்களே

என்னுடைய முன்னோர்களாகிய பழைய காகிதங்கள் மிகவும் விலை உயர்ந்தவர்களாக இருந்தனர். அவர்களின் எடையும் அதிக அளவில் இருந்தது. எனவே மக்கள் மிகுந்த சிரமபட்டனர். ஆயினும் என்னுடைய நவீன வடிவம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கண்டு பிடிக்கப்பட்டது. நிக்கோலஸ் லூயிஸ் ராபர்ட் என்பவர் 1799 இல் நவீன காகிதத்தை கண்டு பிடித்தார். அவர் என்னை மரக்கூழினால் தயாரித்தார், இன்று வரை அவருடைய முறையே உலகெங்கும் பயன்பாட்டில் உள்ளது.





## குட்டீஸ் பரிசுப் பொதி – 04

01. ஆகாயத்தில் பறக்கும். அக்கம் பக்கம் போகாது. அது என்ன?

02. ஆறு எழுத்துள்ள ஓர் உலோகப் பெயர். அதன் கடை மூன்று எழுத்துகள் சேர்ந்தால் ஒரு கொடிய பிராணி. அது என்ன?

03. அண்டமென்ற பெயரும் உண்டு, அடைகாத்தால் குஞ்சுமுண்டு. அது என்ன?

04. வந்தும் கெடுக்கும், வராமலும் கெடுக்கும். அது என்ன?

05. பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

குட்டீஸ் பரிசுப்பொதி - 04
புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

முடிவுத்திகதி: 16.08.2016

★ தரம் 11 க்கு உட்பட்ட மாணவர்கள் மட்டுமே பங்குபற்றலாம்.

குட்டீஸ் பரிசுப் பொதி – 02 முடிவுகள்
[18 ஆம் பக்கம் பார்க்க]

## குட்டீஸ் பக்கம்

## அரசி கேட்ட பரிசு

மாவீரன் அலெக்ஸாண்டர் இந்தியாவை வென்றுவரக் கிளம்பினான். அப்போது அவன் மனைவி தனக்கு இந்தியாவில் இருந்து ஒரு முனிவரைப் பரிசாகக் கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டாள். அவளுக்கு முனிவர்களிடம் பெரிய மரியாதை. முனிவர்கள் அடுத்த பிறவியில் என்ன நடக்கும் என்று தெளிவாகக் கூற வல்லவர்கள் என்றும் அவள் நம்பினாள்.

அலெக்ஸாண்டர் இந்தியா வந்தான். வேலை முடிந்து வீடு திரும்பப் போகும் முன்னர் மனைவி விரும்பிய பரிசு அவனுக்கு நினைவுக்கு வந்தது. உடனே ஒரு நல்ல முனிவரைத் தேடிக் கண்டு பிடித்தான். அவரைத் தன்னுடன் வரும் படி ஆணையிட்டான்.

முனிவர் மறுத்து விட்டு தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார். அலெக்ஸாண்டரை இது வரை யாரும் இப்படி அலட்சியப்படுத்தியதில்லை. அவனுக்குத் தலைக்கு மேல் கோபம் வந்தது. வாளை உருவிக் கொண்டு அவரை நோக்கிப் பாய்ந்தான்.


முனிவரோ அலட்டிக் கொள்ளாமல் அவனைப் பார்த்துப் புன் சிரித்தார். அலெக்ஸாண்டருக்கு இது பெரும் வியப்பாக இருந்தது. முனிவரைப் பார்த்து “கொல்ல வரும் ஆளைப் பார்த்து சிரிக்கிறீரே! உமக்குப் பைத்தியமா?” என்று கேட்டான்.

அதற்கு முனிவர் “மன்னா.. நீ இரண்டு விஷயங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். முதலில் உன்னால் என் உடம்பை வேண்டுமானால் வெட்டிப் போட முடியுமே தவிர, என்னை அழிக்க உன்னால் இயலாது. இரண்டாவது, என்னுடைய இரண்டு அடிமைகளுக்கு நீ அடிமையாக இருக்கிறாய் என்று பார்க்கும் போது எனக்குச் சிரிப்புதான் வருகிறது!” என்றார்.

அலெக்ஸாண்டருக்குப் புரியவில்லை. “நான் உலகத்திற்கே அரசன். மாவீரன். நான் எப்படி அடிமையாக்க முடியும்?” என்று முனிவரிடம் கேட்டான். அவர் “அப்பா! கோபமும் ஆசையும் எனக்கு அடிமைகள். நீ அவை இரண்டிற்கும் அடிமையாகக் கிடக்கிறாய். அதைத்தான் நான் சொன்னேன்” என்றார்.

மன்னருக்கு இப்போது விளங்கி விட்டது! முனிவரை வணங்கி விட்டுத் தன் வழியே போய் விட்டான்

# தபாங் – 3



◆ 'சுல்தான்' வெற்றிக்களிப்பில் இருக்கும் சல்மான் அடுத்து 'தபாங் 3' படத்தில் தான் நடிக்க இருக்கிறாராம். அவரின் சகோதரர் அர்பாஸ்கான் திரைக்கதையை செது க்குவதில் மும்முரமாக இருக்கிறாராம். முந்தைய இரண்டு பாகங்களிலும் நாயகியாக நடித்த சோனாக்ஷி சின்ஹாவை நீக்கிவிட்டு வேறு ஒரு நாயகியை களம் இறக்கும் முடிவில் இருக்கிறார்களாம் சகோதரர்கள்.

## சீன தற்காப்புக் கலையில் மாதவன்

◆ 'இறுதிச்சுற்று' படத்தின் வெற்றி, மாதவனை மறுபடியும் தமிழ் சினிமா வில் நடிக்கத் தூண்டியிருக்கிறது. நிறையக் கதைகளைக் கேட்டவர், சற்குணம் சொன்ன ஒரு கதை பிடித்துப் போக உடனே கால்ஷீட் கொடுத்து விட்டார். இந்தப் படத்துக்காக சீனத் தற்காப்புக் கலையைக் கற்றுக் கொள்ள மாதவன் அமெரிக்கா பறந்திருக்கிறார்.





◆ கபாலிபடத்தின் காய்ச்
ஓயமுதல் இயக்குனர் ர
த்தின் அடுத்த அடத்திற்க
அறிவிப்பு வெளியாகியுள்ள
ரஞ்சித் தனது அடுத்த படத்
சூர்யாவை ஹீரோவ
வைத்து இயக்குவத
தகவல்
வெளிய
உள்ள



◆ அனுஷ்கா ஷர்மா தான் சம்பாதித்த பணத்தில் கொஞ்சமாக சினிமா தயாரிப்பிலும் முதலீடு செய்கிறார். ஏற்கெனவே 'என். ஹெச்.10' படத்தை தயாரித்த அனுஷ்கா, அடுத்து 'கனிடா' என்ற பெயரில் ஒரு படத்தை தயாரிக்கிறார். 'என். ஹெச்.10' படத்தை இயக்கிய நவ்தீப் சிங் தான் இந்தப் படத்தையும் இயக்குகிறார். இளம் கதாநாயகன் அர்ஜுன் கபூரை நடிக்க வைக்கவும் முயற்சி செய்து வருகிறாராம். அனுஷ்காவும் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறாராம்.

## காதலின் பொ

◆ அர்ஜுன் இயக்கத்
மற்றும் புதுமுகம் சந்தன் ந
காதலின் பொன் வீதியில். அக்
இருந்த காதல் கதைகளில் இ
கதை என்றாலும் அர்ஜுனுக்கு
விஷயங்களும் படத்தில் உள்
ஐஸ்வர்யா அர்ஜுன்.





◆ சமீபத்தில் 'தில்லுக்கு துட்டு' படம் வெளியான போது மொட்டை ராஜேந்திரனுக்கு தியேட்டரில் கட் அவுட் வைத்து பாலாபிஷேகம் செய்து கொண்டாடிய ரசிகர்கள், சென்னை வந்து மொட்டை ராஜேந்திரனை சந்தித்து ரசிகர் மன்றத்துக்கு அனுமதி கேட்டனர். அவரோ "எனக்கெதுக்குப்பா ரசிகர் மன்றமெல்லாம், எல்லாரும் ரசிக்கிறாங்க, அதுவே போதும்" என்று கூறி ரசிகர்களை திருப்பி அனுப்பி விட்டாராம்.

◆ இயக்குனர் லக்ஷ்மண், இயக்கத்தில் நடிகர் ஜெயரம் ரவி, நடிகை ஹன்சிகா மோத்வானி, இசையமைப்பாளர் டி.இமான் ஆகியோருடன் 'போகன்' படத்தில் அரவிந்த் சாமியும் இணைந்திருக்கிறார். 'தனி ஒருவன்' படத்திற்குப் பிறகு இப் படத்திலும் ஜெயம் ரவி போலீஸ் அதிகாரியாகவே நடித்திருக்கிறார்.




◆ வரலட்சுமி கன்னடத்
நடித்த 'மாணிக்யா' வெற்றி
பெற்றுள்ளது. தற்போது மலையாளத்தில் மம்முட்டியுடன் நடித்த 'கசாபா' படத்தைப் பார்த்தவர்கள் வரலட்சுமியின் நடிப்பை புகழ்வதால் ரொம்பவே புத்துணர்ச்சியாக இருக்கிறாராம். அதே வேகத்தோடு தமிழிலும் சீக்கிரமே வெற்றி பெறுவேன் எனக் கூறுகிறாராம்.





◆ நடிகர் சங்கக் கட்டடம் கட்டி விட்டு தான் கல்யாணம் கட்டுவேன் என்பதில் பிடிவாதமாக இருக்கும் விஷால், கல்யாண அவசரமோ என்னவோ கட்டடம் கட்டும் வேலைகளில் மும்முரமாக இறங்கிவிட்டார். கட்டடம் கட்டத் தேவையான பணத்தைத் திரட்ட விஷாலும், கார்த்தியும் இணைந்து நடிக்க, 'கொம்பன்' முத்தையா இயக்கும் படத்தை கூடிய விரைவில் துவங்க இருக்கிறார்களாம். தங்கள் சம்பளத்தை அப்படியே நிதியாக கொடுக்கும் அவர்கள், 25 கோடி வரை இந்தப் படம் சம்பாதித்துக் கொடுக்கும் எனவும் நம்புகிறார்கள்.

◆ நாட்டில் நடைபெறும் குற்றச் செயல்களை மனதில் நிறுத்தி அதன் அடிப்படையில் படங்களை எடுக்க வேண்டும் என்ற கதையை மையப்படுத்தி நகரும் குகனி குழாமின் முந்தைய படைப்பு "திருடர் கூட்டம்". ஆரோக்கியமான கதை கருவை சமூக சூழலுடன் ஒப்பிட்டு எடுக்க வேண்டும் என்பதுடன் தம்மால் முடிந்தளவு சிறப்பாக கொடுக்க வேண்டும் என்று நகரும் இந்த குழாமின் அடுத்த படைப்பு 'குற்றம்'. அதற்கான பஸ்ட் லுக் போஸ்டரை படக் குழுவினர் வெளியிட்டுள்ளனர். குகனி, சித்தாரா, துவா, முரளி, கவிராஜ், ஹரிஸ் மற்றும் பலர் நடிக்கும் இக் குறும்படத்தினை திருடர் கூட்டம், குறும்படத்தை தயாரித்த LBM, Bros நிறுவனம் தயாரிக்கின்றது.

◆ மோகன்லால், கவுதமி ஜோடியாக நடிக்கும் படம், 'நமது'.
தமிழ், தெலுங்கு, மலை
யாளம் ஆகிய மொழிகளி
உருவாகிறது. தமிழில் 'நம
தெலுங்கில் 'மனமன்தா' எ
பெயரிடப்பட்டுள்ளது. சா
ஷிவானி வழங்க, வாரா
சலனசித்திரம் மற்றும் சா
கோரப்பட்டி புரொடக்
ஷன்ஸ் சார்பில் ரஜினி
கோரப்பட்டி
தயாரிக்கிறார்.

...பிடத்தின் காய்ச்சல்
...ல் இயக்குனர் ரஞ்சி
...டுத்த அடத்திற்கான
வெளியாகியுள்ளது.
...து அடுத்த படத்தை
...ர்யாவை ஹீரோவாக
...வைத்து இயக்குவதாக
தகவல்கள்
வெளியாகி
உள்ளன.

டி.சி
கொமிக்சின்
தயாரிப்பான சூப்பர்
மான் வேர்சஸ் பட்மான்
திரைப்படம் எதிர்பார்த்த
அளவு வெற்றியைக்
கொடுக்கவில்லை.



## 'கோமாளி கிங்ஸ்'
## முழுநீள நகைச்சுவைத் திரில்லர்

இலங்கையில் தமிழர் செறிந்துவாழும் பகுதிகளில் படமாக்கப்பட்டுள்ள இத்திரைப்படத்தை எழுதி இயக்கியிருக்கின்றார் இயக்குனர் கிங் ரட்ணம். 'கோமாளி கிங்ஸ்' இலங்கையில் வழக்கிலிருக்கும் ஐந்து தமிழ்ப் பேச்சு வழக்குகளை உள்ளடக்கியதாகவும் இலங்கை தமிழ் சினிமாவின் தனித்துவத்தைப் பிரபலிப்பதாகவும் அமைந்திருக்கின்றது.

மூத்த கலைஞர் ராஜா கணேசன், தர்சன் தர்மராஜ், நிரஞ்சனி சண்முகராஜா, கஜன் கணேஷன், சத்யப் ப்ரியா, இயக்குனர் கிங்ரட்ணம் ஆகியோர் கோமாளி கிங்ஸ் திரைப்படத்தில் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர். ஒளிப்பதிவாளர் மையா ஒளிப்பதிவு செய்ய அஞ்சலோ ஜோன்ஸின் படத் தொகுப்பிலும் ஸ்ரீராம் சச்சியின் இசையிலும் இறுதிக் கட்ட வேலைகள் இடம்பெற்று வருகின்றன. பிக்சர் திஸ் தயாரிப்பு நிறுவனத்தின் கீழ் பல தயாரிப்பாளர்களை உள்ளடக்கிய குழாம் 'கோமாளி கிங்ஸ்' திரைப்படத்தினைத் தயாரித்துள்ளது. சிரேஷ்ட அறிவிப்பாளரும் ஈழ திரை நட்சத்திரமுமான பி.எஹ். அப்துல் ஹமீத் இத் திரைப்படத்தின் கௌரவ வழிகாட்டியாகக் கைகோர்த்துள்ளார்.

"எனது வாழ்க்கை பொய்கள் நிறைந்தது, சுவாரஸ்யம் அற்றது, அதை சுவாரஸ்யமாக்க என்னை யாராவது கடத்தி சென்றால் நல்லது தான்" எனும் கருவை மையமாகக் கொண்ட கோமாளி கிங்ஸ் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் வெளியாகவுள்ளது.

## ...யின் பொன் வீதியில்

...அர்ஜுன் இயக்கத்தில் மகள் ஐஸ்வர்யா ...முகம் சந்தன் நடிப்பில் உருவாகிறது ...ான் வீதியில். அக்ஷன் கிங் அர்ஜுனிடம் ...ல் கதைகளில் இதுவும் ஒன்றாம். காதல் ...லும் அர்ஜுனுக்கு பிடித்த நாட்டுப்பற்று ...ம் படத்தில் உள்ளது என கூறியுள்ளார் ...அர்ஜுன்.



## அட்லி - அஜித்



விஜய்யை வைத்து 'தெறி' படத்தை அட்லி இயக்கினாலும் இயக்கினார். பார்க்கும் ரசிகர்களெல்லாம் எப்போ 'தெறி-2' எனக் கேட்டு நச்சரிக்கிறார்கள். ஆனால், அட்லி அஜித்தை வைத்து ஒரு படத்தை இயக்கும் முயற்சியில் இறங்கிவிட்டாராம். அஜித்தும் சிவா படம் முடிந்ததும் அட்லி படத்தில் நடிக்க முடிவெடுத்திருக்கிறாராம்.

...ரலட்சுமி கன்னடத்தில்
...'மாணிக்யா' வெற்றி
...ள்ளது. தற்போது
...ாளத்தில்
...ட்டியுடன்
...'கசாபா'
...தப்
...வர்கள்
...சுமியின்
...ப
...தால்
...வே
...னர்ச்சியாக
...றாராம்.
...வேகத்தோடு
...லும்
...மே
...ி
...வேன்
...கூறுகிறாராம்.



மோகன்லால்,
...கவுதமி ஜோடியாக
...க்கும் படம், 'நமது'.
...மிழ், தெலுங்கு, மலை
...ாம் ஆகிய மொழிகளில்
...ாகிறது. தமிழில் 'நமது',
...ங்கில் 'மனமன்தா' என்று
...ரிடப்பட்டுள்ளது. சாய்
...ானி வழங்க, வாராஹி
...னசித்திரம் மற்றும் சாய்
...காரப்பட்டி புரொடக்
...ன்ஸ் சார்பில் ரஜினி
கோரப்பட்டி
தயாரிக்கிறார்.

## முருகதாஸின் முயற்சி





மகேஷ்பாபுவை தமிழுக்கு கொண்டு வரேன் எனப் புலிப்பாய்ச்சலோடு வேலை பார்த்து வருகிறார் முருகதாஸ். ப்ரினிதி சோப்ராவை நாயகியாக்க முயற்சி செய்தார். படம் தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் தயாராவதால் இரண்டு மொழியுமே தெரியாத ப்ரினிதி சோப்ராவை நடிக்கவைப்பது கஷ்டம் என்பதால், அந்தத் திட்டத்தை கைவிட்டு விட்டார். அவருக்குப் பதில் தெலுங்கின் பிரபல நடிகையான ரகுல் பிரீத் சிங்கை ஒப்பந்தம் செய்து படப்பிடிப்புக்கு தயாராகி விட்டார் முருகதாஸ்.



# சைபர் மீன்கள்


எங்குமிருக்கிறது மகிழ்ச்சி




ஷாலினி நாதன்

எவரைப்போல இருக்கவும் முயலாதே..
எவரையும் பின்பற்றாதே..
அப்படிச் செய்தால் உன் இருப்பு போலியாகும்.
அது தற்கொலையை விட மோசமானது.
நீ நீயாக இரு!
அப்போதுதான் நீ ஆதாரப் பூர்வமானவராக
பொறுப்புள்ளவராக
உண்மையாக இருக்க முடியும்!

-ஓஷோ

## சுவரில் கொய்தவை

**Ramasamy Rajeswaran**

பொருளாதார மத்திய நிலையம் வேணுமான ஆக்கள் ஓடி வாங்கோ..!
-பிரதமர் ரணில் -

**Steephan Sansigan**

ஒரு போலியான மனப்பிறழ்வான ஒரு மனிதாபிமானமற்ற சமூகத்தின் சாட்சி தான் இந்த ஃபேஸ்புக்

**Sube Mjr**

பாலர் வகுப்பில படிச்சாலும்
பல்கலைக்கழகத்தில படிச்சாலும்
எப்படா வகுப்பவிட்டு வெளியவருவம்னு மட்டும்தான் தோனுது 😀😀😀

**Yogoo Arunakiri**

பேஸ்புக் நட்பில் இருத்து விலகிய பின்னரும் அவர் உங்களுக்கு லைக் பண்ணினால் அதற்கு பெயர் தான், வெளியில் இருந்து ஆதரவு கொடுத்தல்.
#சிலர்

**Ragul Sivayogaselvam**

"நாங்க காசு குடுத்து ரிக்கெற் வாங்குறதாலத்தான் இன்னைக்கு ரஜினின்னு ஒருத்தர் உருவானாரு"
டேய் செம்பு டப்பா தலையா...!! அது ரஜினி படம் என்றதாலத்தான் நீ ரிக்கெற் வாங்கி பார்க்குற. இதே பவர் ஸ்டார் ஹீரோவா நடிச்சா, ரிக்கெற் வாங்கி தியட்டர்ல போய் பார்ப்பியா??

**Priya Vincent Peris** feeling thoughtful.

எல்லா செயல்களும் தன் நோக்கங்களைப்
பிரதிபலிப்பதில்லை
நல்நோக்கம் கருதி உருவான செயல் தீச்செயலாகக் கூட
இருக்கலாம்
ஒரு பிரம்படியைப் போல...
ஒரு தண்டனையை போல...😊

**யதார்த் தன்**

இந்த மழைக்காலத்தை வரவேற்க உன்னிடமேதும்
கவிதைகளிருந்தால்
ஒற்றை நூலாய் ஒழுகும்
ஏதேனுமொரு தாவாரத்தில் ஈரலிக்க
வைத்து விட்டு
வா
நாம்
நம்முடைய முதலாவது மழைக்காலத்தை
பேசத்தொடங்குவோம்.

**Briyanthy Arumaithurai**

இளம் பிள்ளையள் அழகா இருக்கோணும் எண்டு சமூகம் எதிர்பார்க்கும் எண்டதால விடிய வெள்ளன வேளைக்கா எழும்பி ஒரு 2 மணித்தியாலமா ƒபவுண்டேசன், கிரீம், மஸ்காரா, ஐலைனர் எண்டு ஏகப்பட்ட மினக்கடல்கள் மினக்கட்டு பளிச்செண்டு வெளிக்கிட்டு றோட்ல இறங்கினா...ஒரு அரை கிலோமீற்றர் ப்பிரஸ்ஸா வந்திருப்பன். car, bus motorbike எண்டு ஏகப்பட்ட வாகனங்கள் கடந்தும் முந்தியும் போகுது சரி போகட்டும் இப்ப என்ன அவசரம் பொறுமையா போவம் எண்டு போனா, முந்திக்கொண்டு போன மினிபஸ் ஒண்டு புகைய தள்ளிச்சுது பாருங்கோ முழு புகையும் கிரீம் பூசின என்ர மூஞ்சில தான். நீங்கள் சூழல நாசமாக்கிறது பற்றி எனக்கு எந்த பிரச்சினையும் இல்ல எதுக்குடா என்ர மேக்கப்ப பாழடிச்சிங்கள்.



## நெருப்புடா ! தமிழன்டா !

### தமிழ் மாணவர்கள்


**சில மணி நேரங்களின் பின்**

இந்த படத்தில் உள்ள இளைஞர்கள் சிங்கள மாணவர்கள் என்று தெரிந்த பின் அப்படியே தலைகீழாக மாறினார்கள் நம் உலக தமிழ் மக்களில் அந்த சிலர்.

"பாருங்க சார் பாருங்க புடிச்சு ஜெயில்ல போடுங்க. எப்பிடி தடியத் தூக்கிக் கொண்டு நிக்கிறாங்கள்"

★ இனவாதிகள்.
★ வன்முறையாளர்கள்.
★ ரவுடிகள்.

(இதை பற்றி நீங்களே... சிந்தித்து முடிவெடுங்கள் மக்களே)




### சிங்கள மாணவர்கள்

இந்தப் படத்தைப் பார்த்தவுடன் பொங்கிய உலக வாழ் மற்றும் உள்ளூர் வாழ் இணையத் தமிழ் மக்கள் சிலர் தங்கள் இன மானத்தைக் காப்பாற்றிய தேசிய ஹீரோக்களாக இந்த இளைஞர்களைக் கண்டார்கள் - அவர்களை நெருப்பென்றும் தமிழனென்றும் புகழ்ந்து வாழ்த்துப் பாக்களை எழுதினார்கள்.

**இதன் போது அவர்கள் பாடிய சில கம்பஸ் பரணிகள்**

"ஆற்ற இடத்தை வந்து ஆர் சீனாப் போடுறது.."
"இது எங்கட கம்பஸ்"
"பழகிப் பார் பாசம் புரியும் எதிர்த்துப் பார் வீரம் தெரியும்"
"பதினாலு நாடு சேர்ந்து அடிச்ச போதும் ஒத்தையா நிண்டு எதிர்த்தவன்டா தமிழன்"



ஒரு மனுஷன் பிரியும் போது
அவன் தாய் அழுதா அவன் ஒரு நல்ல மகன்
அவன் பிள்ளைக அழுதா அவன் ஒரு நல்ல தகப்பன்
அவன் பிரிவுக்காக ஒரு நாடே அழுதா...
அவன் ஒரு நல்ல தலைவன்!




**Mynthan Shiva**

நண்டை இவ்வளவு நாளும் குழம்பு வைச்சு சாப்பிட்டுத்தான் பழக்கம்.போன கிழமை மலிவா நண்டு கிடைச்சதெண்டு ப்ரெண்ட்டிட்ட சொல்ல, "நண்டுப்பொரியல் ட்ரை பண்ணிப் பாத்தனியே? சூப்பரா இருக்கும்" எண்டான் அவன்.சரியெண்டு நாளைக்கு குழம்புக்கு ரெடியா இருந்த நண்டில ரெண்டு நண்டை எடுத்து பொரிச்சு சாப்பிட்டுப் பாத்தேன் அவ்வ்..செம செம.

எண்டாலும்,அந்த நண்டுகுழம்பில் ஊறின நண்டுக்காலை சூப்பிற சுகம் இதில இல்லை எண்டதாலயும்,புட்டோட பிரட்டி சாப்பிட அந்த நண்டுக்குழம்பு கிடைக்காது எண்டதாலயும்.

நண்டோட உச்சபட்ச சுவை,நண்டுக் குழம்பிலேயே தங்கியிருக்கிறது என்ற முடிவுக்கு சமூகம் வருகிறது.




## இந்தவார மீம்ஸ் (Meme)

பாமிண்ட் வரட்டும்... பாமிண்ட் வரட்டும்...






பக்கத்து வீட்டுகாரன்
காய்ச்சல்ல
இருக்கான்னு பாக்க
போனேன்...

என்னையா.... உடம்பு
இப்படி
கொதிக்குது???? ன்னு
கேட்டா

*நெருப்புடா.....*

*கபாலிடா.....*ங்குறான்

*சாவுடா.....* ன்னு

சொல்லிட்டு
வந்துட்டேன்
😀😂😀😂😊😀😂😀😀

**இணையவாசிகளுக்கு**
உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள்.
சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும். https://www.facebook.com/puthuvithieditorial/

# டியர் புலம்பெயர் 'டமில்ஸ்...!'

தணிகன்

தற்போது யாழ்ப்பாணம் புலம்பெயர் தமிழர்களால் நிறைந்து வழிகின்றது. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் தற்போது கோடை விடுமுறை என்பதால் வழமை போல் தாய் நாட்டு ஞாபகம் வந்துவிடுவதால் குடும்பத்துடன் கோடை விடுமுறையை கழிக்க வந்துவிடுவார்கள். வருடா வருடம் இல்லாவிடினும் குறைந்தது இரண்டு வருடத்துக்கு ஒரு முறையேனும் கோடை விடுமுறைக்கு தாய் நாட்டு பாசம் வந்துவிட வேண்டும் என்பது அவர்கள் தமக்கு தாமே வகுத்துக் கொண்ட விதியாகும்.

அதிலும் புலம்பெயர் தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகக் கொண்டவர்கள். இன்றைய நாட்களில் யாழ்ப்பாணத்தில் வெளியில் எங்கு சென்றாலும் நாம் காண்போரில் பெரும்பாலும் புலம்பெயர் தமிழர்களாகவே உள்ளனர். என்னதான் தங்களது உயிர்ப்பயம், வாழ்வாதாரம் என்று பல காரணங்களால் வெளிநாடுகளுக்கு சென்று தஞ்சமடைந்திருந்தாலும், இருபது முப்பது வருடங்கள் கழித்தாவது என் சொந்த இடத்துக்கு போக வேண்டும், இனசனத்தை பார்க்க வேண்டும், அவர்களுடன் கொஞ்ச நாட்டின் எந்தவொரு அலகுடனும் இயைந்து போக மறுக்கின்றனர். தாய் நாட்டின் மண் கூட காலில் படுவதில்லை. பட்டுவிடக் கூடாது என்பதில் அவ்வளவு கவனமாக இருக்கின்றனர். புழுதிக்காற்று, சுட்டெரிக்கும் வெயில், கற்கள் நிறைந்த செம்மண் வீதிகள் இப்படி சில யாழ்ப்பாணம் என்ற சொல்லுக்குள்ளேயே அடங்கிவிடுகின்றன.

திரும்பி வரும் உறவுகளில் முதலாம் தலைமுறையினர் இங்கு பிறந்து வளர்ந்து அங்கு சென்று குடியேறியவர்களே. அவர்களுக்கு இது தெரிந்தும் இவையெல்லாம் ஏதோ புதியவை போலவும் தமக்கு பழக்கப்படாத ஒன்று போலவுமே நடந்து கொள்கிறார்கள். அவர்களது அடுத்த தலைமுறையினர் வெளிநாடுகளில் பிறந்து வளர்ந்திருக்கும் பட்சத்தில் அவர்கள் எம் சூழலுக்கு புதியவர்கள், பழக்கமில்லாதவர்கள் என்பதை ஓரளவுக்கு ஏற்கலாம்.

திரும்பிவரும் புலம்பெயர் உறவுகள் எதற்காக இங்கு வருகிறார்கள் என்று யோசிக்க வைத்துவிடுகிறார்கள். மீண்டும் எம் தாய்மண்ணையும் உறவுகளையும் பார்க்க உறவாட வருகின்றோம் என்று கூறிக்கொண்டு கதைபேச்சுகளும் எம்மை மிகவும் எரிச்சலூட்டும் விதமாகவே அமைகின்றன. பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் வந்தவுடன் எம்மிடம் எழுப்பும் கேள்வி ஒன்று இருக்கின்றது. “எப்பிடி தான் இங்க இருக்கிறீங்களோ?” யாழ்ப்பாணத்திலேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்துவரும் எம்மிடம் அந்நிய நாட்டவன் இந்த கேள்வியை கேட்டாலே கோபப்படும் எம்மிடம் யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்து விட்டு இடையில் வெளிநாடு போய் வாழ்ந்து வரும் இவர்கள் கேட்கும் போது கோபத்துக்கும் மேலாக எரிச்சல் தான் ஏற்படுகின்றது.

இடையில் ஏதோ இருபது வருடங்கள் வெளிநாடு ஒன்றில் போய் வாழ்ந்து குடியுரிமை பெற்றுவிட்டால் பிறந்த தாய்மண் கூடவா மறந்துவிடும்? மறந்தாலும் பரவாயில்லை, ஆனால் யாழ்ப்பாணம் ஏதோ பஞ்சப்பட்ட நிலம் போலவும். இங்கு வாழ்பவர்கள் படிப்பறிவற்றவர்கள் போலவும் நினைத்து கதைப்பதையே இவர்கள் வழக்கமாக வைத்துள்ளனர். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் அவர்கள் வாழுவதைவிட மிகவும் சிறப்பாகவும் தன்மானத்துடனேயே





நாட்களாவது தங்கி மகிழ வேண்டும் என்று யாழ்ப்பாணம் வரும் புலம்பெயர் தமிழர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

நாடு திரும்பும் பெரும்பாலான புலம்பெயர் தமிழர்கள், தாம் இந்த மண்ணில் தான் பிறந்தவர்கள் என்பதை மறந்து சுற்றுலா பயணிகளாகவே மாறிவிடுகின்றனர். தாம் ஏதோ ஒரு புதிய நாட்டிற்கு வந்திருப்பது போலும் இங்குள்ள மனிதர்களையும் விடயங்களையும் அந்நியமான ஒன்றாகவே பார்க்கின்றனர். சுற்றுலாப் பயணிகளாக மாறினாலும் அடிக்கடி தமிழர் என்ற எண்ணமும் எட்டிப் பார்ப்பதால் அவர்களால் முழுமையான சுற்றுலாப் பயணிகளாயும் இருக்க முடிவதில்லை; மண்ணின் மைந்தர்களாகவும் இருக்கவும் முடிவதில்லை. இரண்டுக்கும் நடுவில் ஒரு இரண்டும் கெட்டான் நிலையிலேயே இருக்கின்றனர்.

எத்தனையோ வருடங்களின் பின்பு தாய் நாட்டுக்கு வந்திருந்தாலும் தாய் வருவோரில் பெரும்பாலானோர் அதற்கு எதிர்மறையாகவே நடந்து கொள்கிறார்கள். கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இறங்கியவுடன் ஒரு குளிரூட்டப்பட்ட வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்துவதில் தொடங்குகின்றது அவர்களது நிகழ்ச்சிநிரல்.

இலங்கை வந்தவுடனேயே யாழ்ப்பாணம் வந்துவிடுவதில்லை. கொழும்பில் குறைந்தது நான்கு நாட்களாவது எதாவது ஒரு விடுதியில் தங்கித்தான் வருகின்றனர். ஏனென்றால் நேர வித்தியாசம் பழக்கப்பட வேண்டுமாம். ஏன் அவைகளெல்லாம் யாழ்ப்பாணத்துக்கு வந்த பிறகு பழக்கத்துக்கு வராதா?

இங்கு வந்தாலும் சொந்த வீடு, உறவுகள் இருந்தாலும் அவர்களுடன் தங்குவதில்லை. தங்குவதில் ஆர்வம் காட்டுவதுமில்லை. இங்கு வந்த பிறகும் பெருமளவானோர் ஹோட்டல்களில் தான் தங்குகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களது நடவடிக்கைகளும் யாழ்ப்பாணத்து மக்கள் இன்னமும் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை புலம்பெயரிகள் புரிந்துகொள்ள வேண்டும். புத்திஜீவிகள் நிறைந்த நிலமாகவும் இருக்கிறது. அங்கிருந்து வரும் நீங்கள் தான் எமக்கு படிப்பிக்க வேண்டுமென்ற எந்த அவசியமும் இல்லை.

அடுத்து அறிவுரை என்ற பெயரில் அவர்கள் செய்யும் அலப்பறைகளை தாங்க முடியாது. புலம்பெயர் தமிழர்கள் என்பதாலோ, இல்லை அவர்கள் குடியுரிமை பெற்ற நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகள் என்பதாலோ மட்டும் புலம்பெயரிகள் எம்மை விட மேலானவர்கள், உயர்ந்தவர்கள், சிறந்தவர்கள் என்று அர்த்தமில்லை. ஒவ்வொருவரினதும் தரத்தை தீர்மானிப்பது அவர்களது கல்வியும் பழக்க வழக்கங்களுமே தவிர அவர்கள் வாழும் இடமல்ல. இது இங்கு வரும் பெரும்பாலான புலம்பெயர் தமிழருக்கு தெரிவதில்லை.

அறிவுரை என்ற பெயரில் “இதை அப்படி செய், இதை இப்படி செய், இதை செய், இதை செய்யாதே” என்று தேவையில்லாமல் ஏதாவது நிச்சயம் சொல்வார்கள். நாம் கூட விருந்தோம்பலில் சிறந்தவர்கள். உறவுகளுக்கு மதிப்பு கொடுத்தே பழகியவர்கள். வந்த விருந்தாளிகள் மனம் புண்படாதவாறு நடந்துகொள்பவர்கள் என்பதால் நாமும் வேறு வழியின்றி அவர்களின் அறிவுரையைக் கேட்பதுமுண்டு. ஆனால் அவர்களோ ஒன்றை சொல்லி விட்டு பத்து நாட்களில் சென்றுவிடுவார்கள். அதற்கு பிறகு கஷ்டப்படப் போவது நாங்கள் தான். எனவே திரும்பிவரும் நீங்கள் தயவு செய்து உங்களது அறிவுரைகளை உங்களுடனேயே வைத்திருங்கள்.

இதுவரை காலமும் சிறப்பாக வாழ்ந்த எமக்கு தொடர்ந்தும் சிறப்பாக வாழத்தெரியும்.

**(அடுத்த வாரமும் பேசுவோம்...)**

சிறுகதை



இப்படிப்பட்டவன் திடீரென்று ஒரு நாள் முகத்தைக் கடுகடுவென்று வைத்திருந்தான். தன்னுடைய நெருங்கிய நண்பர்கள் இருவர் பேயோட்டிகளால் கொல்லப்பட்டதாகச் சொன்னான். தனக்கும் அதைப் போன்ற துர்மரணம் காத்திருப்ப தாகவும், வேலையை விட்டு விலகி அவளை ஊருக்கு அழைத்துச் சென்று வாழ விரும்புவதாகவும் கூறிப் புலம்பினான்.

# பாழ்வெளி

○ உடுவில் அரவிந்தன்

காற்றுக்கூட இலகுவில் புகமுடியாத இந்த இடத்தில் நான் நீண்டகாலமாக அடைபட்டுக் கிடக்கிறேன். இங்கு ஆரம்பத்தில் எனக்குத் தொந்தரவுகள் அதிகமாகவே யிருந்தன. கரிய நிறமான வண்டு களும், துர்நாற்றமுடைய வெள்ளைப் புழுக்களும் மேலும் கீழும் ஊர்ந்து திரியும். அவ்வேளைகளில் அவற்றை யெல்லாம் சகித்துக் கொள்வதைத் தவிர வேறுவழிகள் இருந்ததில்லை.

சீழ்போன்ற மஞ்சள் நிறமான திரவம் என்னுடைய காயங்களிலிருந்து எப்போதும் வடிந்து கொண்டிருக்கும். அந்தத் திரவத்தை உப்புமண் உறிஞ்சிக் குடிக்கின்ற ஒலியைக்கூட நான் உணர்ந்திருக்கிறேன். ஒரு கண நேரச் சுவாசத்துக்காக நான் திணறித் துடித்த கடினமான பொழுதுகள் அவை.

இப்போது எனக்கு எல்லாமே பழகிவிட்டது. புற உணர்ச்சிகள் முற்றாக அற்றுப் போனதால் என்னால் வலிகளை உணரமுடிவதில்லை. என்னுடைய அம்மா நேர்ந்து கட்டி விட்ட செப்புத்தகடு மட்டும் மினுக்கம் குறையாமல் அப்படியே இருக்கிறது. எனக்கு மட்டுமே சொந்தமான எல்லாவற்றோடும், என்னுடைய கொலுசுகளையும் சேர்த்துக் களவாடியவர்கள் இந்தத் தகட்டை மட்டும் எடுக்கவில்லை.

இந்தச் செப்புத் தகட்டைப் பார்க்கும் போது அம்மாவின் நினைவுகள் பொங்கியெழுவதைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கிறேன். அவளுக்காக ஒரு துளி கண்ணீரைக்கூட வெளிப்படுத்த இயலாது வெறுங்கோதாகவே துவண்டு கிடக்கிறேன்.

எனக்கு ஏன் அவ்வாறு நிகழ்ந்தது? கடந்த காலக் கொடூரங்களின் அழுத்தமான பதிவுகளை நான் நன்கு அறிந்தவள். அந்த அனுபவங்களின் அருட்டுணர்வுடன் என்னால் இலகுவாகத் தப்பித்திருக்க முடியும். ஆனாலும், நானாகவே இங்கு சிக்கிக் கொண்டேன்.

அந்த அவல நிகழ்வின் சலனங்கள் என்னுடைய மனத் திரையில் தாறுமாறாக உலாவுவதைப் போன்ற காய்வில் அமிழ்கிறேன்.

★★★

புராதனமான இந்தப் பெரு வெளியின் சர்வவல்லமை பொருந்திய காவலர்களாக அவர்கள் தங்களைக் காட்டிக் கொண்டார்கள். இங்குள்ள மயானத்தின் கரிய புகை சுருளாக அலைந்து உறைகின்ற சதுப்பு நிலங்களில் கூடாரங்களை அமைத்துக் குடியேறினார்கள். அந்தக் கூடாரங்களுக்கு நடுவே தங்களுடைய கடவுளைப் பெருங்கல்லாக இருத்தி னார்கள். சுத்திகரித்தல் என்ற வடிவத்தில் தமக்குத் தேவையான எல்லாவற்றையும் அவர்களால் பெற்றுக் கொள்ள முடிந்தது.

புன்னகை சிந்துகின்ற அழகான முக மூடிகளை அவர்கள் பகலில் அணிந்து கொள்வார்கள். இருட்டத் தொடங்கியதும் பேய்களைப்போலக் கொடூர வடிவங் கொள்வதாகவும், வீதியில் எவராவது தனியாகச் சென்றால் உருவேறிக் கூத்தாடுவ தாகவும், அவர்களுடைய கூக்குரல்கள் முள்ளந் தண்டைச் சில்லிட வைப்பதாகவும் தூரத்துக் கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் கூறிக் கொள்வார்கள். சாதாரணமானவர்கள் இரவு வேளைகளில் செல்வதற்கு அஞ்சுகின்ற நிலப்பரப்பாக இந்தப் பரந்தவெளி தன்னை அடையாளப் படுத்திக் கொண்டது.

அகாலவேளைகளில் அந்த வீதியைக் கடக்கின்ற பேயோட்டிகள் அவர்களை அடித்து விரட்டுவார்கள். பேயோட்டிகள் தாக்கும் போது தப்பிச் செல்கின்ற அவர்கள், பின்னர் திரும்பி வந்து வழிப்போக்கர்களை மிதித்துச் சிதைப்பார்கள்.

பேயோட்டிகள் அவர்களைக் கனவிலும் கூடத் துரத்திக் கொண்டிருந்தார்கள். அதனால் பேயோட்டிகளை அழிப்பது மட்டுமே தங்களுடைய பிரதான நோக்கம் என்று எல்லோருக்கும் சொல்லிக் கொண்டார்கள். ஆனாலும், பேயோட்டிகளை அவர்களால் இனங் காண முடிந்ததில்லை.

பாடசாலைக் கல்விக்காகவும், தனியார் வகுப்புக்களுக்காகவும் நான் ஒவ்வொரு நாளும் நகருக்குச் சென்று வருவேன். பேருந்துக்கள் ஒழுங்காக ஓடத் தொடங்காத இறுக்கமான காலப்பகுதியில் துவிச் சக்கர வண்டியொன்றே எனக்குத் துணையானது. சிலவேளைகளில் ஓரிரு நண்பிகள் என்னுடன் கூடவருவார்கள்.

என்னுடைய அம்மா நயினாதீவு அம்பாளிடம் வேண்டிக்கொண்டு செப் புத் தகடொன்றைக் கட்டிவிட்டாள். உயர்தரப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைவதற்கான பிரார்த்தனை என்று நண்பிகள் என்னைக் கேலி செய்தார்கள். ஆனால், அதைக் கட்டியிருக்கும் காரணம் எனக்கும், அம்மாவுக்கும் மட்டுமே தெரியும்.

நகரை நோக்கிய பயணங்களின் போது தான் அவர்களுடைய முகங்கள் எனக்கு அறிமுகமாயின. அந்தச் சந்தி யில் அவர்கள் ஐந்துபேரை எப்போதும் காணக் கூடியதாக இருந்தது.

வீதியில் படபடக்கும் வெண்ணிற மான வண்ணத்துப் பூச்சிகளைக் கூட அவர்கள் துரத்தித் திரிவதை நான் கண்டிருக்கிறேன். அந்தப் பூச்சி களின் வெவ்வேறான பருவங்களை யெல்லாம் அவர்கள் பொருட்டாகக் கருதவேயில்லை. வண்ணத்துப் பூச்சி களைச் பிடிப்பதன் மூலம் பேயோட் டிகள் பெருகுவதைக் குறைக்கலாம் என்றும் சொல்லிக் கொண்டார்கள்.

அவர்கள் பேசுகின்ற அந்நியமொழி என்னைப் பின்தொடர்ந்து வதைக்கும். அந்த மொழி என்னை ஒரு போதுமே வசீகரித்ததில்லை. அவர்களைப் போலவே அதுவும் கரடுமுரடாக இருப்பதாக எனக்குத் தோன்றும். அவர்கள் என்னைப் போகவிடாது தடுத்து நிறுத்தி, வித்தாரக் கதைகள் பேசி நேரத்தை கடத்துவார்கள். தமது விசாரிப்புக்களுக்கிடையே உணர்வு பூர்வமான கோரிக்கைகளையும் முன் வைப்பார்கள்.

அவர்களில் உயரமான ஒருவன் என்னுடைய மொழியைக் கொச்சையாகப் பேசப் பழகிக் கொண்டான். மலைகள் நிரம்பிய நகரத்தின் பிரபலமான குடும்பத்தைச் சேர்ந்தவனென்றும், தனக்கு மூன்று சகோதரிகள் இருப்பதாகவும் சொல்லிக் கொண்டான். பேயோட்டிகளை அழிப்பதற்காகத் தானாகவே விரும்பி இந்த இடத் துக்கு வந்ததாகக் கூறினான். நான் அவனிடம் எதுவுமே பேசுவதில்லை. துவிச்சக்கர வண்டியை உருட்டிச் செல்ல வேண்டிய தூரம் வரைக்கும் அவனுடைய வேண்டுதல்கள் தொடர்ந்தபடியிருக்கும்.

சில வேளைகளில் விலையுயர்ந்த பரிசுப் பொருள்களுடன் அவன் எனக்காகக் காத்திருப்பான். நான் அவனிடம் எதையும் பெற்றுக் கொள்வதில்லை. அப்போதெல்லாம் அவனுடைய முகம் வாடிச் சுருண்டு விடும். அவனைப் பற்றிய மென்மையான உணர்வுகள் எனக்குள் ஒரு போதும் பிரவாகிப்பதேயில்லை.

இப்படிப்பட்டவன் திடீரென்று ஒரு நாள் முகத்தைக் கடுகடுவென்று வைத்திருந்தான். தன்னுடைய நெருங்கிய நண்பர்கள் இருவர் பேயோட்டிகளால் கொல்லப்பட்ட தாகச் சொன்னான். தனக்கும் அதைப் போன்ற துர்மரணம் காத்திருப்ப தாகவும், வேலையை விட்டு விலகி அவளை ஊருக்கு அழைத்துச் சென்று வாழ விரும்புவதாகவும் கூறிப் புலம்பினான்.

அப்போது நான் எதையுமே காதில் போட்டுக் கொள்ளாமல் நடந்தேன். இரண்டு மாதங்களில் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையுடன் இந்தத் தொல்லைகளிலிருந்து விடுபடலாம் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது.

இப்படியான ஒரு நாளின் பின் மாலைப் பொழுதில், நிலமெங்கும் மழைக் கம்பிகளை இருள் ஊன்றிக் கொண்டிருந்தது. நான் மிகுந்த அவதானத்துடன் வீடுநோக்கி வந்து கொண்டிருந்தேன். திடீரென்று இந்த வெளி அந்நியமாகிப் போனதுபோல உணர்ந்தேன். உயிர்ச் சுவடுகள் எது வுமற்ற சூனியப் பிரதேசமாகவே இது தென்பட்டது. என்னுடைய மனம் அம்பாளைப் பிரார்த்திக்கத் தொடங்கியது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# மாயாவின் டயரி



மாயா

-பார்க்கப்படாத பக்கங்கள்-

## அன்பின் டயரி!

இந்த உலகைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக் களைத்துப் போய் முதலில் என்னை நான் உணர்ந்துகொண்டு வாழலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளேன். இந்த சமூகத்தில் எத்தனை தவறான முற்கற்பிதங்கள் பெண்ணுக்கு வகுக்கப்பட்டுள்ளன என்பதை கணக்கெடுத்தால் மலையளவு குவியும். ஒவ்வொன்றையும் எண்ணி எண்ணிக் கழித்தலிலேயே நாட்கள் நகர்கின்றன.

இன்று என்னுடைய உறவுக்கார பெண்ணொருத்தியை எதிர்பாராத விதமாகச் சந்தித்தேன். இருபதுகளின் நடுப்பகுதியை தாண்டிய வயதிருக்கும். இருப்பினும் அதற்குள் வாழ்க்கையில் பாதியை துன்பமாக கழித்து மீதியை வாழ்வதற்காகப் போராடிக் கொண்டிருந்தாள். இருபதின் தொடக்கத்தில் காதலித்தாள். அவசரமாகத் திருமணமும் முடித்துக் கொண்டாள். இரண்டு குழந்தைகளின் பின் அவசரமாக விவாகரத்தும் செய்து கொண்டாள். மீண்டும் போராடி மீதிப் படிப்பை முடித்து ஒரு வேலையையும் தேடிக் கொண்டாள். ஒரு வகையில் அவள் துணிவைப் பாராட்டியே ஆகவேண்டும். விவாகரத்தின் பின் ஒரு பெண் எவ்வளவு துணிவாக தன்னம்பிக்கையோடு இருக்க வேண்டும் என்று அவளைப் பார்த்துத்தான் அறிந்து கொண்டேன்.

அது ஒரு புறம் இருக்க, விவாகரத்து என்கின்ற ஒரு விடயம் அவ்வளவு இழிவானதா? மனதளவில் பிளவு ஏற்பட்ட பின் அந்த உறவை சகித்துக் கொண்டு யாரோ ஒருவர் சுயத்தை இழந்து வாழ்வதற்குப் பதில் விவாகரத்து செய்து தனியாக தன்னிறைவோடு வாழ்தலே சிறந்தது என்பேன்.

சமீப நாட்களில் நடிகை அமலாபாலின் விவாகரத்து செய்தியை அவருடைய புகைப்படமொன்றுடன் ஒரு செய்தித்தளம் பிரசுரித்திருந்தது. நடிகைகள் விவாகரத்து என்னும் செய்தியைக் கேட்டவுடன்தான் விழுந்தடித்து ஓடிப்போய் "உனக்கெல்லாம் இது வேணும்டி" "பத்துப் பேருக்கு உடம்ப காட்டினா இப்பிடித்தான்" பொண்ணுன்னா எப்பிடி இருக்கோணும் எண்டு கத்துக்கோ" "இந்த மாதிரியெல்லாம் டிரஸ் போட்டா புருஷன் விட்டு போறதுல தப்பில்ல" "நீ எல்லாம் பத்தினியே கிடையாது" இதைவிட படுமோசமான தரங் குறைந்த வார்த்தைகளாலான கருத்துக்களை பதிவிடுபவர்களைப் பார்க்கும்போது ஒன்று மட்டும் புரியவில்லை இவர்கள் குடும்பப் பெண்களுக்கு அல்லது இவர்கள் சார்ந்த பெண் ஒருவருக்கு ஒரு விவாகரத்து நிகழ்ந்தால் இவர்கள் அதை எவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள்? இல்லை, கொன்று புதைத்து தங்கள் பண்பாட்டை கட்டிக் காத்துக் கொள்வார்களா?

வாழ்நாள் முழுவதும் கற்பு என்கிற பாரத்தை பெண் மேல் போர்த்தித் திணிக்கும் செயலைத்தான் இந்த சமூகம் செய்து கொண்டிருக்கிறது. அந்த புனிதங்களைக் கட்டவிழ்த்து வாழவேண்டியது பெண்களின் கடப்பாடு.

விவாகரத்தின் பின்பு பெண்ணுக்கு வாழ்க்கையே இல்லையா? அதுவும் நடிகைகள் என்றால் உடலை விற்றுத்தான் பிழைக்க வேண்டும் என்கின்ற கருத்தியலோடே இருக்கின்றனர். என்ன துர்பாக்கியம். ஒரு நடிகன் காலம் முழுதும் நடிகனாகவே இருக்கின்றான். நடிகை ஒரு கட்டத்துக்கு மேல், "காணும்... காணும், போய் குடும்பத் தலைவியா இரு" என்று தள்ளப்படுகின்றாள். பிறப்பை நிகழ்த்தும் கர்த்தாவான பெண்ணால் ஏன் சமத்துவத்தை அடைய முடியவில்லை? அப்படியே பெண் முன்னேற்றம் அடைந்தால் அதை பல ஆண்களால் என் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை? எல்லா ஆண்களையும் அந்த வகைப்பாட்டிற்குள் அடக்கிவிட முடியாது. பெண்ணிற்கு ஒரு கட்டத்துக்கு மேல் உடலியல் தேவைகள் தீர்ந்துவிடும் என தாமாகவே தீர்மானிக்கின்ற இந்த நிலையை என்னவென்று சொல்வது?

அப்படி இருக்கையில் இந்த சாதாரண பெண்களின் விவாகரத்து எவ்வளவு அச்சுறுத்தலுக் குரியது. அதுவும் விவாகரத்திற்குப் பின் வேறொருவரை திருமணம் செய்து விட்டால் "அவளுக் கென்ன நேரத்துக் கொருத்தன்" என்றும் திருமணம் செய்யாமல் தனியே வாழ்ந்தால் அவள் தனிமையை சுரண்டி துடிக்க வைத்து மகிழ்வுறல் என்னும் வேலையைத்தான் பண்பாட்டின் பெயரில் திணித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை யாருணர்வார்?!

நான் வாழும் சமூகத்தில் எத்தனையோ விவாகரத்தான மற்றும் கணவனை இழந்த பெண்கள் துணிவாக வாழ்வதையும் அவர்கள் வேலைக்குச் சென்று வாழ்வதையும் கண்டு புருவம் உயர்த்தியிருக்கின்றேன். ஒரு நடிகையும் அதைத்தானே செய்கின்றாள். அவள் தொழில் நடிப்பு. அதை அவள் தொடர்கின்றாள். அதில் வசை பாட ஒன்றும் இல்லை. இப்படி வசைபாடுபவர்கள் யார் என்று பார்த்தால் பத்திரிகையை வாங்கியவுடன் நடுப்பக்கத்தைப் புரட்டி கவர்ச்சிப் படங்களில் கண் நனைக்கும் கனவான்கள்தான்.

வாழ்க்கை எவ்வளவு கொண்டாட்டத்திற்கு உரியது! ஆனால் அதை நம் போன்ற பெண்கள் திண்டாட்டத்துடனேயே கழிக்கின்றோம். நாகரிக வளர்ச்சி என்பது சிந்தனையில் இருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். ஆனால் நாம் சிந்திப்பதைத் தவிர ஏனைய அனைத்து நாகரிக வளர்ச்சியையும் உள்வாங்குகின்றோம். என்ன செய்வது நம் மனக் கட்டமைப்பு அப்படி. இனியும் கற்பில் சிறந்தவள் கண்ணகியா சீதையா போன்ற பிற்போக்குத்தனமான விவாதங்களை விடுத்து அனைவருக்கும் வாழ்வை அனைத்து நிலையிலும் அனுபவித்தலுக்கான உரிமை உண்டு என்பதை உணர வேண்டும். விழுவது தவறில்லை. விழுந்தே கிடப்பதுதான் தவறு. என் பாதங்கள் தொடரும் பயணத்தில் முடிந்தால் துணிவிருந்தால் எவராவது கை கோர்க்கலாம்.

**சுயமரியாதையற்று தான் ஒரு இணைவில் இருந்தாக வேண்டுமெனில்**

# கறிவேப்பிலைக் காட்டுக்குள்ளே...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நாட்களை வாயூறுகிறார்கள் வலைப்பாட்டு ஆட்கள்.

இப்பொழுது முத்துக்குளியல் இல்லையென்றாலும் அட்டைப் பட்டிகள் உண்டு. அட்டைப்பிடிப்பு பண்ணையாக நடக்கிறது. என்றாலும் முன்னரைப் போல அல்ல. கடலட்டைக்கு விருப்பமான உணவு வெண் மணலும், பெருமணலுமாகும். 80 களுக்குப் பின் கடலட்டை அருகியதற்கான காரணம் ட்ரோலர் தொழில். "இப்ப கடற்கரையே யுத்தத்தோடு மாறிப் போச்சு" என்கிறார்கள், கடலோடிகள். அவர்களுடைய துறையில் சில காலம் படையினர் இருந்தார்கள். பிறகு கடற்கரையில் காவல் என்றார்கள். இப்பொழுது ஊரில் நிலை கொண்டிருக்கிறார்கள். என்னவோ தங்களுக்கும் ஊரில் பங்கு என்ற மாதிரி எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. இதைப் பற்றி யாரிடம் நியாயம் கேட்க முடியும்?

வலைப்பாட்டுக் கடற்கரை வெண் மணல் மேடுகளால் ஆனது. ஆமைகளுக்குக் கொண்டாட்ட மான கடற்கரை. வெண்மணற் படுக்கைகளில் தான் ஆமைகள் முட்டையிடும். கரையோர வெண் மணலும் ஆமைப் படுகையும் ஒரு தனிச் சிறப்பு. ஆமைகள் சினைப் படுகிற, முட்டையிடுகிற காலத்தில் கரையோரத்தில் கண்டபடி தொழிலாளிகள் நடப்பதில்லை.

ஆனால், யுத்தம் வந்தபிறகு சப்பாத்துக் கால்களின் நடமாட்டத்தினால் சில இடங்களில் ஆமை இனப் பெருக்க இடங்கள் அழியத் தொடங்கி விட்டன. இப்பொழுது அங்கொன்று இங்கொன்று என எங்காவது ஆமைகளைக் காணலாம்.

யாழ்ப்பாணம் கல்முனை அதற்கு மறு வளத்தில் பாஷையூருக்குத் தெற்கே - சின்னவேலி, பெரியவேலி, கௌதாரிமுனை பள்ளிக்குடா தொடக்கம் நாச்சிக்குடா.. இரணைதீவு வரையில் தொழிற்பாடுகள் வளமாயிருந்ததுண்டு. இப்ப ட்ரோலர்கள், ஒரு பக்கம் தொல்லை. பெரிய படகுகள் இன்னொரு பக்கத்தில் கரைச்சல். வெளியிடத்து மீனவர்களின் எல்லை மீறல்கள்... இப்படியே ஒரே பிரச்சினைதான்.

வலைப்பாட்டுக்கு மேற்கே நாக முனை. அதற்கும் மேலே பாலைதீவு. பாலைதீவு அந்தோனியார் கோயில் ஆண்டுக்கொரு திருவிழாக்காணும். ஒரு நாள் பெருநாளுக்கு குருநகர், பாஷையூர், இரணைதீவு, பள்ளிக்குடா, நாச்சிக்குடா, வலைப்பாடு, கிராஞ்சிப் பக்கமிருந்தெல்லாம் ஆட்கள் போய் வருவார்கள். அந்த ஒரு நாளும் பெருநாள் தான். இந்தப் பெருநாளில் இப்போழுது படைகளும் பங்கெடுக்கின்றன.

வலைப்பாட்டுக்கு தெற்கில் இரணை தீவு. இரண்டு தீவுகள் இணைந்திருக்கும் பெரு மேடு. இங்கே கடலட்டையில் அதி விசேஷமான, தரமான கடலட்டை உண்டு. இதில் சிறப்பிடம் இரணைதீவு "லூர்த்துகெவி பள்ளத்தாக்கு" ஆகும். "SSFO, SFO, FO" என்ற முதல் மூன்று தரங்களிலான கடலட்டைகள் இங்கே அதிகமாகப் பிடிக்கப்பட்டு வந்தன. 70, 80 காலப் பகுதிகளின் இந்தப் பள்ளத் தாக்கில் தரமான முத்துச் சிப்பிகளும் பிடிக்கப்பட்டன. ட்ரோலர் தொழிலின் பாவனையால் இவை இப்போ முற்றாக அழிந்தேபோயின.

இரணைதீவில் 300 குடும்பங்கள் வரை இருந்தன. அவர்களுக்கென் றொரு தேவாலயம், ஆஸ்பத்திரி, பிரதேச சபை உப அலுவலகம், சிறிய வெளிச்சவீடு, சந்தை, பள்ளிக்கூடம், மீன்பிடித்துறை எல்லாம் இருந்தன. இன்னும் இதெல்லாம் அங்கே உள்ளனதான். ஆனால், அதில் படையினரே படிக்கிறார்கள். அவர்களே தேவாலயத்தில் பூசை வைக்கிறார்கள். வழிபடுகிறார்கள். மீன்பிடித் துறையில் கடற்படைப் படகுகள் மட்டும் கட்டப்படுகின்றன.

இரணைதீவுச் சனங்கள் முழங்காவிலுக்கு அண்மையில் இரணை மாதா நகரில் தங்கள் ஊர் நினைவுகளோடு, தங்கள் மாதாவை எண்ணிக்கொண்டு நாட்களைத் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.


இப்படித்தான் கிராஞ்சியிலும் பள்ளிக் குடாவிலும் நாச்சிக் குடாவிலும் ஏதோ எல்லாம் நடக்கின்றன. சனங்கள் இருந்து தொழிலும் நடந்தாலும் காலில் முள் குத்தியதைப் போல, கண்ணுக்குள்ளே மண் விழுந்ததைப் போல அந்நியச் சுவடுகள் கிடந்து ஆடிக் கொண்டிருக்கின்றன. எப்போதும் எல்லாவற்றையும் வெளியாள் ஒருத்தர் நிண்டு கவனித்துக் கொண்டிருப்பதைப் போல ஒரு அரியண்டம். இயல்பு நிலையைப் பற்றிக் கனவு காண்பது எப்படியென்று தெரியாமல் இங்குள்ள மக்கள் திகைத்துப் போயிருக்கிறார்கள்.

வலைப்பாட்டுக் கறிவேப்பிலையை வைச்சு என்ன செய்யலாம் என்று யோசித்தேன். கிராஞ்சியில் வேண்டிய தென்னை வளமுண்டு. தேங்காய் தாராளம். கறிவேப்பிலையைச் சேர்த்து எண்ணெய் உற்பத்தி செய்யலாம். கறிவேப்பிலையையும் கருவாட்டையும் கடல் உணவு வகைகளையும் கலந்து தின்பண்டங்கள் உண்டாக்கலாம்.

இயற்கை வளங்கள் எங்குமுண்டு. அவற்றை இணைத்தும் கலந்தும் உருவாக்கும் படைப்புகளே வாழ்க்கையை இனிப்பாக்குகின்றன. பொருளாதாரத்தை வளப்படுத்துகின்றன.

வாசனை செடிகளிலும் மரங்களிலும் மலர்களிலும் மட்டுமல்ல, நம் வாழ்விலும் வரவேணும். மெல்ல மெல்ல சிந்திக்கத் தொடங்கினால் சிறை வாழ்வும் குறைவாழ்வும் இல்லாமற்போயிடும்.

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)



# பாழ்வெளி

அந்தச் சந்தியை நெருங்கிய போது எனக்குள் நடுக்கம் தொற்றிக் கொண்டது. அங்கு ஐந்து உருவங்கள் வித்தியாசமான அசைவுகளுடன் நின்றிருந்தன. கரும்பச்சை நிறமான அந்த உருவங்களின் கண்கள் தீக்கங்கு களைப் போல மின்னின. கோரமாக வளைந்த பற்களிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. நான் முன்னர் அறிந்திராத அழுகல் வாடை அவற்றின் உடல்களிலிருந்து வீசியது.

சந்தியை விரைவாகக் கடக்க முற்பட்ட என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை. அந்த ஐந்து பேய்களும் என்மேல் இருளாகக் கவிந்தன. வானப் பரப்பில் கருமேகங்கள் மோதிச் சிதறின. கடைசியில் அம்பாளும் என்னைக் கைவிட்டுவிட்டாள்.

**பாவம் அம்மா! தள்ளாத வயதிலும் அவள் என்னைத் தேடி ஒவ்வொரு இடமாக அலைந்து கொண்டிருப்பாள். தொலைந்து போனவளாகவே இறுதிவரை நான் கருதப்படக்கூடும்.**

உயிரின் கடைசித்துளி என்னுடன் ஒட்டிக் கொண்டிருந்த இறுதிக் கணப் பொழுது. நீர் தேங்கிய நிலத்தில் குழியொன்றை வெட்டுகின்ற சத்தம் எனக்கு அருகாகக் கேட்டது. இரத்தம் கசிந்த விழிகளைத் திருப்பிப் பார்த்தேன். அவனைப் போன்ற உருவமொன்று மண்வெட்டியுடன் நிற்பது மின்னல் ஒளியில் மங்கலாகத் தெரிந்தது. என்னுடன் வாழ விரும்பு வதாக அவன் இரந்து நின்ற பரிதாபத் தோற்றம் அந்த நேரத்தில் எனக்குள் ஓடிமறைந்தது.

இந்தப் பிரதேசத்தில் அதற்குப் பின்னரான நாள்களிலும் குழிவெட்டு கின்ற சத்தங்கள் அடிக்கடி கேட்கும். கொடூரமான பேய்களின் ஊளைகளும், சாமானியர்களின் நீண்ட அலறல்களு மாக ஒவ்வொரு இராப்பொழுதுகளும் கழிந்தன.

★★★

இப்போது இந்தப் பெருவெளி அமைதியாகக் கிடக்கிறது. இங்கு நடைபெறுகின்ற எல்லாவற்றையும் என்னால் உணர்ந்து அறியமுடிகின்றது.

வெள்ளைக் கோடிழுத்த நீண்ட வீதிகளில் பலரக வாகனங்கள் மறிப் பாரின்றி விரைந்து செல்கின்றன. வெண்ணிறமான வண்ணத்துப்பூச்சிகள் நிலவு சுமந்த நள்ளிரவுகளில் உவர்நில மெங்கும் பறந்து அலைகின்றன.

பேயோட்டிகள் உருவமற்ற நிலையில் பெருங் காடுகளில் உறைந்திருப்பதாகப் பேசிக் கொள்கிறார்கள். பேயொட்டிகள் இல்லாதபடியால் பேய்கள் எங்கும் உலாவுகின்றன. தங்களுடைய கடவுளின் தூலவடிவத்தை எல்லா இடங்களிலும் இருத்தி வைத்து அகோர வழிபாடுகளை நிகழ்த்துகின்றன. பேய்களின் பூசாரிகள் கடவுளுக்குக் காணிக்கையாகத் தங்களுடைய தலை முடிகளைப் பிய்த்துப் போடுகிறார்கள். ஐந்து வண்ணங்கள் பூசிய பட்டங்கள் வானமெங்கும் மிதக்கின்றன.

இங்குள்ள அரசியல் நாடக மேடைகள் மேய்ப்பர்களில்லாத மந்தைகளால் நிரம்புகின்றன. முதிர்ந்த நடிகர்கள் காணாமல் போனோர் குறித்த ஒப்பாரிப் பாடல்களைத் தளர்ந்த குரலில் உரத்துப் பாடுகிறார்கள். அந்தப் பாடல்கள் பருவகாலங்களில் மட்டுமே ஓங்கி ஒலிக்கின்றன. எங்களுடைய துயரக் கதைகள் எழுதப்படாது, காலம் வெறுமனே கடந்து செல்கிறது.

பாவம் அம்மா! தள்ளாத வயதிலும் அவள் என்னைத் தேடி ஒவ்வொரு இடமாக அலைந்து கொண்டிருப்பாள். தொலைந்து போனவளாகவே இறுதி வரை நான் கருதப்படக்கூடும்.

இந்தப் பாவக் குழியிலிருந்து என்னை மீட்கக் கூடியவர்களுக்காகக் காத்திருக்கிறேன்.

---

# குட்டீஸ் பக்கம்

## குட்டீஸ் பரிசுப் பொதி - 02

முடிவுகள்

### வெற்றியாளர்கள்

- த. மதுரன் - வட்டு கிழக்கு, சித்தங்கேணி.
- த.யதுஷன் - இல. 54 ஒட்டறுத்த குளம், வவுனிக் குளம்.
- சி. பாவரசன் - தரம் 04, யா/அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை.


**02. எழினியின் அம்மாவுக்கு மூன்று பெண் பிள்ளைகள். மூத்த மகளின் பெயர் இயல், இரண்டாவது மகளின் பெயர் இசை. அப்படியானால் மூன்றாவது மகளின் பெயர் என்னவாக இருக்கும்?**

விடை: எழினி

---

# றின்ஷாட் சுட்ட வடை

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)



"அதிகாலையிலேயே வீட்டிலுள்ளவர்களெல்லாம் வடை வண்டிக்குத் தேவையானவற்றைத் தயாரிக்க தொடங்கிவிடுவர். அதனால் வீடு பரபரப்பாகிவிடும். காலை பத்து மணிக்கெல்லாம் வண்டிகளை உரிய இடத்திற்குக் கொண்டு வந்துவிடுவோம். மாலை எட்டு மணி வரை அங்கேயே நின்று வியாபாரத்தைக கவனிப்போம். ஞாயிறு மட்டும் வண்டியை முற்ற வெளிக்குக் கொண்டு போவோம். அன்று அங்கே நல்ல வியாபாரம் நடக்கும். ஏறத்தாழ ஆறு வருடங்கள் இதே இடத்தில் வடை வியாபாரத்தை நடத்திவருகிறோம்" என ரின்ஷாட் சைகை மூலம் சொல்ல மொழிபெயர்த்தார் அந்த ஆட்டோக்காரர்.

கண்ணாடி வண்டியில் இறால் வடைகள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மசாலா வடைகள், மாபிள் அளவில் செய்து கண்ணாடித் தட்டின் ஒரு மூலையில் கொட்டி வைக்கப் பட்டிருந்தன. கோதுமை மாவில் தயார் செய்து வைக்கப்பட்ட வடைகளை அழகாக கையிலெடுத்து ஒரு தரம் சுழற்றிவிட, வடையில் தானாக நடுவில் ஓட்டை விழுகிறது. அப்படியே கொதித்துக் கொண்டிருக்கிற தாச்சியிலுள்ள எண்ணெயில் வடைகளைப் போட்டபடி வியாபாரத்தைக் கவனிக்கிறார் அவர்.

உப்பு, மிளகாய்த்தூள் என்பனவற்றோடு சேர்த்து செய்யப்பட்ட வெங்காயச் சட்னி தயாராக வைக்கப்பட்டிருந்தது. அதுதான் வடைக்கு சைட்டிஷ். அத்துடன் மெல்லிய கூந்தலாக நறுக்கி வைக்கப்பட்ட பெரிய வெங்காயமும் தயார் நிலையிருக்கிறது. வாடிக்கையாளர்களின் விருப்பத்துக்கேற்றவாறு கேட்டுப் பரிமாறுகிறார். விஷேடமாக, சரி பாதியாக நறுக்கிய சூடான மா வடையின் நடுவில் வெங்காயச் சட்னியை வைத்துப் பரிமாறுவதுதான் 'றின்ஷாட் ஸ்பெசல்'

ஆர்வமும், திறமையும் உண்டெனில் குறை என்று கருத ஒன்றுமில்லை. றின்ஷாட்டிடமிருந்து "மாபிள் வடையை" வாங்கிக் கொறித்தவாறே விடை பெற்றோம்.

---


# நீங்களும் எழுதுங்கள்!

'புதுவிதி' வாரசஞ்சிகையில் உங்கள் படைப்புக்களும் இடம்பெற வேண்டுமென்று விரும்புகிறீர்களா? தயக்கம் வேண்டாம். சிறுகதை, கவிதை, கட்டுரை, பத்தி எழுத்து, நிகழ்வுக் குறிப்பு எதுவாயினும் எழுதி அனுப்புங்கள். தரமான படைப்புகளுக்கு புதுவிதியில் பிரசுரமாக களம் அமைத்துக் கொடுக்கப்படும். படைப்புகளை தபால்/மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:


புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

(சென்றவார தொடர்ச்சி)

# தமிழர் – சிங்களவர் கலப்பினக் குடிகளே!

○ கலையரசன்



அவர்களை இலங்கை, இந்தோனேசியாவில் அதிக விலைக்கு விற்றனர். கேரளாவில் கொச்சி நகரிலும், இலங்கையில் கொழும்பு நகரிலும் அடிமைகளை விற்கும் சந்தைகள் இருந்துள்ளன. பெருமளவு இந்திய அடிமைகளை விநியோகம் செய்யும் இடமாக கொச்சித் துறைமுகம் இருந்துள்ளது.

முன்பின் அறிந்திராத இடங்களில் குடியேற்றப்பட்ட அடிமைகள், பரிச்சயமற்ற வேற்று மொழி பேசும் மக்களுக்கு இடையில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆசிய காலனிகளில், அடிமை முறை இருந்திருக்கலாம் என்று ஏற்றுக் கொள்பவர்களும், அவர்கள் வீட்டு வேலையாட்களாக மட்டுமே இருந்தனர் என நினைத்துக் கொள்கிறார்கள். இது ஒரு பகுதி உண்மை மட்டுமே.

வீட்டுப் பணியாட்களாக மட்டுமல்லாது, உற்பத்தித் துறையிலும் அடிமைகள் ஈடுபடுத்தப்பட்டனர். வாசனைத் திரவியங்களுக்கான தோட்டங்கள், நெல் வயல்கள், கரும்புத் தோட்டங்களில் அடிமை உழைப்பாளிகள் வேலை செய்தனர். அது மட்டுமல்லாது, கப்பல்கள் கட்டுதல், திருத்துதல் போன்ற தொழில்களிலும் ஈடுபடுத்தப்பட்டனர். துறைமுகங்களில் கப்பல்களில் பொருட்களை ஏற்றி இறக்கும் வேலை செய்தவர்களும் அடிமைகள் தான்.

வீட்டு வேலை செய்த அடிமைகள், சமையலறையில் அல்லது களஞ்சிய அறையில் படுத்துறங்கினார்கள். கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வேலை செய்த அடிமைகளுக்கு தனியான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. சுமாத்திரா தீவில் சுரங்கத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட அடிமைகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். ஐநூறுக்கும் அதிகமான ஆண், பெண் அடிமைகள் தனித்தனியாக பிரிக்கப்பட்ட முகாம்களுக்குள் வாழ்ந்தனர்.

இன்றைக்கும் பலர் அறியாத உண்மை என்னவென்றால், ஒரு காலத்தில் ஆசியாவில் இருந்த அடிமைகளின் எண்ணிக்கை, அமெரிக்காவில் இருந்த அடிமைகளின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருந்தது! உதாரணத்திற்கு, 1700 ஆம் ஆண்டளவில், VOC நிர்வகித்த ஆசியக் காலனிகளில் 68000 அடிமைகள் இருந்தனர். அதே VOC நிர்வகித்த அமெரிக்க காலனிகளில் 23500 அடிமைகள் இருந்தனர். 1775 ஆம் ஆண்டுக்குப் பின்னர், அமெரிக்கக் கண்டத்தில் பெருந் தோட்டங்கள் உருவாகின. அதற்குப் பிறகு தான் அங்கு அடிமைகளின் எண்ணிக்கை அதிகரித்தது.

இதிலே குறிப்பிடப்பட வேண்டிய முக்கியமான விடயம் ஒன்றுள்ளது. அமெரிக்காவில் நடந்ததைப் போன்று, ஆசியாவில் குறிப்பிட்ட ஓரிடத்தில் மட்டும் அடிமைகளைக் குவிக்கவில்லை. அடிமை வாணிபத்தில் ஈடுபட்ட கப்பல் போக்குவரத்து குறிப்பிட்ட ஒரு புள்ளியில் இருந்து இன்னொரு புள்ளியை நோக்கிச் செல்லவில்லை. ஒரு நாட்டில் இருந்த அடிமைகளை இன்னொரு நாட்டில் கொண்டு சென்று விட்டார்கள். அதே மாதிரி, அங்கிருந்த அடிமைகளை மற்ற நாட்டில் கொண்டு சென்று விட்டார்கள்.

இதைக் கொஞ்சம் விரிவாகச் சொல்வதென்றால், இந்தோனேசிய அடிமைகள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டனர். அதே மாதிரி, இலங்கை அடிமைகள் இந்தோனேசியா கொண்டு செல்லப்பட்டனர். தென்னாபிரிக்கா, இந்தியா, இலங்கை, இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கு இடையில் இவ்வாறு அடிமைகள் பரிமாறப்பட்டனர். இதனால் அந்நாடுகளில் குடிசனப்பரம்பலில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.

இன்றைய இந்தோனேசியர்களில், சிங்களவர்களும், ஈழத் தமிழரும் கலந்திருக்கலாம். அதே மாதிரி, இன்றைய இலங்கையில் உள்ள சிங்களவர், தமிழர்களில், இந்தோனேசியர்கள் கலந்திருக்கலாம். இலங்கையில் சிங்களவர்களும், தமிழர்களும், "ஆயிரமாயிரம் ஆண்டு கால தூய்மை பேணும் வேறுபட்ட இனங்கள்" என்பது ஒரு கற்பனை. இனவாதிகள் மட்டுமே அப்படியான கட்டுக்கதைகளைப் பரப்பி வருகின்றனர். இந்தோனேசியர்கள், இந்தியத் தமிழர்கள், மலையாளிகள், ஆப்பிரிக்கர்கள், போன்ற பல்வேறு இனத்தவர்களையும் சேர்த்துக் கொண்ட கலப்பினம் தான், இன்றுள்ள சிங்களவரும், தமிழரும்! இதை நம்ப மறுப்பவர்கள் தாராளமாக மரபணு சோதனை செய்து பார்க்கலாம்.

---

## சொல்லுங்கள் – 08 வெல்லுங்கள்

கீழுள்ள வினாவுக்குரிய விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடை எழுதும் ஐவருக்கு பணப்பரிசு காத்திருக்கிறது. பலர் சரியான விடையை எழுதி அனுப்பியிருப்பின் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**வினா - ஒலிம்பிக் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெறுகின்றன.**

**விடை:**..........................................

முதற்பரிசு - ரூபா. 2000.00
இரண்டாம் பரிசு - ரூபா. 1500.00
மூன்றாம் பரிசு - ரூபா. 1000.00
ஆறுதல் பரிசுகள் - ரூபா. 500.00 இருவருக்கு

**முடிவுத் திகதி: 16.08.2016**

அனுப்பவேண்டிய முகவரி:

"சொல்லுங்கள் வெல்லுங்கள்" - 08

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## சொல்லுங்கள் வெல்லுங்கள் -06 முடிவுகள்

**விடை : துருக்கி நாட்டு அதிபர் ரசீட் தையீட் எர்டோகன்**

**முதலாம் பரிசு - ரூ. 2000**

1. நே.பிறேமதாஸ்
   இராச வீதி, தோம்பு, அச்சுவேலி தெற்கு.

**இரண்டாம் பரிசு - ரூ. 1500**

2. கீ.துஷ்யந்தி
   6/3, பாம்காடன், இரத்தினபுரி.

**மூன்றாம் பரிசு - ரூ. 1000**

3. செ. உதயன்
   பாசிக் நிறுவனம், முல்லைத்தீவு.

**ஆறுதல் பரிசு - (தலா ரூ.500 வீதம்)**

i. சி.விஜயராணி
   அராலி மத்தி, ஊரத்தி, வட்டுக்கோட்டை.

ii. அ. கவி நிலவன்
   கைதடி தெற்கு, கைதடி.

(பரிசில்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும்)

### புதுவிதி PUTHU VITHI பாராட்டுப்பெறுவோர்

- ஜெ. லதனி - 3DD, வட்டக்கச்சி, கிளிநொச்சி .
- த. சுவேந்திரகுமார் - புகையிரதநிலைய வீதி, சாவகச்சேரி.
- கு. பிரபாகரன் - இல. 28 கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
- S. மோகனதாசன் - திருமுறிகண்டி, சஞ்சீவன் ரயர் வேக்ஸ் .
- பூ. பவனேஸ்வரன் - கச்சார் வெளி, பளை.
- சி. கோகுலன் - சிவன் கோவில் வீதி, மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.
- ஜெ. கீர்த்தனா - இலுப்பைக்கடவை
- கே. எல். அப்துல் றசூல் - 410/1, 3 ஆம் குறுக்குத்தெரு, நிந்தவூர்,
- த. யோகராசா - சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
- து. யதுஷன் - இல.54 ஒட்டறுத்தகுளம் , வவுனிக்குளம்.
- ஸ்ரீ. ஸ்ரீப்பிரியா - ஐயனார் கோவிலடி , வடலியடைப்பு, பண்டத்தரிப்பு
- பு.சிவசங்கர் - பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு.



# அம்மாவுக்கே ஆப்பு வைத்த சசிகலா

தமிழ்நாட்டின் மானம் டெல்லியில் சந்தி சிரித்தது கடந்த 30-ம் திகதி. தி.மு.க-வைச் சேர்ந்த எம்.பி திருச்சி சிவாவும், அ.தி.மு.க எம்.பி சசிகலா புஷ்பாவும் சென்னை செல்ல டெல்லி விமான நிலையத்தில் காத்திருந்தனர். அப்போது இருவருக்கும் ஏற்பட்ட தகராறு தொடர்பாக சிவாவிடம் கருணாநிதியும், சசிகலா புஷ்பாவிடம் ஜெயலலிதாவும் விசாரணை நடத்தினர். இதன் பிறகு, சசிகலா புஷ்பா அ.தி.மு.க-வில் இருந்து நீக்கப்பட்டு உள்ளார். அரசியலில் பொது ஒழுக்கம் சிதைந்து போனதன் அடையாளமாகத் தெரிகிறது இந்தக் காட்சி.

## விமான நிலையத்தில்...

ஜூலை 30- ஆம் திகதி சிவாவின் கைத்தொலைபேசிக்கு ஒரு அழைப்பு வந்தது. அழைப்பை ஏற்றுப் பேசிய சிவா, "டெல்லியில் நடப்பது சென்னையில் உள்ள உங்க அம்மாவுக்குத் தெரியாது. நேரில் இருந்துகொண்டு எதற்காக தொலைபேசியில் பேசுகிறாய்?" என்று சொன்னார். அப்போது, சசிகலா புஷ்பா வேகமாக வந்து சிவாவின் சட்டையைப் பிடித்து கன்னத்தில் பளார்... பளார் என்று நான்கு முறை அறைந்தார். இதை யாரும் எதிர்பார்க்கவில்லை. தொடர்ந்து அங்குள்ள விமான நிலையப் பாது காவலர்களும், பயணிகளும் சசிகலா புஷ்பாவை விலக்கிவிட்டனர். பிறகு, இருவரும் பயணத்தை ரத்து செய்துவிட்டுச் சென்றுவிட்டனர். இதற்கிடையில், டெல்லியில் நாடாளுமன்றம் அருகில் உள்ள சசிகலா புஷ்பாவின் வீட்டின் ஜன்னல் கண்ணாடி உடைக்கப்பட்டது.

ஜூலை 31-ஆம் திகதி, சென்னைக்கு வந்த சசிகலா புஷ்பாவை, உடனடியாக கார்டனுக்கு வரச் சொல்லி அழைப்பு வந்தது. அங்கு விசாரணை நடத்தப்பட்டது. அப்போது அவருடன் தம்பித்துரை மட்டும் இருந்துள்ளார். சசிகலா புஷ்பாவுக்கு ஏச்சு விழுந்தது. அவரிடமிருந்து இரண்டு கடிதங்கள் வாங்கப்பட்டன. தம்பித்துரையிடம் போனில் பேசிய ஜெயலலிதா, "டெல்லியில் நடக்கும் எல்லா விஷயங்களும் எனக்குத் தெரியும். நீங்கள் என்னிடம் எதையும் மறைக்க முடியாது. அ.தி.மு.க அரசை கிண்டல் செய்ததற்காக அடித்தார் என சசிகலா புஷ்பா சொல்வது உண்மையல்ல. ஏற்கெனவே அவர் மீது வந்த புகார்களுக்கு அவரது கட்சிப் பதவி பறிக்கப்பட்டது. இனிமேலும் இதுபோல நடந்தால் அவ்வளவுதான்" என்று சொல்லி இருக்கிறார். திருச்சி சிவாவுக்கு, சசிகலா புஷ்பா பணம் கொடுத்து உள்ளதாகவும் அதைத் திரும்பக் கேட்டபோதுதான் இந்தப் பிரச்னை ஏற்பட்டதாகவும் தகவல் உலவுகிறது என்கிறார்கள் உள்விவரம் அறிந்தவர்கள்.

## சசிகலா புஷ்பாவின் பின்னணித் தகவல்கள்!

சசிகலா புஷ்பா குறித்து விசாரித்த போது கிடைத்த தகவல்கள் அதிர்ச்சிகரமாக இருந்தன. படிக்கும் காலத்திலேயே அவரது நடவடிக்கைகள் வித்தியாசமாகவே இருந்துள்ளன. தூத்துக்குடியில் மேயராக இருந்தபோது இரண்டு பெண் கவுன்சிலர்களை கொடைக்கானலுக்கு அழைத்துச் சென்ற பயணம் சர்ச்சையைக் கிளப்பியது. அடுத்து, தூத்துக்குடி தொழிலதிபரிடம் போனில் சசிகலா மதுபோதையுடன் ஆபாசமாகப் பேசிய ஒலிநாடா, வாட்ஸ்அப்பில் பிரபலமாக பரவியது. இதனால், அவரது மகளிர் அணிச் செயலாளர் பதவி பறிக்கப்பட்டது. அடுத்து, திருச்சி சிவாவுடன் சசிகலா புஷ்பா நெருக்கமாக இருக்கும் புகைப்படங்களும் வெளிவந்து பட்டையைக் கிளப்பின. அதை மார்ஃபிங் என்று சசிகலா புஷ்பா தரப்பு சொல்லியதுடன் சசிகலா புஷ்பாவும், அவரது கணவரும் இருக்கும் புகைப்படங்களையும் வெளியிட்டார்கள். கட்சி பாகுபாடில்லாமல் சசிகலா புஷ்பாவுக்கு எல்லோரிடமும் 'பழக்கம்' உள்ளது. சசிகலா புஷ்பா அரசியலில் ஐ.ஏ.எஸ் அதிகாரி ஒருவரால் ஏற்றப்பட்டார். அவர் மூலமே குறுகிய காலத்தில் அசுர வேகத்தில் அரசியலில் வளர்ச்சியடைந்தார்.

## சிவ சிவா!

நாடாளுமன்றத்தில் தன் தனித்த செயல்பாடுகளால் பலமுறை முத்திரை பதித்தவர் திருச்சி சிவா. 45 ஆண்டுகளுக்குப் பிறகு, நாடாளுமன்றத்தில் திருநங்கைகளுக்காக, சிவா கொண்டு வந்த தனிநபர் மசோதா நிறைவேறியது. அப்போது, அவரைக் கட்சிப் பேதமின்றி அனைவரும் பாராட்டினார்கள். ஆனால், அவர் தனிப்பட்ட வாழ்க்கையை, பெருமைக்குரியதாக அமைத்துக் கொள்ளவில்லை என்கின்றன டெல்லி வட்டாரங்கள். சசிகலா புஷ்பாவுடன் சிவாவுக்கு நெருக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் ரொம்ப நாட்களாக இருந்து வருகிறது.

"இது பண விவகாரம்தான். ஒரு கட்டத்தில், சசிகலா புஷ்பாவின் தொலைபேசி அழைப்பை சிவா எடுக்கவில்லையாம். இது சசிகலா புஷ்பாவுக்குக் கடுமையான ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளது. பல நாட்களுக்குப் பிறகு, விமான நிலையத்தில் நேருக்கு நேராகச் சந்தித்தபோது, எரிச்சல் அதிகமாகி, "என் பணமும் போனது; என்னையும் மதிக்கவில்லை; உன்னால் கட்சியிலும் குடும்பத்திலும் எனக்குக் கெட்ட பெயர்" என்கிற கோபத்தை வெளிக்காட்டும் வகையில், சிவாவை கன்னத்தில் அறைந்துள்ளார் என்கின்றனர் உள் விவரம் அறிந்தவர்கள்

சிவா - சசிகலா புஷ்பா விவகாரம் தொடர்பாக விளக்கமளிக்க, அறிவாலயம் சென்றார் சிவா. மு.க.ஸ்டாலின் சிவாவை சந்திப்பதைத் தவிர்த்து விட்டார். அதனால், கருணாநிதியை மட்டும் சிவா சந்தித்துள்ளார். அப்போது, சிவாவிடம், டெல்லி நிலவரம் எப்படி இருக்கிறது? என்று கேட்டாராம் கருணாநிதி. என்ன சொல்வதென்றே தெரியாமல் தவித்த சிவாவிடம்," ஸ்டாலினிடம் பேசிய பிறகுதான் என்னால் முடிவு சொல்ல முடியும்... போய்ட்டு வா என்றாராம்.

## அ.தி.மு.க. வரலாற்றில் இதுவே முதல் முறை!

டெல்லி விமானநிலைய விவகாரத்துக்கு அடுத்த நாள் தம்பிதுரை மூலம் கார்டனுக்கு வரவழைக்கப்பட்டார் சசிகலா புஷ்பா. அம்மாவிடம் பாராட்டு கிடைக்கும் எனப் போனவருக்கு குட்டுதான் விழுந்தது. அன்றைய தினமே விமான மூலம் டெல்லி பறந்தார். ஆவணி 1-ம் திகதி காலையில் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த அவரை ராஜ்யசபா அ.தி.மு.க குழுத் தலைவர் நவநீதகிருஷ்ணன் மறித்து, "எம்.பி பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என அம்மா சொன்னாங்க" எனச் சொல்ல... அதை, சட்டை செய்யாமல் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தார். அங்கேதான், "தலைவி என்னை அடித்தார்" என தைரியமாகத் திரி கொளுத்திப்போட்டார்.

தன்னைப் பேச அனுமதிக்குமாறு துணை சபாநாயகர் குரியனிடம் கேட்டார். சசிகலா புஷ்பா பேசத்தொடங்கிய உடன் அனல் வீசியது. "திருச்சி சிவா நல்ல மனிதர். அவரிடமும், தி.மு.க தலைவர்களிடமும் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்கிறேன். என் உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. நான், கட்சித் தலைமை மீது நன்மதிப்பு வைத்திருக்கிறேன். ஆனால், அவர்களிடமிருந்து எனக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனக்கு இந்தப் பதவியைக் கொடுத்தது கட்சித் தலைமைதான். ஆனால், அந்தத் தலைமையே என் பதவியை ராஜினாமா செய்யுமாறு மிரட்டுகிறது. நான் ராஜினாமா செய்ய மாட்டேன். பெண்களுக்குப் பாதுகாப்பு எங்கே இருக்கிறது. என்னைக் கட்சித் தலைவி அடித்தார். என்னை ராஜினாமா செய்ய தம்பித்துரை இங்கு அழைத்து வந்துள்ளார். என் குடும்பத்தைக்கூட நான் பார்க்க முடியவில்லை" என்றார்.

அவருடைய பேச்சுக்கு நவநீதகிருஷ்ணன் உட்பட அ.தி.மு.க எம்.பி-க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அவையில் கடும் அமளி ஏற்பட்டது. அ.தி.மு.க வரலாற்றில் யாருமே சொல்லத் துணியாத விஷயத்தை சசிகலா புஷ்பா சொன்னது அதிர்வலைகளை உண்டாக்கியிருக்கிறது. ஜெயலலிதாவை தைரியசாலி என்பார்கள். அவருக்கே பயப்படாத சசிகலா புஷ்பாவை பார்த்து கார்டன் வட்டாரமே அதிர்ந்து கிடக்கிறது.

மேயர், மகளிர் அணிச் செயலாளர், எம்.பி என உச்சத்துக்குப் போய் பள்ளத்தில் சரிந்து நிற்கிறார் சசிகலா புஷ்பா.

# மட்டக்களப்பில் நாகர்கள்



நாகர்களின் கிணறு

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறு மூலை நீர்முகப் பிள்ளையார் ஆலயத்தில் கி.மு இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த நாகர்களின் கிணறும், நாக கல்லும் காணப்படுகின்றன. நம்முடைய பூர்வ குடிகளாக கூறப்படும் நாகர்கள் வாழ்ந்ததற்கான வலுவான ஆதாரமாகவும் மட்டக் களப்பு மண்ணின் மரபுரிமைச் சொத்தாகவும் இருக்கின்றன இக்கிணறும் கல்லும்.

வந்தாறு மூலை நீர்முகப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் சிறியதொரு கிணறு காணப்படுகிறது. மூன்றடிக்கு மூன்றடி நீள அகலங்களுடன் சதுரவடிவிலான இந்த கிணறு சுமார் இருபது அடி ஆழம் கொண்டிருப்பதாகவும், இந்த கிணற்றின் உட்சுவர் கருங்கற்களினால் அமைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடுகிறார்கள் வரலாற்று - தொல்லியல் ஆய்வாளர்களான பத்மநாதன் முதலானவர்கள்.

அத்துடன் அங்கு காணப்படும் கல்லும் 2000 ஆண்டு பழமையானது என்று ஆய்வில் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கிணற்றின் கருங்கற்களில் தமிழ் பிராமி எழுத்துக்களில் 'மணி நாகன்' என்று எழுதப்பட்டிருப்பதாக தெரிவிக்கின்றார் ஆய்வாளர் பத்மநாதன், தமிழ் பிராமி எழுத்துருக்கள் கி.மு இரண்டாம் நூற்றாண்டில் இருந்து கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரையில் புழங்கியதால், இந்த கிணறும் அந்த காலகட்டத்தைச் சேர்ந்தது என்று தாம் கருதுவதாகவும் அவர் கருதுகின்றார்.

இலங்கையின் பூர்வீக குடியினரான நாகர்களின் கல்வெட்டுக்களில் காணப்படும் தமிழ் பிராமி எழுத்துருக்கள், நாகர்களும் தமிழரும் ஒன்றே என்கிற கருதுகோளுக்கான மற்றும் ஒரு வலுவான ஆதாரமாக அமைந்திருக்கின்றது.

மட்டக்களப்பு மண் தமிழர்களின் வரலாற்றுப் பண்பாட்டு கால்த்துடன் நெருக்கமான கதைகளைக் கொண்டது. கடந்த காலத்தில் நம்முடைய மூத்த குடிகள் கொண்டிருந்த எம்முடைய நிலத்தின் மீதானதும், பண்பாட்டின் மீதானதும் உரிமையை தாங்கி நிற்கும் பிரதேசங்களில் ஒன்றாக மட்டக்களப்பை அறிஞர்கள் ஆதாரப்படுத்துகின்றனர். வந்தேறு குடிகள் என்றும், சிறுபான்மையினர் என்றும் நாம் ஒடுக்கப்படுதலுக்கும் சுரண்டப் படுதலுக்கும் நாம் நம்முடைய வரலாற்றையும் மரபுச் சொத்துகளையும் பாதுக்காக்க தவறியமையே இதற்குக் காரணம்.

இது போன்ற நம்முடைய கடந்த காலத்தை ஆதாரப்படுத்தும் நம்முடைய நிலத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் சொத்துகளை நாம் அறியவும் பேணவும் வேண்டியுள்ளது.

நம்முடைய நிலத்தின் மரபுகளைப் பற்றி ஒவ்வொரு சந்ததிக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதற்கு இப்படியான மரபு - தொல்லியல் சார்ந்த ஆதாரங்களே துணைநிற்க வல்லன.



நாக கல்

## மரபுரிமைப்போட்டி - 08

**மட்டக்களப்பில் தமிழ் பிராமி எழுத்துக்கள் உள்ள இடங்கள் எவை?**

சரியான விடை எழுதி அனுப்புபவர்களில் ஒருவருக்கு குலுக்கல் முறையில் ரூபா. 1000 பரிசாக வழங்கப்படும். முடிவுத் திகதி 16.08.2016

அனுப்பவேண்டிய முகவரி: புதுவிதி, 107, இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## மரபுரிமைப்போட்டி - 06 முடிவு

**சரியானவிடை -** நல்லூர் சங்கிலித்தோப்பு

**வெற்றிபெற்றவர்:** து.பிருந்தா
வவுனிக்குளம்.



பறங்கிய இனத்தவர்

பறங்கியர் (Burghers) எனப்படுவோர் 16-20 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஐரோப்பிய நாடுகளான போர்த்துக்கல், நெதர்லாந்து, ஜேர்மனி பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியின் போது, அந் நாடுகளின் ஆண்கள் உள்ளூர் பெண்களை திருமணம் செய்து அதன் மூலம் உருவான ஐரோப்பிய - ஆசிய இனக்குழுக்கள் ஆவர். இவர்களில் அதிகம் பேர் இலங்கையில் காணப்படுகின்றனர்.

இலங்கையில் காணப்படும் தேசிய இனக் குழுக்களில் ஒன்றாக இருக்கும் இவர்களைப் பற்றி ஏனைய இனமக்கள் அதிகம் அறிந்திராதவர்களாக இருக்கின்றனர்.

இவர்களின் தாய்மொழி ஆங்கிலமாக இருந்த போதும், இவர்கள் உள்ளூர் மொழிகளையும் அதிகம் பேசுகின்றனர். இலங்கையில் கிரியோல் மொழியின் அடிப்படையில் இவர்கள் பல காலமாக பேசிவரும் இலங்கை போர்த்துக்கீச 'கிரியோல்' மொழி முக்கியமானதாக குறிப்பிடப்படுகின்றது.

1981 ஆம் ஆண்டு இலங்கை குடிசன மதிப்பீட்டின்படி, பறங்கியர் 39, 374 பேராக இலங்கையின் மொத்த சனத் தொகையில் 0.27 ஆக காணப்பட்டனர்.

பறங்கியர் அதிகளவில் கொழும்பு (0.727), கம்பகா (0.57) ஆகிய நகரங்களில் காணப்படுகின்றனர். குறிப்பிடத்தக்க அளவானோர் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் காணப்படுகின்றனர்.

# திருநீற்றுக்குடுவை



இது தமிழர்களின் மிகவும் பழமை வாய்ந்த ஒரு கைவினைப் பொருளாகும். முன்பு வீடுகளிலும் கோயில்களிலும் இயல்பாக காணக் கிடைக்கும் இது போன்ற கைவினைப் பொருட்கள் இப்போது அருகிச் செல்கின்றன.

பொதுவாக இந்துக்கள் திருநீறு அணிவதை தமது வாழ்வியல் கோலத்தில் மிக உன்னிப்பாகக் கடைப்பிடித்தனர். "நீறில்லா நெற்றி பாழ்" எனும் பழமொழியிலிருந்து இதனை நன்குணரலாம். அதற்குப் பயன்படுத்தப்படும் திருநீற்றை சேமித்து வைப்பதற்காக தென்னஞ் சிரட்டையில் தயாரிக்கப்படும் ஓர் எளிய முறையிலான கொள்கலனே திருநீற்றுக் குடுவை என அழைக்கப்படுகின்றது.

தேங்காயினை உரித்து அதன் மேற் பகுதியில் கால்வாசியை நீக்கி அதன் உள்ளடைகளையும் நீக்கிவிட்டு, தேங்காயின் கண்ணை துழைத்து அதன் ஊடக சிறு கயிறு ஒன்றினை இட்டு கட்டி விடுவர். அதனுள்ளே திருநீற்றினை இட்டு வைப்பர்.

இது பார்ப்பதற்கு மிகவும் எளிமையாகவும், செலவற்றவையாகவும், இலகுவானவையாகவும் காணப்படும். உலோகத்திற்கும் கொடும் பிளாஸ்ரிக் கலாசாரத்திற்கும் மாறிக் கொண்டிருக்கும் நம்முடைய சமூகம் சூழலுக்கு மாசில்லா நம்முடைய மரபுகளிற்கு திரும்ப வேண்டும் என்பதற்கு இவ்வாறான கைவினைப்பொருட்கள் சொல்லும் செய்திகள் ஆதாரமானவை.

# இடம் பெயர்ந்தும் தலை நிமிர்ந்த...

## வ/திருஞான சம்பந்தர் வித்தியாலயம் - சிறீராமபுரம் வவுனியா



வவுனியா பிரதேசத்தில் ஸ்ரீ ராமபுரத்தில் உள்ள திருஞானசம்பந்தர் வித்தியாலயமான்து 15.03.1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படும் போது இரண்டு ஆசிரியர்கள், இருபது மாணவர்களுடன் தொடங்கப்பட்டது. அன்று ஒரு கட்டடம் மட்டுமே காணப்பட்டது. 1990-1999 ஆம் ஆண்டு வரை 1-5 வரையான வகுப்புக்கள் மட்டும் நடைபெற்றன. பாடசாலை ஆரம்பித்துசிறிது காலத்திலேயே 1990 ஆம் ஆண்டு கலவரத்தினால் இடம் பெயர்ந்து சென்று மகாறம்பைக்குளம் சனசமூக நிலையத்தில் 1991 ஆம் ஆண்டு வரை இயங்கிவந்தது.

மீண்டும் பாடசாலை தனது சூழலுக்குத் திரும்பி இயங்க ஆரம்பித்த போது 1995 இல் மீண்டும் இடம்பெயர வேண்டியிருந்தது. அதன்பின்னர் வவுனியா மகாறம்பைக்குளம் அ.த.க பாடசாலையில் இயங்கத் தொடங்கியது. 1996 இற்கு பிறகு மீண்டும் தனது நிலத்திற்கே திரும்பிவந்து இன்றுவரை சிறீ இராமபுரத்தில் இயங்கி வருகின்றது.




### சவால்கள்

பாடசாலை அடிப்படை வளங்களைக் கொண்டு இருக்கின்ற போதிலும் மாணவர்களின் குடும்பச் சூழல், பொருளாதாரச் சூழல் என்பன அவர்களினுடைய கல்வியைப் பெரிதும் பாதிக்கின்றன. போரினால் பாதிக்கப்பட்ட குடியேற்றக் கிராமத்தில் இப்பாடசாலை அமைந்துள்ளது. அன்றாட வாழ்விற்கு நாட்டின் விலையேற்ற பொருளாதாரத்துடன் போராடிய படியே பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர். குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் கூலிக்குப் பணிபுரியும் பெண் தலைமைத்துவங்களை கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் இங்கே மிகச் சிரமத்துடன் கல்வியைத் தொடர்கின்றனர். அத்தோடு கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகளும் குறைவாகவே இருக்கின்றன. மாணவர்களின் வாழ்வாதாரச்சிக்கல்களும் ஏனைய சமூக, பொருளாதார பிரச்சினைகளும் தீர்க்கப்படும் பட்சத்தில் அவர்களால் பாடசாலையின் கல்வி வளத்தை இன்னும் வினைத்திறனாக மேற்கொள்ள முடியும்.

### சாதனைகள்

2005 அளவில் தரம் 11 வரையிலான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. அன்றிலிருந்து இன்றுவரை க.பொ.த சாதாரண தரத்தில் இருந்து ஏராளம் மாணவர்களை உயர்தரத்திற்கு அனுப்பிக்கொண்டிருக்கிறது. இதேபோல தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையிலும் மாணவர்கள் சித்தியடைந்து வருகின்றனர். இதுவரை பாடசாலையின் அதிபர்களாக சுகுணா, குமாரசிங்கம், மகேந்திரன், நடராஜா, கிருஷ்ணகுமார், கருணாநிதி ஆகியோரின் பணியினால் வளர்ச்சி பெற்று வந்தது. தற்பொழுது தெ.ஸ்ரீதரனின் தலைமைத்துவத்தின் கீழ் தொடர்ந்தும் சிறப்பாக கல்விப்பணி செய்து வருகின்றது.

ஆரம்பத்தில் ஒரு கட்டடத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தற்பொழுது ஏழு கட்டடங்களாக நிமிர்ந்து நிற்கின்றது. விஞ்ஞான ஆய்வு கூடம், கணனி அறை, நூலகம் என்று மாணவர் கல்விக்குத்துணை நிற்கும் பல அம்சங்களை தன்னகத்தே கொண்டு பாடசாலை செயற்படுகின்றது. இன்று 464 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது. இம் மாணவர்களுக்கு இன்று அதிபர், பிரதி அதிபர், 26 ஆசிரியர்கள் மற்றும் சிற்றூழியர்களுடன் இயங்கி வருகின்றது. மேலும் வலயக்கல்வி பணிப்பாளர் ஊடாக மாடிக்கட்டடம் அமைக்கும் பணிகளும் நடந்து வருகின்றன.





# பனித்தேச வடலி

08

கபிலன்

பாடசாலையில் எனது புள்ளிகள் சராசரிக்கு கீழாகவே இருந்தது. வருடத்தில் இரண்டு முறை ரிப்போட்டுடன் வீட்டிற்கு வரும்போது அடியைவிட சுடுசொற்களே அதிகம் கேட்கவேண்டியிருந்தது. ஏனைய தமிழ்ப் பிள்ளைகளுடன் ஒப்பிட்டுத் திட்டுவது வழக்கமாக இருந்தன. இது மேலும் என்னை தனிமைக்கே தள்ளியது. பெற்றோர் வேலைக்கு சென்ற நாட்களில் நான் பாடசாலைக்கு செல்லாமல் வீட்டிலேயே இருந்தேன். ரிப்போட்டில் நானே எனது அம்மாவின் கையெழுத்தை போடலானேன். வருடத்தில் ஒருமுறை பெற்றோர்களிற்கும் ஆசிரியர்களிற்குமான சந்திப்பு நடைபெறும். முடிந்தளவு நான் எனது அம்மாவையே அழைத்துச்சென்றேன். எனது அம்மாவிற்கு நானே மொழி பெயர்த்து சொல்ல வேண்டும் என்பது எனக்கு இன்னும் வசதியாக இருந்தது. அம்மாக்களின் அழகே அவர்களின் அசட்டுத்தனம் தான்.

ஆண் பிள்ளைகளிற்கே இந்த நிலையென்றால் பெண் பிள்ளைகளை பற்றி சொல்லவே தேவையில்லை. இருண்ட பின்னர் வெளியில் செல்வது மகாகுற்றம். அப்படித் தனிமையில் எங்காவது தமிழர்கள் கண்களில் பட்டுவிட்டால் குடும்ப கௌரவம் கெட்டதாகவே வைத்துக் கொள்ளலாம். ஊரில் அது ஒரு பெரிய கதையாக வலம் வந்துவிடும். ஆண்களைவிட குடும்ப கௌரவம் என்பது பெண்களில் அதிகம் தங்கியிருந்தது. எந்த விதமான உணர்வுகளையோ, விருப்பு வெறுப்புகளையோ அவர்கள் வெளியில் காட்டிக் கொள்ளக் கூடாது. அப்படி காட்டிக் கொள்வார்களாயின் அவர்கள் தமிழ் சமூகத்தில் அந்நியப்பட்டு போகின்றார்கள்.

தனது பதின்ம வயதுவரை பெற்றோரிற்கு அடிபணிந்து வீட்டைவிட்டே வெளியில் சென்றிராத ஒரு பெண்ணை எனக்குத் தெரியும். அவள் ஒரு முன்னுதாரணமாக பார்க்கப்பட்டாள். ஒரு கட்டத்தில் அவளிற்குள் மறைந்திருந்த 'நான்' என்ற இன்னொரு பெண் வெளிவந்த போது அவள் தமிழ் சமூகத்தில் ஒரு கலகக்காரியாக பார்க்கப்பட்டாள். இன்று இந் நாட்டவருடன் திருமணம் செய்து தமிழ் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு தனது வாழ்க்கையை வாழ்கின்றாள்.

இன்னொரு பெண் சங்கீதம், பரத நாட்டியம், கல்வி என்று அனைத்திலும் சிறந்து விளங்கியவள். ஒரு கட்டத்திற்கு மேல் அவளின் உணர்வுகளும் எரிமலை போல் வெடித்து தமிழ் சமூகத்திலிருந்து வெளியேறி இந்நாட்டவனை திருமணம் செய்துகொண்டு மகிழ்ச்சியாக இருக்கின்றாள். அவ்வப்போது அவளை காணும் சந்தர்ப்பங்கள் அமையும். சிறு வயது முதலே அவளை எனக்கும், என்னை அவளிற்கும் தெரியும்.. தமிழ் சமூகத்தில் அவளின் 'நல்லவள்' என்ற முத்திரை பறிக்கப்பட்டதால் என்னையும் ஒரு விரக்தியுடனே பார்ப்பாள்.

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே எனது அப்பா ஒரு தீவிர தமிழ்த் தேசிய ஆதரவாளர். தனது வேலை நேரம் போக மிகுதி நேரத்தை தமிழீழ விடுதலைக்கான பணிகளில் செலவிட்டுக் கொண்டிருந்தார்.

**சுருக்கமாகச் சொல்லப்போனால் இரண்டாம் தலை முறையாகிய நாங்கள் தானாகவே இந்த தேசத்தில் வளர்ந்து வந்தோம். பேச விரும்பிய அனைத்து விடயங்களையும் பெற்றோருடன் பேச முடியாது என்பதை காலப்போக்கில் விளங்கிக் கொண்டோம். எங்கள் அனைவருக்கும் இருந்த ஒரு தர்மசங்கடம் என்னவென்றால் இரு கலாசாரங்களிற்குள்ளும் வாழ வேண்டிய கட்டாயம். இரண்டு வேடங்களில் நடித்துக் கொண்டிருந்தோம். ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக சுற்றிக் கொண்டேயிருந்தோம்.**

அம்மா வீட்டு வேலைகளையும் பார்த்து, வேலைக்கும் சென்று கொண்டிருந்தார். அப்படியானால் நாங்கள் எப்படி வளர்ந்தோம்?

சுருக்கமாக சொல்லப்போனால் இரண்டாம் தலை முறையாகிய நாங்கள் தானாகவே இந்த தேசத்தில் வளர்ந்து வந்தோம். பேச விரும்பிய அனைத்து விடயங்களையும் பெற்றோருடன் பேச முடியாது என்பதை காலப்போக்கில் விளங்கிக் கொண்டோம். எங்கள் அனைவருக்கும் இருந்த ஒரு தர்ம சங்கடம் என்னவென்றால் இரு கலாசாரங்களிற்குள்ளும் வாழ வேண்டிய கட்டாயம். இரண்டு வேடங்களில் நடித்துக் கொண்டிருந்தோம். ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக சுற்றிக் கொண்டேயிருந்தோம்.

எனது பாடசலையில் ஒரே ஒரு தமிழ் மாணவன் நான் மட்டுமே. ஏனைய எனது வயதையொத்த தமிழர்களை காண்பதென்பது மிகவும் அரிதாக இருந்தது. இந்நாட்டு மாணவர்களுடன் பாடசாலை நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வெளியில் சுற்றுவது அன்றைய காலகட்டத்தில் தமிழர்களிடத்தில் விரும்பப்படாத ஒன்று. வெள்ளைக்காரர்களுடன் சுற்றினாலே அந்த 'நல்லவன்' என்ற அடையாளத்திற்கு பாதகமாக அமைந்துவிடும். ஒருசில விதிவிலக்குகளும் இருக்கத்தான் செய்தன. தங்களின் பிள்ளைக்கு தமிழ் சரியாப் பேசவராது, அவன் சோறு சாப்பிடுவதில்லை, தமிழர்களுடன் பெரிதாகப் பழகுவதில்லை என்று சொல்லி பெருமைபட்டுக் கொண்டார்கள்.

எங்களுடன் படித்த சக மாணவர்களின் பொழுது போக்கு என்பது தமிழ் கலாசாரத்திற்கு முரணான ஒன்றாக இருந்தது. அவர்கள் வெளியில் சென்று இரவு நேரங்களில் வீடு திரும்புவார்கள். சிறு வயதிலயே குடிப்பழக்கத்திற்கு ஆளாகியிருந்தார்கள் (இன்றைய தமிழ் இளைஞர்களிடத்தில் இதுவும் சாதரண ஒன்றாக மாறிவிட்டது). மற்றும் எனது சக மாணவர்களின் கூட்டத்தில் பல மாணவிகளும் இருந்தார்கள். பெண்களுடன் பேசியே இருக்காத எனக்கு அவர்களுடன் எப்படி நடந்துகொள்வது என்பதும் தெரிந்திருக்கவில்லை. எனக்கு தெரிந்ததெல்லாம் தமிழ் சினிமாவின் நடைமுறை தான். அது இந்நாட்டு பெண்களிடம் எடுபடாது என்பதை நான் குறுகிய காலத்திற்குள்ளேயே புரிந்துகொண்டேன். கிராமத்திலிருந்து நகரத்திற்குள் வரும் ஒரு இளைஞனை நகரவாசிகள் எப்படி அணுகுவார்களோ அவ்வாறே சக மாணவிகளும் எங்களை பார்த்தார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக சில விதிவிலக்குகளும் இருந்தன.

இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தாற் போல் எங்களிற்கு அறிமுகமாகியது இணையத்தளம். எங்களின் முன்னைய சந்ததிக்கு இணையத்தளம் பற்றிய அறிவு இல்லாமல் இருந்தது எங்களிற்கு ஒரு வரப்பிரசாதம். பெற்றோர் பூர்த்தி செய்யாத அல்லது பூர்த்தி செய்யமுடியாத வெற்றிடத்தை இணையம் நிரப்பியது.

இணையங்களில் எனது நேரத்தை அதிகமாக 'தமிழ் சற்' தளங்களிலே செலவிட்டுக் கொண்டிருந்தேன். இணையம் எனது பாலுணர்விற்கான கதவுகளை திறந்துவிட்டது. என்னைப் போலவே வெளியில் ஆயிரமாயிரம் இரண்டாம் தலைமுறை உள்ளது என்பதை அறியமுடிந்தது. பேசுவதற்கு பல பலனுள்ள விடயங்கள் இருந்தாலும் எங்களுடைய உரையாடல்கள் எப்பொழுதும் காதல் பற்றியதாகவே இருந்தது.

இப்படி எனது நட்பிற்குள் வந்த ஒரு முதல் பெண்ணின் கதையை இங்கே எழுதுகின்றேன்.

என்னைவிட அவளிற்கு மூன்று வயது அதிகம். எனவே எங்களிற்குள் நட்பைத் தவிர வேறெதுவும் இருக்கப் போவதில்லை என்பது தொடக்கம் முதலே தெளிவாகியது. அதுமட்டுமன்றி அவள் காதலித்தவனுடன் வீட்டை விட்டு வந்து திருமணம் செய்யாமல் வாழ்ந்து கொண்டிருந்தாள். இப்படி வெளியில் வந்த பெண்களை பெற்றோரும், சமுதாயமும் ஒதுக்கியே வைத்திருந்தது. அவளின் காதலன் அதனை பின்னர் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான். காலப் போக்கில் அவனது சுயரூபம் அவளிற்கு தெரிய வந்தது. எப்பொழுதும் வன்முறைக்குள்ளேயே தனது வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தாள். பெற்றோரிடமும் செல்லமுடியாமல், அவனை திருத்தவும் முடியாமல் விரக்தியில் இருந்த காலத்தில் அவளது 21 ஆவது வயதில் என்னை இணையத்தில் சந்தித்தாள்.

முதலில் நாங்கள் இருவருமே முகமூடிளை அணிந்துகொண்டு தான் இணையத்தில் பழகிக் கொண்டோம். அவளின் அடையாளம் தெரியவரும் பட்சத்தில், அவளிற்கு அது ஆபத்தாக முடியலாம் என்று நினைத்திருந்தாள். பல மாதங்களிற்கு பின்னர் அவள் என்னை முழுமையாக நம்பத் தொடங்கியிருந்தாள். அவளைவிட நான் 3 வயது இளையவன் என்பதால் என்னை 'குட்டித் தம்பி' என்றே அழைத்து வந்தாள்.

அவளின் காதலனால் அனுபவிக்கும் கொடுமைகளை ஏன் பொலிசிடம் சொல்லவில்லை என்று ஒருமுறை கேட்டேன். இதனை அவள் பலமுறை செய்திருக்கின்றாள். இதனால் அவன் தனது பெற்றோருக்கும் சகோதரர்களிற்கும் பிரச்சனை கொடுக்கின்றான். என்னால் அவர்கள் இந்த சமூகத்தில் மேலும் தலைகுனிய விரும்பவில்லை என்றாள்.

(இன்னும் வளரும்...)




தொகுப்பு:
சி. விமலன்



# சாதனைக்கு வந்த சோதனை...

விளையாட்டு உணர்வு கிரிக்கெட் வீரர்களிடம் மாத்திரம் அல்லாமல் நாட்டின் கிரிக்கெட் சபைகளுக்கும் இருத்தல் வேண்டும் என்பதை வெளிப்படுத்தியுள்ளது, அவுஸ்ரேலிய அணிக்குப் பந்துவீச்சு ஆலோசகராக முரளிதரன் நியமிக்கப்பட்ட பிரச்சினை. இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் சுமதிபாலவும் அவர் சார்ந்த சிலரும் முரளி விடயத்தில் மாத்திரம் அல்லாமல் மகேல இங்கிலாந்துக்கு துடுப்பாட்ட ஆலோசகராக இருந்த பொழுதும் நாட்டுக்குத் துரோகம் இழைக்கும் செயற்பாடாகவே அதனைக் கருதியிருந்தனர்.

சர்வதேச கிரிக்கெட் சபை, அங்கத்துவ நாட்டு கிரிக்கெட் சபைகளின் ஒத்துழைப்பின் மூலமே கிரிக்கெட்டின் வளர்ச்சிக்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் ஒவ்வொரு நாட்டிலுள்ள பிரபல வீரர்களையும் பரஸ்பரம் பயன்படுத்திக் கொள்வதுகூட அதன் ஆரோக்கியமான அம்சத்தின் ஒரு பகுதியே. பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் இங்கிலாந்து அணி சக்லைன் முஸ்ராக்கை பந்துவீச்சு ஆலோசகராகப் பயன்படுத்தியதில் எந்தவொரு சர்ச்சையும் ஏற்பட்டிருக்கவில்லை என்பது விளையாட்டு உணர்வின் புரிதலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆனால் இலங்கை கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகள் அந்தக் குறிக்கோளுக்கு எதிரானதாகவே அமைந்துள்ளன.

முரளியுடன் சமகாலத்தில் விளையாடிய இந்திய வீரர்களான ராவிட் பத்தொன்பது வயதுக்குட்பட்ட இந்திய அணிக்கும், கும்ளே இந்தியாவின் தேசிய அணிக்கும் பயிற்சியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை சச்சின், கங்குலி, லக்ஸ்மன் ஆகிய மூவரும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கிரிக்கெட் ஆலோசனைக் குழு உறுப்பினர்களாகவும் விளங்கி வருவது ஓய்வு பெற்ற முன்னணி வீரர்களுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு சபை உரிய மரியாதையை அளித்துள்ளதைப் புலப்படுத்தியது. இதுபோன்ற கௌரவத்தினை இலங்கையின் சாதனை வீரர்களுக்கு கிரிக்கெட் சபை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. கடந்த காலங்களில் இலங்கை கிரிக்கெட் சபையுடன் சங்ககார, மகேல போன்றவர்கள் முரண்பட்டுக் கொண்டமை அவர்களுக்கான பதவிகள் கிடைக்காமல் போனதற்கான பின்னணியாக இருப்பினும் முரளி இலங்கை கிரிக்கெட் சபையோடு எந்தவொரு முரண்பாட்டினையும் ஏற்படுத்திக் கொண்டவரல்லர்.

ஐ.பி.எல் போட்டிகளில் சண் றைசர்ஸ் அணிக்காகவும் அவுஸ்ரேலிய அணிக்காகவும் முரளி பந்துவீச்சு ஆலோசகராக விளங்கியதன் மூலம் ஒரு சமிக்ஞையை இலங்கை கிரிக்கெட் சபைக்கு வெளிப்படுத்தி இருந்தாலும் அதனைப் புரிந்து கொள்ளாதது யார் தவறு? எனவே வீரராகத் தேவைப்பட்ட முரளியின் பங்களிப்பு பயிற்சியாளராகத் தேவைப்படாததன் அரசியலைத் தவிர்த்துப் பார்த்தால் முரளி எவ் வகையிலும் புறமொதுக்கக் கூடியவரல்ல.

இந்த விடயத்தில் தற்போது மன உளைச்சலில் இருக்கும் முரளிக்கு சர்வதேச கிரிக்கெட் சபையின் புகழ் பூத்தவர்களின் பட்டியலில் (ICC Hall of Fame) அவரது பெயரும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை சற்று ஒத்தடமாக இருக்கும் எனலாம்.

2016 ஒலிம்பிக் போட்டிகள் நேற்றைய தினம் (ஓகஸ்ட் - 5) பிறேசிலில் கோலா கலமாக ஆரம்பித்துள்ளன. பயங்கர வாத அச்சுறுத்தல், ஸிகா வைரஸ், ஊக்க மருந்து பாவனையில் வீரர்கள் அதிகம் சிக்குண்டமை, போட்டி நடைபெறும் இடங்களில் அதிகரித்த குற்றச்செயல்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகளில் தலையாய பிரச்சி

## தடைகளைத் தாண்டி...




னையாக ஸிகா வைரஸ் பற்றிய அச்சமே வீரர்களிடையேயும் ரசிகர்களிடையேயும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம் ஸிகா வைரஸினால் எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்று அறிவித்துள்ள நிலையிலும் பல விளையாட்டு வீரர்கள் அதனைக் காரணம் காட்டி ஒதுங்கி உள்ளனர்.

குறிப்பாக ரெனிஸ் போட்டிகளைப் பொறுத்தவரையில்பெடரர், நடால் போன்றவர்கள் ஏற்கனவே காயம் காரணமாக விலகியுள்ள நிலையில் செக்.குடியரசின் தோமஸ் பேர்டிச், கனடாவின் மிலோஸ் றாவோனிஸ் போன்ற முன்னணி வீரர்களும் ருமேனியாவின் சிமோனா ஹலெப், பெலாறசின் விக்டோறியா அசரென்கா போன்ற முன்னணி வீராங்கனைகளும் போட்டியில் இருந்து விலகியமை போட்டிகளைச் சோபையிழக்க வைக்கலாம்.

அதேபோன்று கோல்வ் விளையாட்டு வீரர்கள் இருபது பேர் வரையிலும் ஸிகா வைரஸினால் விலகி உள்ளமையும் தெரிய வருகிறது. இதில் என்ன சோகம் என்றால் பல ஆண்டுகளாக கோல்வ் விளையாட்டை ஒலிம்பிக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்தும் ஒலிம்பிக்கை நடத்தும் நாடு ஐந்து விளையாட்டுக்களைப் புதிதாகச் சேர்ப்பதற்கு உரிமை உள்ளதென்ற வகையில் முதன்முதலாக கோல்வ் விளையாட்டு இம்முறை தான் ஒலிம்பிக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. அந்தவகையில் நீண்டநாள் கனவு பலித்துள்ள நிலையில் அதனை அனுபவிக்கும் கொடுப்பனவை இவர்கள் இழந்து நிற்கிறார்கள்.

வெற்றி தோல்விக்கு அப்பால் பங்குபற்றுதலே விளையாட்டின் தாரகமந்திரம் என்பதை அறிந்தாலும் மேற்படி வீரர்களின் மனோநிலை உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பங்கேற்பதற்குத் தயாராக இல்லை என்பதாகவே உள்ளது. என்னதான் சர்வதேச ஒலிம்பிக் நிர்வாகமும் பிறேசிலும் ஏற்பாடுகளைப் பூரணமாகச் செய்திருந்தாலும் அவர்களையும் மீறி சில சங்கடங்கள் நிகழ்ந்து விடுகின்றன என்பதற்கு ஸிகா வைரஸ் அச்சுறுத்தல் ஒரு சான்று எனலாம்.



## இரு துருவங்கள்

உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு பீலே, மரடோனா போன்ற பெயர்களை அறிமுகப்படுத்தத் தேவையில்லை. பிறேசில் வீரரான பீலே 1958, 1962, 1970 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணங்களையும், அதுபோல ஆர்ஜென்ரீனா வீரரான மரடோனா 1986 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத்தையும் தத்தம் அணிகளுக்காக வென்று கொடுத்தவர்கள். சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் சென்ற நூற்றாண்டின் சிறந்த வீரர்கள் தெரிவில் உறுப்பினர்களாலும் பத்திரிகையாளர்களாலும் பயிற்சியாளர்களினாலும் உத்தியோகபூர்வமாகப் பீலே தெரிவு செய்யப்பட்டாலும் மரடோனாவின் பெயரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற சர்ச்சையின் பிற்பாடு இணையத்தின் வழி நடத்தப்பட்ட தேர்தலின் மூலம் மரடோனாவும் வெற்றி பெற்றதனால் இருவரையும் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்திருந்தார்கள். அன்றிலிருந்தே இவர்கள் இருவருக்கிடையிலான பனிப்போரும் அவ்வப்போது நடைபெற்று வருவதுண்டு.

இவர்களில் பீலே குறித்து pele – Birth of Legend என்ற படம் சில மாதங்களுக்கு முன்னர் ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் வெளிவந்ததைத் தொடர்ந்து தற்போது ஆர்ஜென்ரீனா தொலைக்காட்சி ஒன்று மரடோனாவின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு நூறு பகுதிகளைக் கொண்ட தொலைக்காட்சித் தொடர் ஒன்றை ஒளிபரப்புவதற்கு முன் வந்துள்ளது. படத்தில் நடிக்கும் நடிகர்கள் மற்றும் வெளியீட்டுத் திகதி போன்ற விடயங்கள் வெளியிடப்படாத நிலையில் இதற்கான ஒப்பந்தத்தில் மரடோனா கையெழுத்திட்டுள்ளார். "புகழ்பெற்ற வீரரான அவரின் வாழ்க்கையைப் படமாக்குவது கடும் சவாலானதாகவே இருக்கும்" என்கிறார் இத் தொடர் ஒளிபரப்பாகவுள்ள தொலைக் காட்சியின் பணிப்பாளரான தோமஸ் ஜான்கெல்விச்.

உண்மைதான் பீலேயின் வாழ்க்கையில் கரும்புள்ளிகள் என்று குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு எதுவுமே இல்லாத நிலையில் அதனைப் படம் பிடிப்பதில் சிக்கல் எதுவும் இல்லை. ஆனால் மரடோனா புகழின் உச்சத்தில் இருக்கும் போதே போதைவஸ்து பாவனைக்கு அடிமையாகிப் பின்னர் அதிலிருந்து மீண்டவர் என்ற வகையில் இதனைச் சமநிலையுடன் சித்திரிப்பதென்பது இலகுவான காரியமாக இருக்கப்போவதில்லை.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 06.08.2016 அன்று
107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.